இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 191 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 09 – புதன்கிழமை 21 பிப்ரவரி 2024 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 191: Thiruvalluvar Year - 2055 - Maasi 09 - Wednesday 21 February 2024 - Madurai 16 Pages ₹ 5.00

## ரூ.16,500 கோடியில் பயிர்க்கடன்! இயற்கை வள மேம்பாட்டுக்கு ரூ.7,000 கோடி!

## 15,280 கிராமங்களில் 'ஒரு கிராமம் ஒரு பயிர்' திட்டம்! உணவு மானியத்திற்கு ரூ.10,500 கோடி! ரூ.1,775 கோடியில் பயிர்க் காப்பீடு!

# வேளாண் மக்களின் வாழ்வை மேம்படுத்துவதே நோக்கம்!

## பேரவையில் ரூ.42,281.88 கோடியிலான வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உறுதி!

**சென்னை, பிப். 21 -**

**தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்று 2024 - 2025ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையை வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்கள் தாக்கல் செய்து பேசினார். அவர் தனது பேச்சில், "வேளாண் மக்களின் வாழ்வை மேம்படுத்துவதே தமிழ்நாடு அரசின் நோக்கம்" என்று குறிப்பிட்டு, அடுக்கடுக்கான பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்.**

வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்**
**(திருக்குறள்-1033 )**

உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர்; ஏனென்றால், மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு வாழ வேண்டியிருக்கிறது.

மற்ற சமூகங்கள் உழவர்களையும் உழைப்பாளர்களையும் சமூக நிலையில் கடைசி இடத்தில் வைத்திருக்கும்போது, நம் தமிழ்ச் சமூகம் உழவர்களை உச்சத்தில் வைத்து உச்சி முகர்ந்ததையும், 'உண்டி கொடுத்தோரை உயிர் கொடுத்தோராகப்' போற்றியதையும் நம் தமிழ் இலக்கியங்கள் தெள்ளெனக் காட்டுகின்றன. இதனை ஒட்டியே, இந்த அரசும் உழவர்களை உச்சத்தில் வைத்து, வேளாண்மைக்கெனத் தனி நிதி நிலை அறிக்கையினைத் தயார் செய்து சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. உழவர்கள் வாழ்வு வளம்பெற வேண்டும் என்ற நோக்கோடு செயல்படும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, இத்துறையின் 2024-2025ஆம் ஆண்டிற்கான தனி வேளாண் நிதிநிலை அறிக்கையினை இம்மாமன்றத்தில் அளிப்பதில் பெருமிதம் கொள்கின்றேன்.

முதன்முறையாக ஒன்றை உருவாக்குவது கடினம்; அதை வளர்ந்திடச் செய்வது எளிது; பாதை அமைப்பது கடினம்; பயணம் செய்வது எளிது. நாங்கள் தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லாத வேளாண்மை நிதி நிலை அறிக்கையை உருவாக்கி அளித்து, எண்ணற்ற முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். இந்த வேளாண் நிதிநிலை அறிக்கையானது உழவர்தம் வாழ்க்கையை மேன்மேலும் வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என்று உறுதியாக நம்புகிறேன்.

**"மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும்கை**
**ஆழி தரித்தே அருளும்கை சூழ்வினையை**
**நீக்கும்கை என்றும் நிலைக்கும்கை நீடூழி**
**காக்கும்கை காராளர் கை"**

ஏர்ப்பிடித்து உழவு செய்யும் உழவரின் கைகளே, மக்களின் பசிப்பிணியைப் போக்கி நீடூழி வாழ வைக்கும் கைகள் என்று கம்பர் உழவுத் தொழிலை மிகவும் உயர்த்தி **"திருக்கை வழக்கம்"** என்ற நூலில் சிறப்பிக்கிறார்.

முழுமுதல் காப்பியமாம் சிலப்பதிகாரத்தில், வேளாண்மை பற்றியும், அதன் நுட்பங்கள் பற்றியும் விளக்கியுள்ளார் இளங்கோவடிகள். மன்னராட்சியும், மக்கள் பண்பாடும் நிலைக்க வேண்டுமாயின், அந்நாடு வேளாண்மையில் சிறப்புற விளங்க வேண்டும். மன்னனும், மக்களும் உழவர்களை எதிர்நோக்கியே வாழ்கிறார்கள் என்பதனை,

**"இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்**
**உழவிடை விளைப்போர்"**
**(சிலப்பதிகாரம் - நாடுகாண்காதை 150)**

என்று குறிப்பிடுகிறார்.

இதைத்தான், அமெரிக்காவின் முதல் அதிபரான ஜார்ஜ் வாஷிங்டன் அவர்களும், "மனிதன் ஆற்றக்கூடிய தொழில்களிலேயே மிகவும் நலமிக்கதும், பயனுள்ளதும், உன்னதமானதுமான தொழில் வேளாண்மையாகும்" (Agriculture is the most healthful, most useful and most noble employment of man) என்று வழிமொழிகிறார்.

அல்லும் பகலும், அயராது உழைத்து, உலகோரின் அச்சாணியாகத் திகழும் மேன்மையுடைய, வேளாண் பெருங்குடி மக்களைப் போற்றும் விதமாக, வேளாண்மை கடந்துவந்த பாதைகளை இம்மாமன்றத்தில் பகிர்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நமது வரலாற்று ஆவணங்களில் விலங்குகளை வேட்டையாடுதல், கால்நடைகளை வளர்த்தல் ஆகியவற்றைக் கற்கால மனிதர்கள் மேற்கொண்டதற்கான தகவல்களோடு **"மெய்திரி வகையின் எண்வகை உணவில் செய்தியும் வரையார்"** என்று தொல்காப்பியர் கூறியுள்ளதிலிருந்து நெல், புல்லரிசி, காடைக்கண்ணி (சிறுதானியம்), உளுந்து, அவரை போன்றவற்றைப் பயிரிட்டுள்ளதற்கான ஆதாரங்கள், ஆய்வாளர்களின் ஆய்வுக் குறிப்புகளிலிருந்து காணமுடிகின்றது. பின்னர், பட்டறிவாலும், படிப்பறிவாலும் பயிர் வளர்ப்பு தொடர்பான நுணுக்கங்கள் பெறப்பட்டுள்ளதையும் அறிய முடிகின்றது.

மேலும், நம் முன்னோர்கள் பயிர் செய்வதும், உணவு உண்பதும் என்று மேலோட்டமான வாழ்வை வாழாது, ஒவ்வொரு செயலுக்கும் முக்கியத்துவம் அளித்து, ஒவ்வொன்றையும் நுணுகி ஆராய்ந்து, நுட்பமாகக் கண்டறிந்து, தங்களுடைய வேளாண் அறிவை வளர்த்துக் கொண்டிருப்பதை சங்க இலக்கியங்கள் மூலம் மிக எளிதாக நாம் உணரலாம்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (20.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் 2024–2025ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் நிதிநிலை அறிக்கையை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்வதற்கு முன்பாக, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா உள்ளார்.




உணவு உற்பத்தியின் உன்னதத்தை உலகப் புகழ்பெற்ற பசுமைப்புரட்சி விஞ்ஞானி **பாரத ரத்னா எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள், "எதிர்காலம் தானியங்களை அதிகம் கொண்ட நாடுகளுக்கு உரியதே தவிர, துப்பாக்கிகளை அதிகம் கொண்ட நாடுகளுக்கு அல்ல"** (The future belongs to nations with grains and not guns) என்று தெரிவித்துள்ளார்.

வேளாண் பெருங்குடி மக்கள், தங்களின் உழைப்பிற்கேற்ற பலன்களைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தில், வேளாண்மையை வருமானம் ஈட்டக்கூடிய தொழிலாக மாற்றி, உழவர்களின் நலனைப் பேணிக்காக்க நேசக்கரத்துடன் பல உன்னதத் திட்டங்களை வழங்கி, நடைமுறைப்படுத்தி வருபவர் நமது **தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.**

வேளாண்மைத் துறையை, **"வேளாண்மை - உழவர் நலத்துறை"** எனப் பெயர் மாற்றம் செய்து, வேளாண் உற்பத்தியுடன் நின்று விடாமல், உழவர் பெருமக்களின் நலனிற்கு முக்கியத்துவம் அளித்தவரும் நம்முடைய **தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான்.**

### வேளாண் தொழிலில் சவால்களை எதிர்கொண்டு வரும் விதம்!

வேளாண்மையில் தற்போதுள்ள சவால்களைச் சாதனைகளாக மாற்றி, அதன் மூலம் விவசாயிகளின் நலனைப் பேணிக் காத்திட, பல அரிய திட்டங்கள் வேளாண்மைஉழவர் நலத்துறையால் கடந்த மூன்று ஆண்டுகளில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேளாண்மைக்கான தொலை நோக்குத் திட்டங்களைச் செயல்படுத்தியதன் காரணமாக 2020-2021இல் 152 இலட்சம் ஏக்கராக இருந்த மொத்த சாகுபடி பரப்பு, 2022-2023ஆம் ஆண்டில் 155 இலட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது.

அரசால் செயல்படுத்தப்பட்ட சீர்மிகு திட்டங்களால், மகிழ்ச்சி அடைந்த விவசாயிகள், ஊக்கத்துடன் செய்திட்ட சாகுபடியால், 2022-2023ஆம் ஆண்டில் 116 இலட்சத்து 91 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உணவு தானிய உற்பத்தி அதிகரித்துள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளில் நிறைவேற்றப்படாமல் கிடப்பிலிருந்த பாசன மின் இணைப்பிற்கான விண்ணப்பங்கள், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, நடப்பாண்டிலும் மேலும் 50,000 மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வேளாண் தொழிலை மேற்கொள்ள இளைஞர்களிடம் ஆர்வம் ஏற்படுத்துவது மிகவும் அவசியம். இளைஞர்கள்தான், எந்த ஒரு நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கும் முதுகெலும்பாவர். வேளாண் சார்ந்த தொழில்களின் முன்னேற்றத்தில் இளைஞர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும் என்பதால், 2021-2022ஆம் ஆண்டு முதல் 268 வேளாண் பட்டதாரிகள் தேர்வு செய்யப்பட்டு தலா ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டு, அக்ரி கிளினிக் உள்ளிட்ட வேளாண் சார்ந்த தொழில்களைத் தொடங்கி நடத்தி வேளாண்மைக்கு வலு சேர்த்து வருகின்றனர்.

வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைத்திட நம்முடைய அரசு பல்வேறு சீரிய முயற்சிகளை எடுத்துள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் குறைந்தபட்ச ஆதரவு விலைக்குமேல் சன்ன இரகத்திற்கு குவிண்டால் ஒன்றிற்கு 107 ரூபாயும், சாதாரண இரகத்திற்கு குவிண்டால் ஒன்றிற்கு 82 ரூபாயும் ஊக்கத் தொகையாக அளிக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு, 45 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பயறுவகைகள், கொப்பரைத் தேங்காய் ஆகியவையும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுவதால் விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகள் பாதுகாக்கப்படுகின்றனர்.

கடந்த ஆண்டு, கரும்பிற்கு ஒரு மெட்ரிக் டன்னிற்கு ஊக்கத்தொகையாக 195 ரூபாய் வீதம் 260 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைத்திட ஏதுவாக உழவர் சந்தைகள், மின்னணு சந்தைகள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஆகியவை செயல்படுகின்றன. இதனால், வேளாண் பெருங்குடி மக்களின் விளைபொருட்களுக்கு நல்ல விலை அளிக்கப்பட்டு, அவர்களுக்கான வாய்ப்புகள் மேன்மேலும் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயிர் சாகுபடியில், இடுபொருட்களுக்கான செலவினத்தைவிட, வேளாண் பணிகளுக்கான ஊதியம் தற்போது அதிகமாக உள்ளது. இதனை எதிர்கொள்ள, வேளாண் பணிகளுக்குத் தேவையான அனைத்து வகையான வேளாண் இயந்திரங்களும், கருவிகளும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், வேளாண் இயந்திர வாடகை மையங்கள் மூலமாக வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் வாடகைக்குப் பெற்றுப் பயனடையும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 21-02-2024

# தாயுமானவரான தமிழ்ப்புதல்வன்

‘எல்லார்க்கும் எல்லாம்’ என்பதை தனது ஆட்சியின் இலக்காகவும் இலக்கணமாகவும் கொண்டு செயல்பட்டு வரும் திராவிட மாடல் முதலமைச்சரின் 2024-25 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை என்பது, **‘அனைவருக்குமான அறிக்கை’**யாக அமைந்திருக்கிறது.

‘என்ன இல்லை இதில்?’ என்று சொல்லத் தக்கதாக அமைந்துள்ளது. ‘எந்தத் துறை இல்லை இதில்?’ என்று கேட்கத் தக்கதாக அமைந்துள்ளது. ‘எந்த தரப்பு தான் இல்லை இதில்?’ என்ற கேள்விக்கான முழுமையான பதிலாக அமைந்துள்ளது இந்த அறிக்கை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் போல, **‘இந்த நிதி நிலை அறிக்கையில் எங்கள் இதயம் இருக்கிறது’** என்று சொல்லத் தக்க வகையில் 2024-25 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை தயாரித்து நேற்றைய தினம் சட்டமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் நிதித் துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்கள்.

- **குடிசை இல்லாத் தமிழ்நாட்டை உருவாக்குவதற்காக 6 ஆண்டுகளில் 8 லட்சம் வீடுகள் கட்டும் கலைஞரின் கனவு இல்லம்.**
- **வறுமை இல்லாத் தமிழ்நாட்டை உருவாக்குவதற்காக 5 லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கும் தாயுமானவர் திட்டம்.**
- **அரசுப் பள்ளிகளில் பயின்று கல்லூரியில் சேரும் மாணவர்களுக்கு 1000 ரூபாய் வழங்கும் தமிழ்ப்புதல்வன்.**
- **ஒரு லட்சம் கல்லூரி மாணவர்க்கு கல்விக் கடன்.**
- **வடசென்னையின் மேம்பாட்டுக்கு 1000 கோடி.**
- **பழங்குடியினர் வாழ்விட மேம்பாட்டுக்கு 1000 கோடி.**
- **மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 35 ஆயிரம் கோடி கடன்.**
- **7.5 சதவிகித உள் ஒதுக்கீட்டில் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கான முழுச் செலவையும் அரசே ஏற்கும்.**
- **அடுத்த இரண்டு ஆண்டுகளில் 50 ஆயிரம் பேருக்கு அரசுப் பணிகள்.**
- **20 கோடியில் கைவினைஞர்கள் மேம்பாட்டுத் திட்டம்**
- **1000 ஆண்டு பழமையான கோவில்கள் புதுப்பிப்பு**
- **ஆதி திராவிட இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் கடன் திட்டம்.**
- **அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்**
- **கடலோர வளங்கள் மீட்பு**
- **கடற்கரைகள் மேம்பாடு.**

இப்படி அனைத்து வகையினரையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது நிதி நிலை அறிக்கை.

**அனைத்து ஊர்களுக்கும் நகரங்களுக்கும் உள்ளடக்கியதாக இந்த அறிக்கை அமைந்துள்ளது. திண்டுக்கல், நாமக்கல், பெரம்பலூர் மாவட்டங்களில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள். கோவையில் தகவல் தொழில்நுட்ப பூங்கா, வடசென்னைக்கு வளர்ச்சி திட்டங்கள். சென்னை பிராட்வே பேருந்து நிலையம். சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே நகர்ப்புற சதுக்கம். பூவிருந்தவல்லியில் திரைப்பட நகரம். சென்னையில் ஆட்டிசம் பாதிக்கப்பட்டோருக்கான மையம். கீழடியில் அருங்காட்சியகம். கோவையில் நூலகம், அறிவியல் மையம். தூத்துக்குடியில் விண்வெளி தொழில், உந்து சக்தி பூங்கா. கோவை,மதுரை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி ஆகிய நகரங்களில் ஆயத்த தொழில் பூங்காக்கள். முட்டுக்காட்டில் கலைஞர் பன்னாட்டு அரங்கம். கரூர், ஈரோடு, விருதுநகரில் சிறு ஜவுளி பூங்காக்கள். சென்னையில் கைவினைப் பொருட்கள் வணிக வளாகம். திருப்பரங்குன்றம், திருநீர்மலை கோவில்களில் ரோப் கார்கள். மெரினா, கடலூர், மரக்காணம், காமேஸ்வரம், கட்டுமாவடி, அரியமான், காயல் பட்டினம், கோடாவிளை கடற்கரைகள் மேம்பாடு. சென்னை மெட்ரோ ரயிலுக்கு 12 ஆயிரம் கோடி ஒதுக்கீடு.கல்லணைக் கால்வாய் மேம்பாடு. தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடியில் நியோ டைடல் பூங்காக்கள். மதுரை, திருச்சியில் டைடல் பூங்காக்கள். தஞ்சையில் சிப்காட் தொழில் பூங்கா. இப்படி தமிழ்நாட்டின் அனைத்து ஊர்களையும் உள்ளடக்கியதாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது.**

தமிழ்நாட்டை எந்த நிலைமையில் அ.தி.மு.க. ஆட்சி வைத்து விட்டுப் போனது என்பதை அனைவரும் அறிவார்கள். கடந்த பத்தாண்டு காலத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்படி நடத்துகிறது என்பதையும் மக்கள் அனைவரும் அறிவார்கள். நிதியைச் சூறையாடி விட்டுப் போனது அ.தி.மு.க. நிதி மூலதன வருவாய் பாதையை அடைத்து விட்டது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இத்தகைய நெருக்கடி நிலையில்தான் இத்தகைய மேன்மையான நிதிநிலை அறிக்கை வெளியாகி இருக்கிறது.

நிதி இல்லை நிதி வரவில்லை என்ற ‘பஞ்சப் பாட்டை’ பாடிக் கொண்டு இருக்காமல், நெஞ்சுயர்த்தி நிற்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். நம்முடைய வளங்களின் மூலமாக, அதனைப் பயன்படுத்திக் கொள்ளும் திறன்களின் மூலமாக எல்லார்க்குமான நிதிநிலை அறிக்கையை தயாரித்து வழங்கி விட்டார் நிதித் துறை அமைச்சர் அவர்கள்.

**சமூகநீதி கடைக்கோடி மனிதருக்கும் நல வாழ்வு உலகை வெல்லும் இளைய தமிழகம் அறிவுசார் பொருளாதாரம் சமத்துவ நோக்கில் மகளிர் நலம் பசுமை வழிப் பயணம் தாய்த் தமிழும் தமிழர் பண்பாடும்** ஆகிய ஏழு இலக்குகளைக் கொண்டதாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. இலக்கு, செயலைத் தீர்மானிக்கும். இலக்கு, பயணத்தை தீர்மானிக்கும். இலக்கு, அதற்குத் தேவையானதை தகவமைத்துக் கொள்ளும். அந்த வகையில் இந்த ஏழு இலக்குகளும், அதற்குத் தேவையானதை தகவமைத்துக் கொள்ளும் வகையில் இந்த அறிக்கை அமைந்துள்ளது.

‘செய்க பொருளை’ என்கிறான் வள்ளுவன்.

**செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்**

**எஃகதனிற் கூரிய தில்** என்கிறார் வள்ளுவர். பகைவரின் செருக்கை அழிக்கும் தகுதியான கருவி பொருள்தான் என்கிறார் அறம் பாடிய வள்ளுவர். **தாயுமானவராய் மாறிய தமிழ்ப்புதல்வன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனைத் தான் தமிழ்நாட்டு மக்களுக்கு அரசு இயலாக மாற்றிச் செய்து வருகிறார்.**

## இராயபுரம் சிற்பி ம.சிங்காரவேலர் பிறந்தநாள்!

சென்னை. பிப். 21 -

இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் சிந்தனைசு சிற்பி ம.சிங்காரவேலர் பிறந்தநாளை முன்னிட்டு அவருடைய சிலைக்கு சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.இளையஅருணா,

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., இராயபுரம் சட்ட மன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சி 18.2.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் ம.சிங்காரவேலர் மணி மண்டபம் இராயபுரம் சிக்னல் அருகில் நடைபெற்றது.

இராய புரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் தலைமை வகித்தார்.

இதில் கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (20.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் 2024–2025ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் நிதிநிலை அறிக்கையை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்வதற்கு முன்பாக, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா உள்ளார்.

அ.தி.மு.க. அரசின் பட்ஜெட் அறிவிப்புகள் புஸ்வாணமானதை மறந்துவிட்டு

# தி.மு.க. அரசின் பட்ஜெட்டை குறைகூறும் பழனிசாமிக்கு - நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கழகக் கூட்டணிக்கு மக்கள் வெற்றியைத் தந்து பதில் அளிப்பார்கள்!

## நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பதிலடி!

**சென்னை, பிப்.21-**

**“அ.தி.மு.க. அரசின் பட்ஜெட்களில் வெளியான அறிவிப்புகள் புஸ்வாணமானதை மறந்துவிட்ட எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு வெற்றியை அளித்து மக்கள் பதில் அளிப்பார்கள்” என விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட இயக்கக் கோட்பாடுகளைக் கொண்ட, எல்லோருக்கும் எல்லாமுமான, கடைக்கோடி மனிதருக்கும் நல வாழ்வு அளிக்கும் பட்ஜெட்டை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அரசு தாக்கல் செய்திருக்கிறது. இதனால், கொதிநிலைக்குப் போயிருக்கும்எதிர்க் கட்சித் தலைவர் பழனிசாமி, ’கனவு பட்ஜெட்; மக்களுக்குப் பயன் தராது’ எனப் புலம்பியிருக்கிறார்.

’தி.மு.க. அரசுக்கு 8,33,361 கோடி கடன் உள்ளது. கடன் பெற்றே ஆட்சியை நடத்துகின்றனர். இந்தியாவிலேயே கடன் வாங்குவதில் நம்பர் ஒன் அரசாகத் தமிழ்நாடு அரசு உள்ளது’ எனச் சொல்லியிருக்கிறார்.

### அ.தி.மு.க. ஆட்சியில்தான் கடன் சுமை அதிகம்!

எம்.ஜி.ஆர். மாளிகையின் பரணில் தூக்கிப் போடப்பட்டிருக்கும் அ.தி.மு.க.வின் 2011 சட்ட மன்றத் தேர்தல் அறிக்கையைத் தேடி எடுத்துப் படித்துப் பாருங்கள். அதையெல்லாம் படிக்க உங்களுக்கு நேரம் இருக்காது என்பது எங்களுக்குத் தெரியும். அதனால், 8ஆம் பக்கத்தை மட்டுமாவது கொஞ்சம் புரட்டிப் பாருங்கள். ‘ஒரு லட்சம் கோடி ரூபாய் கடனாளி மாநிலம் என்கிற தலைக்குனிவில் இருந்து தமிழ்நாட்டை மீட்டு, தமிழர்கள் தலைநிமிர்ந்து நிற்கவும், தன்மானத்துடன் வாழவும், வழிவகை செய்யப்படும்’ என வாக்குறுதி அளித்திருந்தீர்கள். அந்தத் தேர்தலில் வென்று ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க.தான் தொடர்ந்து 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தது. அம்மையார் ஜெயலலிதா, பன்னீர்செல்வம், பழனிசாமி ஆகியோரின் பத்தாண்டு ஆட்சிகளில் கடன் சுமை என்கிற தலைக்குனிவைப் போக்குவதற்குப் பதிலாக ஒவ்வொரு தமிழரின் தலையிலும் கடனை ஏற்றியதுதான் உங்கள் சாதனை.

நடப்பது மக்களாட்சியா... இல்லை மன்னராட்சியா எனச் சந்தேகம் கொள்ளும் வகையில் சட்டமன்றத்தில் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குத் துதிபாடிக் கொண்டிருந்தார்கள். எதார்த்தத்துக்கு வராமல் ஜெயலலிதா அவர்களையும் பழனிசாமி அவர்களையும் குளிர்விப்பதற்கே தமிழ்நாடு சட்டமன்றம் பயன்பட்டது. 2011 -2012ஆம் ஆண்டில் 1 லட்சத்து 30 ஆயிரத்து 630 கோடி ரூபாயாக இருந்த கடனைப் படிப்படியாக உயர்த்தி 2020 - 2021ஆம் ஆண்டில் 4 லட்சத்து 85 ஆயிரத்து 502 கோடி ரூபாயாகக் கொண்டு வந்து நிறுத்தினீர்கள்.

‘கடன்’ என்ற சொல்லுக்குக் ‘கடமை’ என்ற பொருளும் உண்டு. ஆனால், கடமையைச் செய்யத் தவறிக் கடன் சுமை தொடர்ந்து ஏறிக்கொண்டே போனது தான் பத்தாண்டு அ.தி.மு.க. அரசின் சாதனை. ‘ஒரு மாநில அரசு, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் ஆண்டுக்கு மூன்று விழுக்காட்டுக்கு மேல் கடன் வாங்க முடியாது. அதே சமயம் எந்தக் காலத்திலும் ஒட்டுமொத்தமாக 25 விழுக்காட்டைத் தாண்டக் கூடாது’ என்கிறது மத்திய நிதி கமிஷன். இந்த வரம்பைத் தமிழ்நாடு அரசு இன்னும் தாண்டவில்லை.

ஓர் அரசு கடன் வாங்குவதில் தவறு இல்லை. உலகம் எங்கும் அரசுகள் கடன் வாங்கித்தான் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் அப்படிப் பெறப்படும் கடனைத் திருப்பிச் செலுத்தக் கூடிய திறன் பெற்ற அரசாக இருக்க வேண்டும். அப்படியான அரசாக தி.மு.க. அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ‘வருஷா வருஷம் கடன் வாங்கித்தான் இந்த அரசு வண்டியை ஓட்டிக்கிட்டு இருக்கு’ என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள். பத்தாண்டு அ.தி.மு.க. அரசும் அதைத்தானே செய்து கொண்டிருந்தது. தி.மு.க. அரசின் கடனைப் பற்றிக் கவலைப்படும் பழனிசாமி ஏன் மோடி அரசின் கடனைப் பற்றி வாய் திறக்கவில்லை?

### ஒன்றிய அரசின் கடன் பற்றி பழனிசாமி பேசலாமே!

2014-இல் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் ஆட்சியில் 54 லட்சம் கோடியாக இருந்த கடன் பத்தாண்டில் 205 லட்சம் கோடிக்கு மேல் உயர்ந்திருக்கிறதே அதைப் பேசப் பழனிசாமி அவர்களின் வாய்க்கு யார் பூட்டு போட்டார்கள்?

பா.ஜ.க.வோடு கூட்டணி இல்லை என்பதை மணிக்கொரு முறை சொல்லிக் கொண்டிருக்கும் பழனிசாமி அவர்கள், அது உண்மையென்றால் ஒன்றிய அரசின் கடனைப் பற்றி கர்ஜிக்க வேண்டியது தானே?

பழனிசாமி அவர்கள் அளித்த அந்தப் பேட்டியில் அவரே ஒரு உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார். “அ.தி.மு.க. ஆட்சியை விட அதிக வருவாய் இப்போது தி.மு.க. ஆட்சியில் வருகிறது” எனச் சொல்லியிருக்கிறார். அதாவது வருவாயைப் பெருக்கும் பணியைத் தி.மு.க. அரசு செவ்வனே செய்து வருகிறது என அவரே சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார். கடனை அடைக்க வருவாயைப் பெருக்கும் வழியையும் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு செய்து கொண்டிருக்கிறது. நிச்சயமாகக் கடனை அடைக்கும் வழிகளை இன்னும் சிறப்பாக இந்த அரசு மேற்கொள்ளும்.

’தி.மு.க. அரசின் பட்ஜெட் கானல் நீர் போன்றது; மக்களுக்குப் பயன் தராது’ எனச் சொல்லியிருக்கிறார். அது பயன் தரும் என நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் சரியான தீர்ப்பு எழுதுவார்கள். கடந்த காலங்களில் அ.தி.மு.க.வின் பட்ஜெட்டுகளில் வெளியான அறிவிப்புகள் புஸ்வாணமானதை எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி மறந்துவிட வேண்டாம்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



# கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் திட்டத்திற்கு ரூ.200 கோடி ஒதுக்கீடு!

## வேளாண் நிதி நிலை அறிக்கை... முதல் பக்கத் தொடர்ச்சி

விளைபொருட்களில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைத் தடுத்திட ஏதுவாக, இந்த அரசு, புதிய குளிரூட்டப்பட்ட கிடங்குகள், தானிய சேமிப்புக் கிடங்குகள், உலர்களங்கள் உள்ளிட்ட வசதிகளை அமைத்துக் கொடுக்கும் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### கடந்த மூன்று ஆண்டுகளில் அளிக்கப்பட்ட வேளாண் நிதிநிலை அறிக்கை ஒரு பார்வை!

கடந்த மூன்று ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களும் சரிவரச் செயல்படுத்தப்பட்டு, எதிர்பார்த்த பலன்களைத் தந்துள்ளன. நீண்ட காலத் திட்டங்களுக்கான பணிகள் தகுந்த மேற்பார்வையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வேளாண்மை உழவர் நலத்துறைத் திட்டங்களோடு, உழவர் நலன் தொடர்புடைய பிற துறைத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளில் 7,705 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு, இதுவரை, 23,237 ஏக்கர் பரப்பளவில் வேளாண் பயிர்களும், 3,587 ஏக்கர் பரப்பளவில் பழமரக் கன்றுகள், மரங்கள் முதலியவையும் நடப்பட்டு, தரிசு நிலங்கள் நிரந்தர சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. 1,202 ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகளுக்கு ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள் நிறுவப்பட்டுள்ளதுடன், **1,564 பண்ணைக் குட்டைகளும் அமைக்கப்பட்டு பாசனப் பரப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 4,773 குளங்கள், ஊருணிகள், வரத்துக்கால்வாய்கள் எல்லாம் இத்திட்டத்தின் மூலம் தூர்வாரப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.**




எளியோரையும் ஏற்றமடையச் செய்யவேண்டும் என்ற நோக்கில் ஆதிதிராவிடர், பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், பசுமைக் குடில், ஒருங்கிணைந்த பண்ணையம் போன்ற உயர் மதிப்புத் திட்டங்களுக்கு 20 சதவீதம் கூடுதல் மானியம் வழங்கும் திட்டம் 2022-2023ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றதால், 2022-2023, 2023-2024ஆம் ஆண்டுகளில், அறிவிக்கப்பட்ட 17 கோடி ரூபாயை விடக் கூடுதலாக 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 4,980 ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகள் பலனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் நீர் நிலைகளைத் தூர்வாரியும், புனரமைத்தும், சீரமைத்து, புதிய நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை ஏற்படுத்தி, மழைநீரை வீணாக்காமல் சேமித்து, நிலத்தடி நீரைச் செறிவூட்டியதால், நுண்ணீர்ப்பாசனம் போன்ற தொழில்நுட்பங்களைப் பரவலாக்கி, பாசன நீரின் பயன்பாட்டினை அதிகரித்ததால் **2020-2021ஆம் ஆண்டில் 89 இலட்சத்து ஆறாயிரம் ஏக்கராக இருந்த பாசனம் பெற்ற பயிர் பரப்பு, 2022-2023 ஆம் ஆண்டில் 95 இலட்சத்து 39 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது.**

கடந்த மூன்று ஆண்டுகளில் அளிக்கப்பட்ட வேளாண் நிதிநிலை அறிக்கைகளானவை பாலன், மீளி, மறவோன், திறவோன் போன்று தவழ்ந்து, நடந்து, ஓடிவிளையாடி நம்மை மகிழ்வித்தன. இந்த நான்காம் வேளாண் நிதிநிலை அறிக்கையானது புதுத்தெம்பு கொண்டு பொலிவுடன் தாவிக் குதிக்கும் குழந்தையாக உள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்றாம் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளுக்கும் அரசாணை வெளியிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் பயன்கள் அனைத்தும் தொடர்ந்து உணரப்படுகின்றன. மேலும், 2024-2025ஆம் ஆண்டிற்கும் தகுந்த புதிய திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட உள்ளன.

### உழவர் நலன்!

பருவநிலை மாற்றத்தின் காரணமாக, தமிழ்நாட்டில் புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைப் பேரிடர்கள் ஆண்டுதோறும் நேரிட்டு பயிர் உற்பத்தியையும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் வெகுவாகப் பாதிக்கின்றன.

இத்தகைய இயற்கை இடர்ப்பாடுகளினால் ஏற்படும் வருவாய் இழப்பிலிருந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காத்திட, 25 இலட்சம் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையாக இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை, 4,436 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் விதைப்பு பொய்த்தல் இனத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட சம்பா நெற்பயிருக்கு 2022 - 2023, 2023-2024ஆம் ஆண்டுகளில் பயிர் இழப்பு ஏற்பட்ட அதே ஆண்டிலேயே இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில், கடந்த 2022-2023ஆம் ஆண்டில், தென்மேற்குப் பருவமழை காலத்தில் பெய்த கனமழை, மாண்டஸ் புயல், வடகிழக்குப் பருவமழை காலத்தில் பெய்த கனமழை, பருவம் தவறிப் பெய்த மழை, வறட்சி, கடந்த மார்ச் 2023இல் பெய்த ஆலங்கட்டி மழை ஆகிய இயற்கைப் பேரிடர்களால் ஏற்பட்ட பயிர்ச் சேதத்திற்கு, 380 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிவாரணத்தொகை, 4 இலட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. குறுவைப் (காரீஃப்) பருவத்தில் ஏற்பட்ட மகசூல் இழப்பு, மிக்ஜாம் புயல், மக்காச்சோளப்பயிரில் ஏற்பட்ட மகசூல் இழப்பு ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 85 ஆயிரம் விவசாயிகளுக்கு 118 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், கோடை மழை, தென்காசி மாவட்டத்தில் தென் மேற்குப் பருவ மழை காலத்தில் மழை குறைவால் ஏற்பட்ட மகசூல் இழப்பு, **தென் மாவட்டங்களில் 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட பெருமழை போன்ற இயற்கைப் பேரிடர்களால் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு 208 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிவாரணத்தொகை, 2 இலட்சத்து 74 ஆயிரம் விவசாயிகளுக்கு விரைவில் வழங்கப்படும்.**

மேட்டூர் அணையில் குறைந்த அளவே தண்ணீர் இருந்தபோதிலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரிய நிகழ்வாக மேட்டூர் அணையிலிருந்து 03.02.2024 அன்று டெல்டா பாசனத்திற்காக 3 டி.எம்.சி தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டதால், பாதிக்கும் நிலையிலிருந்த சுமார் 25,000 ஏக்கர் சம்பா நெற்பயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது.

பல்வேறு உழவர் நலன் குறித்த திட்டங்கள், வேளாண் இயந்திரங்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள், தொழில்நுட்பக் கருத்தரங்குகள் கொண்ட மாபெரும் கண்காட்சிகள் சென்னையிலும், திருச்சியிலும் நடைபெற்றன. இவற்றில் மொத்தமாக, இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான விவசாயிகளும் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும் பார்வையிட்டு, பங்கேற்றுப் பயனடைந்தனர்.

### சாதனைகள்!

இருபோகச் சாகுபடிப் பரப்பை இருமடங்காக்கும் முயற்சியில், 2022-2023ஆம் ஆண்டு 35 இலட்சத்து 15 ஆயிரம் ஏக்கராக இருபோகச் சாகுபடிப் பரப்பு உயர்ந்துள்ளது. கரும்புப் பயிரில் உயர் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து எக்டருக்கு 111 மெட்ரிக் டன் உற்பத்தித்திறனுடன் தமிழ்நாடு, தேசிய அளவில் முதலிடத்தில் உள்ளது.

நடப்பாண்டில் ஏற்பட்ட பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகளுக்கிடையிலும், **114 இலட்சத்து 19 ஆயிரம் ஏக்கர்** பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 20232024ஆம் ஆண்டில் 127 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தியினை எட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, கடந்த மூன்றாண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த சிறப்புப் பிரதிநிதிகள், விவசாயிகள், விவசாயச் சங்கங்கள், கரும்பு விவசாயிகள் சங்கங்கள், விவசாய இடுபொருள் விற்பனையாளர்கள் சங்கம், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், இயற்கை விவசாயிகள், தோட்டக்கலை விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், வேளாண் இயந்திரங்கள் தயாரிப்பு நிறுவனப் பிரதிநிதிகள், வேளாண் வணிகர்கள், வேளாண் ஏற்றுமதியாளர்கள், முட்டை, பால் உற்பத்தியாளர்கள், கடல்சார் மீனவர்கள், உள்நாட்டு மீனவர்கள், வேளாண் வல்லுநர்கள் ஆகியோரின் கருத்துகளை நேரடியாகவும் மனுக்கள், மின்னஞ்சல் மூலமாகவும் பெற்று அவர்கள் கருத்துகளுக்கும் ஏற்ப 2024-2025ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கை அளிக்கப்படுகிறது.

### வேளாண்மைத்துறை

**1) முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் இந்த நிதிநிலை அறிக்கையில், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் என்ற புதிய திட்டத்தினை இப்பேரவையில் அறிவிப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.**

வேளாண்மைக்கு மண்ணே ஆதாரம். பயிர் வளர்ச்சிக்கு அடிப்படை மண். பயிர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துகளை கிடைக்கக்கூடிய வடிவில் அளிப்பதும் மண்தான். பயிர்களின் வளர்ச்சி, மண்ணின் வளத்தைச்சார்ந்தே அமைகிறது. இதைத்தான்,

**“சாரல் சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு”**

என்னும் குறுந்தொகைப்பாடல், மண்வளம் செழிப்பாக இருந்ததால்தான் மரங்களில் பெரிய பலாப்பழங்கள் காய்த்துத் தொங்கின என்று கூறியுள்ளது.

பண்டைய காலத்தில் காடுகளைத் தேவைக்கேற்ப அழித்து வேளாண்மை செய்தபோது நாளடைவில் உற்பத்தி குறைந்தது. அது மண்வளம் குன்றியதால் ஏற்பட்டது என்பதை உணர்ந்தே நம் மூத்தகுடிகள் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து வேளாண்மை (Shifting Cultivation) செய்தனர் என்பதை அறியமுடிகிறது. பின்னர், எரு இடுதலின் மூலம் மண் வளத்தைக் கூட்டலாம் என்பதை,

**“கவைக்கதிர் வரகின் அவைப்புறு வாக்கல்**
**தாதெரு மறுகிற் போதொடு பொதுளிய”**

என்று புறநானூறு கூறுவதிலிருந்து அறியலாம்.

தற்போதுள்ள தொழில்முறை வேளாண்மையில், ஒரே பயிரைத் தொடர்ந்து சாகுபடி செய்வதாலும், மண்ணிலிருந்து சத்துகளை அதிகம் உறிஞ்சும் பயிர்களைச் சாகுபடி செய்வதாலும், மண்ணின் வளம் குறைந்து கொண்டே வருகிறது. இது தவிர, உற்பத்தி அதிகரிப்பிற்கென அதிக அளவில் இரசாயன உரங்கள், களைக்கொல்லிகள், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றைப் பயன்படுத்துவதால் மண்ணிலுள்ள நுண்ணுயிர்களின் எண்ணிக்கை குறைந்து மண் வளமும் நலமும் குன்றியுள்ளன. நிலங்கள் பாழ்பட்டு அதிக அளவில் களர், உவர், அமில நிலங்களாக மாறியுள்ளன. தொடர்ந்து இதே நிலை நீடித்தால் மலடான மண்ணைத்தான் நம் எதிர்காலத் தலைமுறையினருக்கு நாம் விட்டுச்செல்லும் நிலை ஏற்படும்.

வேதிப்பொருட்களின் எச்சம் இல்லாத வேளாண் விளைபொருட்களே நமக்கு நல்லுணவு, அருமருந்து. நல்ல உணவே உடல் நலன் காக்கும், அதுவே மக்களுக்கு நல்வாழ்வு தரும் என்பதால், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மண்வளத்தைப் பேணிக்காக்கவும், மக்கள் நலன் காக்கும் விதமான உயிர்ம வேளாண்மை போன்ற அனைத்து வேளாண் செய்முறைகளையும் ஊக்கப்படுத்திடவும் பெரும் திட்டம் ஒன்றைத் தீட்டப் பணித்தார்கள். இதற்கென, **“முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்” என்ற புதிய திட்டம், 20242025ஆம் ஆண்டில், 22 இனங்களுடன் 206 கோடி ரூபாய் நிதியில் செயல்படுத்தப்படும்.**

i) மண்ணில் கரிம கார்பன் உள்ளிட்ட அனைத்துச் சத்துகளும் சரிவிகிதத்தில் இருந்தால் மட்டுமே நுண்ணுயிர்கள் பல்கிப்பெருகி, பயிர்களுக்கு ஊட்டச்சத்துகள் எளிதாகக் கிடைக்கப்பெற்று மகசூல் அதிகரிக்கும். எனவே, **பசுந்தாள் உர உபயோகத்தினை விவசாயிகளிடையே ஊக்குவித்து** மண்வளம் காக்கும் வகையில், ஆயக்கட்டு, இறவைப் பாசனப் பகுதிகளில், **முதற்கட்டமாக 2024 -2025ஆம் ஆண்டில் 2 இலட்சம் ஏக்கரில் பசுந்தாள் உரம் பயிரிட 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதனால், தமிழ்நாட்டிலுள்ள 2 இலட்சம் விவசாயிகள் பயனடைவர்.**

**ii) “தொல்லது விளைந்தென நிலம் வளம் கரப்பினும்”**

விளையும் நிலத்திற்கு எரு இடாவிட்டால், வயல் விளைச்சலை மறுத்துவிடும் என்று புறநானூறு பகர்கிறது. மேழிச்செல்வம் குறைந்து வரும் நிலையில், மாட்டுச் சாணத்தோடு, வேளாண் கழிவுகளையும் மக்கச் செய்து கிடைக்கும் மண்புழு உரம் முக்கியத்துவம் பெறுகிறது. மண்புழு உரம், வளமான ஊட்டச் சத்துகளை வழங்குவதோடு மட்டுமின்றி, மண்ணின் தன்மையையும் மேம்படுத்துகிறது. எனவே, மண்புழு உரம் தயாரித்து மண்வளத்தை மேம்படுத்திட, ஒரு விவசாயிக்கு இரண்டு மண்புழு உரப்படுக்கைகள் வீதம் 10,000 விவசாயிகளுக்கு வழங்கிட 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், நிரந்தர மண்புழு உரத் தொட்டிகள் அமைத்து, தொடர்ந்து மண்புழு உரம் தயாரிக்க ஏதுவாக, 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

iii) மண்ணின் வளம் குறித்து அறிந்து, அதற்கேற்ப உரமிடுவதற்காக, விவசாயிகள் **“தமிழ் மண்வளம்”** இணையதளம் வழியாக மண் வள அட்டைகளைப் பதிவிறக்கம் செய்து, தாங்கள் தேர்வு செய்துள்ள பயிர்களுக்கேற்ப உரப் பரிந்துரைகளையும் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் மண் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு, சமச்சீர் உரப் பரிந்துரை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். 2024-2025ஆம் ஆண்டில் 2,482 கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் 2 இலட்சம் விவசாயிகளின் நிலத்தில் மண்பரிசோதனை செய்து மண்வள அட்டையும், மண்வள மேம்பாட்டிற்கான பரிந்துரையும் வழங்கப்படும். இவ்வாறு, **இரசாயன உரங்களின் பயன்பாட்டினைக் குறைத்து மண்ணின் வளம் காக்க, 6 கோடியே 27 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

iv) களர் நிலத்தில், மண் இறுகியும் காற்றோட்டம் இல்லாமலும், அமில நிலத்தில் நுண்ணுயிர்ச் செயல்பாடுகள் குறைந்தும், பயிர் வளர்ச்சியும், மகசூலும் குறைந்தும் காணப்படுகிறது. இதனைச் சீர்செய்யும் பொருட்டு, **37,500 ஏக்கர் களர் நிலங்களைச் சீர்ப்படுத்த 7 கோடியே 50 இலட்சம் ரூபாயும், 37,500 ஏக்கர் அமில நிலங்களைச் சீர்ப்படுத்த 15 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்படும்.**




v) திரவ உயிர் உரங்களைப் பயிர்களுக்கு வழங்குவதால் தழை, மணி, சாம்பல், துத்தநாகச் சத்துகளை எளிதில் அளித்து இரசாயன உரச் செலவைக் குறைத்து, சராசரியாக 10 முதல் 20 சதவீதம் கூடுதல் வருவாய் பெறமுடியும். இதற்கென, **2 இலட்சம் விவசாயிகளுக்கு 10 இலட்சம் ஏக்கரில் இடுவதற்காக, 5 இலட்சம் லிட்டர் உயிர் உரங்கள், 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.**

vi) தமிழ்நாட்டில் முக்கிய வேளாண் பயிரான நெற்பயிரில், ஒவ்வொரு நாளும் வேளாண் விரிவாக்கப் பணியாளர்களால் விவசாயிகளுடன் இணைந்து, **“வயல் சூழல் ஆய்வு”** மேற்கொள்ளப்பட்டு, நன்மை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கை, தீமை செய்யும் பூச்சிகள், நீர் மேலாண்மை முறைகள், மண்ணின் வளம், பயிர்களின் வளர்ச்சி நிலைகள், சுற்றுச்சூழல் போன்றவற்றின் அடிப்படையில் பூச்சி மேலாண்மை செய்வது குறித்து விவசாயிகளுக்கு உரிய அறிவுரைகளும் பரிந்துரைகளும் வழங்கப்படும். இதனால் பயிர்பாதுகாப்பு மேம்படுத்தப்பட்டு, இரசாயனங்களின் பயன்பாடு பெருமளவு குறைக்கப்படும். மண்நலம் காக்கப்படும்.

vii) அசாடிராக்டின் மூலப்பொருளைக்கொண்ட வேம்பிலிருந்து கிடைக்கும் பொருட்கள், சுற்றுச்சூழல் பாதிப்பு இல்லாமல் பூச்சி, நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த வல்லவை. வேப்பிலை பசுந்தழை உரமாகவும் பயன்படுகிறது. **வேம்பினைப் பரவலாக்கம் செய்திடும் வகையில் 10 இலட்சம் வேப்ப மரக்கன்றுகள் வேளாண்காடுகள் திட்டத்தில் இலவசமாக விநியோகிக்கப்படும். இதற்கென 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

viii) இயற்கையிலேயே உயிரி பூச்சிக்கொல்லி பண்புகளுடைய ஆடாதொடா, நொச்சி போன்ற தாவர வகைகளின் 50 இலட்சம் செடிகளைத் தரிசு நிலங்களிலும் வயல் பரப்புகளிலும் நடவு செய்து பரவலாக்கம் செய்திட ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

ix) பழங்காலத்தில் நம் தமிழர்கள் நல்ல உணவுப் பழக்க வழக்கத்தினாலேயே நல்வாழ்வு வாழ்ந்தனர். இதனை ஊக்குவிக்கும் விதமாக, நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தவல்ல சீவன் சம்பா போன்ற மருத்துவ குணம் கொண்ட பாரம்பரிய நெல் இரகங்கள், 20242025ஆம் ஆண்டில் 1,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யும் வகையில் விதை விநியோகம் செய்யப்படும்.

x) **நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கத்தில்** பாரம்பரிய நெல் இரகங்களான அறுபதாம் குறுவை, பூங்கார், தூயமல்லி, சீரகசம்பா, மாப்பிள்ளை சம்பா, சீவன் சம்பா, கருப்புக்கவுனி, போன்றவற்றின் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இத்திட்டத்தில் 2023-2024ஆம் ஆண்டில் 20,979 விவசாயிகள் பாரம்பரிய நெல் இரகங்களை 12,400 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்து பயனடைந்தனர். 2024 - 2025ஆம் ஆண்டில் மாநில அரசு விதைப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு,

2025-2026ஆம் ஆண்டில், 10,000 ஏக்கரில் சாகுபடி செய்யும் வகையில் 200 மெட்ரிக் டன் விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும். இதற்கென, 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

xi) புரதம், நார்ச்சத்து, கால்சியம், இரும்புச் சத்து, வைட்டமின்கள் ஆகியவை அதிகம் உள்ள பாரம்பரிய சிறுதானியங்கள், பயறு வகைகள் இரத்தத்தில் சர்க்கரை அளவினைக் கட்டுக்குள் வைத்திருக்கவும், உடல் எடையைக் குறைக்கவும், நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும் செய்கின்றன. எனவே, சேலம், கரூர் மாவட்டங்களில் தலைவிரிச்சான் சோளம், வெள்ளை சோளம், இருங்கு சோளம், செஞ்சோளமும், தூத்துக்குடி மாவட்டத்தில் காக்காச்சோளமும், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை மாவட்டங்களில் வெண்சுருட்டை கேழ்வரகு, கருஞ்சுருட்டை கேழ்வரகு, கரிக்கட்டை கேழ்வரகு, பூவாடன் கேழ்வரகு, குருவிக்காரன் கம்பு, காட்டுக்கம்பு, தட்டை வரகு, பெரும்சாமை, சடைசாமை, சிட்டன் சாமை, கருஞ்சிட்டன் சாமை, நாட்டுத் துவரை, மலைத்துவரை ஆகியவற்றையும், திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களில், நாட்டு உளுந்து, கொடி உளுந்து ஆகிய இரகங்களின் விதைகளையும் கண்டறிந்து சேகரித்து, அரசு மாநில விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு பாரம்பரிய இரகங்கள் பாதுகாக்கப்படும். இவை, புதிய இரகங்களை உருவாக்கிடவும், பயன்பாட்டிலுள்ள இரகங்களை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும்.

xii) உயிர்ம வேளாண்மைக்கான திட்டங்கள், சான்றளிப்பு முறைகள், நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு, இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பிற்கான பயிற்சிகள், உயிர்ம வேளாண் பொருட்களைச் சந்தைப்படுத்துதல் போன்ற செயல்பாடுகள், அனைத்து விவசாயிகளுக்கும் சென்றடைய வேண்டும் என்பதற்காக, வட்டாரத்திற்கு ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, **உயிர்ம வேளாண்மைக்கான மாதிரிப் பண்ணை உருவாக்கப்பட்டு இதர விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும். இதற்கென 38 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

xiii) 20232024ஆம் ஆண்டில், 36 மாவட்டங்களில் 35,815 ஏக்கர் பரப்பில் உருவாக்கப்பட்ட 725 உயிர்ம வேளாண் தொகுப்புகளுக்கு இரண்டாம் ஆண்டிற்கான ஆதரவு வழங்கிட, 27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு முழுமையான உயிர்ம வேளாண் சான்றுடன் கூடிய உயிர்ம வேளாண்மை உறுதி செய்யப்படும். இதனால் விவசாயிகளுக்கு விதைப்பு முதல் நேரடி சந்தைப்படுத்துதல் வரை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, கூடுதல் இலாபம் பெற்றிட வழிவகை செய்யப்படும்.

xiv) உயிர்ம வேளாண்மைக்கு இன்றியமையாத, பஞ்சகவ்யம், ஜீவாமிர்தம், மண்புழு உரம், அமிர்தக்கரைசல், மீன்அமிலம் போன்றவற்றைத் தயாரித்து விற்பனை செய்ய ஆர்வமுள்ள 100 குழுக்களுக்கு இயற்கை இடுபொருள் தயாரித்தல் மையம் அமைத்து ஊக்குவிக்க, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்



நேற்று (20.2.2024) சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு அரசின் 2024–2025ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைக்கான நிதிநிலை அறிக்கையை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

## மூலிகை பயிர் சாகுபடியை ஊக்குவிக்க ரூ.5 கோடி!

# இயற்கை விவசாயத்திற்கு இடுபொருள் தயாரிக்க ரூ.1 கோடி!

## வேளாண் நிதி நிலை அறிக்கை!... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

xv) விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வை இயக்கத்தில் 24 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவினத்தில், ஒரு கோடியே 96 இலட்சம் மரக்கன்றுகள் 72,597 விவசாயிகளுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்டன. விவசாய நிலங்களில் வளர்க்கப்படும் வேளாண் காடுகள், நிரந்தரப் பசுமைப் போர்வையினை உருவாக்குவ தோடு, இலாபம் தரும் பண்ணைத் தொழிலாகவும் விளங்குகின்றன. 2024-2025ஆம் ஆண்டில் தரமான மரக்கன்றுகள் உற்பத்தி செய்திடவும், மரக் கன்றுகள் உற்பத்தி செய்யும் நாற்றங்கால்களை வலுப்படுத்துவதற்காகவும் சிறிய, பெரிய, உயர் தொழில்நுட்ப (ஹைடெக்) நாற்றங்கால்கள் அமைப்பதற்கு **வேளாண்காடுகள் திட்டத்தில், 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

xvi) ஒருங்கிணைந்த பண்ணையத்தினால், விவசாயிகள், பயிர் சாகுபடியுடன் கறவை மாடுகள், ஆடுகள் வளர்த்தல், பழ மரங்கள், தேனீ வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல் போன்ற வேளாண் சார்ந்த பணிகளையும் மேற்கொண்டு தற்சார்புடன் கூடிய வாழ்வாதார முன்னேற்றத் தினை அடைய முடியும். கடந்த மூன்று ஆண்டுகளில், 40,888 ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் 142 கோடி ரூபாய் மானியத்தில் அமைக்கப்பட்டு, 40,888 விவசாயிகள் பயனடைந்து அவர்களது வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. **2024-2025ஆம் ஆண்டில் 14,000 ஒருங்கிணைந்த பண்ணைய தொகுப்புகள் அமைத்திட, 42 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

xvii) தமிழ்நாட்டில் சுமார் 60 இலட்சத்து 62 ஆயிரம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் நெல், சிறு தானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துப் பயிர்கள், பருத்தி, தோட்டக்கலைப் பயிர்கள் ஆகி யவை சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. பெரும் பாலும் சிறு, குறு விவசாயிகளால் சாகுபடி செய்யப் படும் இந்நிலங்கள் ஊட்டச்சத்துக் குறைபாடும், குறைந்த நீர்ப்பிடிப்புத்திறனும் கொண்டதாக உள் ளதால், நிலத்தடி நீர் குறைந்து பயிர் உற்பத்தித் திற னும் வெகுவாகக் குறைந்து காணப்படுகிறது.

இம்மானாவாரி நிலங்களில் விவசாயிகள் இலா பகரமான பயிர் சாகுபடி மேற்கொள்வதற்கு ஏது வாக, உழவு மேற்கொள்ளவும், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துக்கள் பயிரிட விதைகளும் வழங்கப்படும். 2024-2025ஆம் ஆண்டில், மூன்று இலட்சம் ஏக்கரில் இத்திட்டத்தை செயல்படுத்த, **36 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

xviii) காய்கறிகள், பழங்களின் தினசரி நுகர்வு மக்களிடையே மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே, வீட்டுத் தோட்டத்தில் ஊட்டச்சத்துமிக்க பழச்செடிகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு வாழை, பப்பாளி, முருங்கை, கறிவேப்பிலை போன்ற செடிகள் வழங்கப்படும். இதனால் பூச்சிக் கொல்லிகள் இல்லாத, நச்சுத்தன்மையற்ற பழங் கள், காய்கறிகள் கிடைக்கும். இத்திட்டத்திற்கென **4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

xix) **"தேனீக்களின் தனித்துவம் அவை தித்திக்கும் தேனைத் திரட்டுவதால் மட்டுமல்ல; மலர்களுக்குள் மகரந்தச்சேர்க்கை நிகழ்த்துவதால்தான்"**. மக்களின் உடல்நலத்தில் தேனீ வளர்ப்பின் முக்கியத்து வத்தைக் கருத்தில் கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில், **3 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் தேனீ முனையம் உருவாக்கப்படும்.** இத் திட்டத்தில், தேன் பரிசோதனைக் கூடமும் தேன்,




தேன் சார்ந்த பொருட்களைப் பதப்படுத்தும் கூடங் களும் அமைக்கப்பட்டு, தேனீ வளர்ப்போர்க்கு உரிய பயிற்சிகளும் அளிக்கப்படும்.

xx) **காலநிலை மாற்றம்**, அடுத்த 20 ஆண்டுக ளில் பல்லுயிர்ப் பரவல், பயிர் உற்பத்தி, உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றைப் பாதிக்கக்கூடும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, காலநிலை மாற் றத்தின் தாக்கங்களைக் குறைப்பதற்கும், வேளாண் உற்பத்தியைக் குறையாமல் பாதுகாத் திடவும், உரிய தொழில்நுட்பங்கள் பரவலாக்கப்பட வேண்டும். அதற்காக, தமிழ்நாட்டில் சிறப்பு வேளாண் கிராமங்களை உருவாக்கி, இத்தொழில் நுட்பங்கள் குறித்து விரிவாக்க அலுவலர்கள், விவ சாயிகள் உள்ளிட்டோருக்கு விழிப்புணர்வு ஏற்ப டுத்தி பரவலாக்கம் செய்யப்படும். இதற்கென, **ஒரு கோடியே 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப் படும்.**

xxi) வேளாண்மையில் நீடித்த உற்பத்தித் திற னைப் பெற்றிட மண்ணின் தொடர்ச்சியான வள மைத்திறன், நிலையான உற்பத்தித்திறன் ஆகி யவை மதிப்பிடப்படவேண்டும். மண்ணிலுள்ள கரிமச்சத்து, நுண்ணுயிர்களின் கலவை ஆகியவற் றைப் பொறுத்தே மண்ணின் வளம் அமைகிறது. மண்ணின் வளத்தை மேம்படுத்திட **பயிர்க்கழிவு கள் உள்ளிட்ட கரிமப் பொருட்களை வேகமாகச் சிதைத்து** கரிமச்சத்தின் அளவை உயர்த்தவும், கிடைக்காத நிலையிலுள்ள **சத்துகள் கிடைக்கப் பெற வும்**, பயனுள்ள நுண்ணுயிர்க் கலவையை உரு வாக்கிட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் செயல் திறனும் மதிப்பிடப்படும். இதற்கென, **ஒரு கோடியே 39 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

xxii) உழவர்சந்தைகளில் விற்பனை செய்வ தைப் போன்று தரமான வேளாண் விளை பொருட் கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் எளிதில் நகர்ப் புர நுகர்வோரைச் சென்றடைய, நிர்ண யிக்கப்பட்ட தர அளவுகளின்படி விவசாயிகளிட மிருந்து நேரடி யாகக் கொள்முதல் செய்து, தரம்பிரித்து, சிப்பம்கட்டி, முத்திரையிட்டு விற்பனை செய்ய ஏது வாக **100 உழவர் அங்காடிகள், 5 கோடி ரூபாய் மாநில நிதியில் செயல்படுத்தப்படும்.**

**முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், 2024-2025ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். 2024-2025ஆம் ஆண்டிற்கு மொத்தம் 206 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

### 2) கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்.

ஒவ்வொரு சிற்றூரும் தன்னிறைவு பெற்று முன்மாதிரியாகத் திகழவேண்டும் என்ற நோக்கில், முதன்மைத் தொழிலான உழவுத் தொழிலை மேம்படுத்தி, நிகர சாகுபடிப் பரப்பை அதிகரித்திட தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றி விவசாயிகளுக்குத் தந்திட "கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" எனும் திட்டம் 2021-2022ஆம் ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு 12 ஆயி ரத்து 525 கிராம ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2024-2025ஆம் ஆண்டிலும், இத்திட்டம், தேர்வு செய்யப்பட்ட 2,482 கிராம ஊராட்சிகளில், 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்ப டுத்தப்படும்.**

### 3) தேவைக்கேற்ற உற்பத்தியை எட்ட வேளாண் பயிர்களில் பரப்பு விரிவாக்கம்

உணவுப்பொருள் உற்பத்தியில் தன்னிறைவு எவ்வளவு முக்கியம் என்பதை ரஷ்யா – உக்ரைன் போர் நமக்கு உணர்த்தியுள்ளது. தேவைக்கேற்ற உற்பத்தியினை எட்டினால் மட்டுமே, தன்னிறைவு பெற முடியும். தமிழ்நாட்டின், நெல் தேவை ஓரள விற்கு நிறைவு செய்யப்பட்டாலும், பயறு வகைகள், எண்ணெய்வித்துகளுக்கான தேவை நிறைவு செய்யப்படாமலேயே உள்ளது. தமிழ்நாட்டில் ஆண்டொன்றிற்கு சுமார் 18 இலட்சத்து 45 ஆயிரம் மெட்ரிக் டன் உணவு எண்ணெய் தேவைப்படுகி றது. தற்பொழுது சாகுபடி செய்யப்படும் எண்ணெய் வித்துப் பயிர்களிலிருந்து 4 இலட்சத்து 85 ஆயிரம் மெட்ரிக் டன் தாவர எண்ணெய் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, இப்பயிர்களில் சிறப்புக் கவனம் செலுத்தி பரப்பு விரிவாக்கம் செய்து உற் பத்தி அதிகரிக்கப்படும்.

**i) பயறு பெருக்குத் திட்டம்** உணவுப் பாதுகாப்பை யும் ஊட்டச்சத்தையும் நோக்கமாகக் கொண்ட நிலையான உணவு உற்பத்தியின் ஒரு பகுதியாக பயறுவகைகளின் உற்பத்தி உள்ளது. அனைத்துப் பயறுவகைகளின் உற் பத்தியில் தன்னிறைவு பெறும் நோக் கத்தில், **2024-2025ஆம் ஆண்டில் பயறு பெருக்குத் திட்டம் 4 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் பரப்பில், 40 கோடியே 27 இலட்சம் ரூபாய் ஒன் றிய, மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்ப டுத்தப்படும்.**

**ii) துவரை சாகுபடிப் பரப்பு விரி வாக்க இயக்கம்**தமிழ்நாட்டில் அதிக மாகப் பயன்படுத்தப்பட்டு வரும் முக் கியப் பயறுவகையான துவரையின் பரப்பு தொடர்ச்சியாகக் குறைந்து, தற்போது ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மட்டுமே பயிரிடப் பட்டு வருகிறது. எனவே, துவரை சாகுபடிப் பரப்பு குறைந்துவரும் மாவட்டங்களில், இப்பயிரின் பரப்பு அதி கரிக்கப்பட்டு, **2024-2025ஆம் ஆண்டில் 50,000 ஏக்கர் பரப்பில், துவரையைத் தனிப் பயிராகவோ, வரப்புப் பயிராகவோ அல்லது ஊடுபயிராகவோ பயி ரிட, 17 கோடியே 50 இலட்சம் ரூபாய் மாநில அரசின் நிதி ஒதுக்கப்படும்.**

**iii) உணவு எண்ணெய் உற்பத்தி உயர்த்தும் திட்டம்:** நாம் அன்றாடம் உண்ணும் உணவில் எண் ணெய் முக்கிய அங்கம் வகிக்கிறது. விவசாயி களுக்கு அதிக இலாபம் ஈட்டித்தரக்கூடிய எண் ணெய்வித்துப் பயிர்களான நிலக்கடலை, எள், சூரி யகாந்தி, சோயாமொச்சை, ஆமணக்கு ஆகிய பயிர் களின் சாகுபடியைப் பரவலாக்கம் செய்ய, தொகுப்பு செயல்விளக்கத்திடல் அமைத்திடவும், நெல் தரிசில் எண்ணெய்வித்துப் பயிர்கள் சாகுபடி செய்வதை ஊக்குவித்திடவும், **2024-2025ஆம் ஆண்டில் 45 கோடி ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.**

**iv) எள் சாகுபடிப் பரப்பு விரிவாக்கம்:** 2023-2024ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, முக்கிய எண்ணெய் வித்துப் பயிர்கள் அதிகம் விளையும் மாவட்டங்கள் எண்ணெய்வித்து மண்டலமாக அறிவிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து, 2024-2025ஆம் ஆண்டில், எள் சாகுபடிப் பரப்பு, மகசூலை அதிகரித்திட, சுமார் 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிற்குத் தேவையான இடுபொருட்கள், அறு வடை செலவினம் ஆகியவற்றிற்கு மானியம் வழங்க, 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் படும்.

**v) சூரியகாந்தி சாகுபடிப் பரப்பு விரிவாக்கம்:** 2024-2025ஆம் ஆண்டில், சூரியகாந்திப் பயி ரின் சாகுபடிப் பரப்பினை 12 ஆயிரத்து 500 ஏக்கர் அதிகரித்திட **2 கோடி ரூபாய்** நிதி ஒதுக்கீடு செய்யப் படும்.

**vi) ஆமணக்கு சாகுபடிப் பரப்பு விரிவாக்கம்:** அதிக விளைச்சல் தரும் வீரிய ஒட்டு இரக ஆம ணக்கு சாகுபடியை 1,500 ஏக்கர் பரப்பளவில் ஊக் குவித்திட, 2024-2025ஆம் ஆண்டில் 18 இலட் சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**முக்கிய பயறுவகைகள், எண்ணெய்வித்துகளில் பரப்பு விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்கென மொத் தம் 108 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

### 4) பயிர் உற்பத்தித்திறன் உயர்த்துதல் ஊக்குவிப்புத் திட்டம்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மூன்று தொலைநோக்குத் திட்டங்களில், உணவு தானியப் பயிர்கள், தென்னை, கரும்பு, பருத்தி, சூரியகாந்தி உள்ளிட்ட பயிர்களில் தேசிய அளவில் முதல் மூன்று இடங்களில் தமிழ்நாடு இடம் பெற்றிட வழி வகை செய்யப்படும் என்பதும் ஒன்றாகும். குறைந்து வரும் சாகுபடிப் பரப்பில், வேண்டிய அளவு உற்பத்தி செய்யவேண்டிய கட்டா யத்தில் நாம் உள்ளோம். எனவே, சாகுபடியில் தொழில் நுட்பங்களை ஒருங்கிணைத்து உற்பத்தித்திறனை அதிகரிக்க சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

i) வேளாண் உற்பத்திக்கு அடிப்படைத் தேவை யான தரமான விதைகளைப் பயன்படுத்துவதால் 15 சதவீதம் வரை மகசூலை அதிகப்படுத்தலாம். விவசாயிகள் தங்களுக்குத் தேவையான தரமான விதைகளைத் தாங்களே உற்பத்தி செய்து, உயர் விளைச்சல் பெற வேண்டும் என்ற நோக்கத்தில், விதைக் கிராமத் திட்டத்தில், 12 ஆயிரத்து 510 மெட் ரிக் டன் நெல், 260 மெட்ரிக் டன் சிறு தானியங்கள், 940 மெட்ரிக் டன் பயறு வகைகள், இரண்டாயி ரத்து 100 மெட்ரிக் டன் எண்ணெய்வித்துகள் என மொத்தம் **15 ஆயிரத்து 810 மெட்ரிக் டன் விதைகள் 50 முதல் 60 சதவீத மானிய விலையில் விநியோகம் செய்யப்படும். இதற்கென, 2024-2025ஆம் ஆண் டில் 35 கோடி ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

ii) பிற மாநில வேளாண் பல்கலைக்கழகங்க ளால் வெளியிடப்பட்டு தமிழ்நாட்டிற்கு அறிவிக்கை செய்யப்பட்ட பத்தாண்டுக்குட்பட்ட உயர் விளைச் சல் தரக்கூடிய நெல், சிறுதானியங்கள், பயறுவகை கள், எண்ணெய்வித்துகளின் வல்லுநர் விதைகள், ஆதார நிலை, சான்று விதைகள் ஆகியவை தமிழ் நாடு மாநில விதை மேம்பாட்டு முகமையின் வாயி லாகக் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

iii) நிலக்கடலை போன்ற வேளாண் பயிர்களில் ஜிப்சம் இடுதலை ஊக்குவித்து ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் மூலம் உற்பத்தித்திறனை யும், தரத்தினையும் அதிகரிக்க, 50,000 ஏக்கர் பரப்பிற்கு ஜிப்சம் வழங்க,ஒரு கோடி ரூபாய் ஒதுக் கீடு செய்யப்படும். இதனால் 50,000 விவசாயிகள் பயன்பெறுவர்.

iv) தமிழ்நாட்டில் தொடர்ந்து நெல் சாகுபடி செய் யப்படும் நிலங்களில் ஏற்படும் ஊட்டச்சத்துக் குறை பாட்டை நிவர்த்தி செய்து, மண்ணின் வளத்தை மேம்படுத்திடவும், மகசூலைப் பெருக்கிடவும் நெற் பயிருக்கு துத்தநாக சல்பேட், ஜிப்சம் உரங்கள், மொத்தம் 4 இலட்சம் ஏக்கர் பரப்பிற்கு, 9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் விநியோகிக்கப்படும்.

v) நெற்பயிரில் நுண்ணூட்ட உரக் கலவை பயன்பாட்டை ஊக்குவிக்கும் திட்டமானது 2 இலட் சம் ஏக்கர் பரப்பில், 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**முக்கிய வேளாண் பயிர்களின் உற்பத்தித்திறனை உயர்த்துதலை ஊக்குவிக்கும் திட்டத்திற்கென, மொத் தம் 48 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

### 5) "ஒரு கிராமம் ஒரு பயிர்" செயல்விளக்கம்

நாட்டின் உண்மையான முன்னேற்றம், கிரா மங்களின் வளர்ச்சியில் உள்ளது என்ற காந்திய சிந்தனையில், கிராமங்களில் மறுமலர்ச்சி ஏற்படுத் திட **"ஒரு கிராமம் ஒரு பயிர்" என்ற புதிய திட்டம் 15 ஆயிரத்து 280 வருவாய் கிராமங்களில் செயல்ப டுத்தப்படும்.**

இத்திட்டத்தில், ஒரு கிராமத்திற்கு ஒரு பயிர் என்று ஐந்து முதல் பத்து ஏக்கர் பரப்பில், நெல், சோளம், மக்காச்சோளம், கம்பு, குதிரைவாலி, கேழ் வரகு, துவரை, உளுந்து, பச்சைப்பயறு, நிலக்க டலை, எள், சூரியகாந்தி, பருத்தி, கரும்பு போன்ற முக்கியப் பயிர்களுக்கான நிலம் தயாரிப்பு, உயர் விளைச்சல் இரகங்களைப் பயன்படுத்துதல், விதை நேர்த்தி, விதைப்பு, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை உட்பட்ட அனைத்துத் தொழில்நுட் பங்களையும் கடைப்பிடிக்க வைத்து, செயல் விளக் கங்கள் மேற்கொண்டு அதன் வாயிலாக விவசாயி களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

மேலும், **நன்மை செய்யும் பூச்சிகளைத் தெரிந்து கொள்ளவும், தீமை செய்யும் பூச்சிகளைத் தெரிந்து கொல்லவும்** ஏதுவாக **"நிரந்தரப் பூச்சிக் கண்காணிப் புத் திடல்கள்"** வயல்களில் அமைக்கப்பட்டு, உரிய பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் விவசாயி களுக்குப் பரிந்துரைக்கப்படும்.

### 6) தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்

**"கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையோடு இந்நான் கல்லது உணவும் இல்லை"** – என்ற புற நானூற்று கூற்றின்படி, நமது உணவில் சிறுதானி யத்தின் பங்கினைக் கருத்தில் கொண்டும், சிறுதா னியத்தில் உள்ள ஊட்டச்சத்துகளின் முக்கியத்துவம் உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காகவும், **2023ஆம் ஆண்டானது சர்வதேச சிறுதானிய ஆண்டாகக்** கொண்டாடப்பட்டது.

ஊட்டச்சத்து மிகுந்த சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற சிறுதானியங்கள் வரகு, பனிவரகு, குதிரை வாலி, சாமை, தினை போன்ற குறுதானியங்கள் ஆகியவற் றின் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித்திறனை அதிகரிக் கும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசால், 25 மாவட்டங்களைக் கொண்டு ஏற்கனவே இரண்டு சிறுதானிய மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 2023-2024ஆம் ஆண்டு முதல் 2027-2028ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் இரண்டு மண்டலங்களிலும் செயல்ப டுத்தப்பட்டு வருகிறது. **இத்திட் டம் 20242025ஆம் ஆண்டி லும் 65 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**




### 7) மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம்

வேளாண்மையை உயர்வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்ல முனைப்புடன் செயல்படும் தமிழ் நாடு அரசு, விவசாயிகளின் தேவைகளை பல் வேறு கருத்துக் கேட்புக் கூட்டங்கள் மூலம் கேட்டு, அவற்றைக் கூடிய மட்டும் செயல்படுத்துவதற்கான உகந்த திட்டங்களை உருவாக்குவதோடு வேளாண்மையில் ஒட்டு மொத்த வளர்ச்சியை அதி கரிக்கக் கூடிய உத்திகளைச் செயல் படுத்தும் வித மாக **"மாநில வேளாண் வளர்ச்சி திட்டம்"** 2022-2023ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இதில்,

**i) மாநில அளவில் சிறுதானியங்கள், பயறுவகை கள், எண்ணைவித்துகள், கரும்பு பயிர்களில் அதிக உற்பத்தியைப் பெறும் முதல் மூன்று விவசாயிகளுக்கு** முதல் பரிசாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், இரண்டாம் பரிசாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், மூன்றாம் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய் என 33 பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2024-2025ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்காக 55 இலட் சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

ii) அதிக நீர் தேவைப்படும் நெற்பயிருக்கு மாற் றாக, குறைந்த நீர்த் தேவையுடைய மாற்றுப்பயிர் களான சிறுதானியங்கள், பயறுவகைகள், எண் ணெய்வித்துப் பயிர்களை ஊக்குவிக்கும் வகை யில், 2024-2025ஆம் ஆண்டில், ஒரு இலட்சம் ஏக்கர் பரப்பளவில் மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்குத் தேவையான விதை, உயிர் உரங்கள், உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள், நுண்ணூட்ட உரங்கள், இலைவழி உரத்திற்கு தெளிப்பு மானியம், அறுவடை மானி யம் ஆகியவற்றுக்கு

12 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

**iii) பட்டதாரி இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்கும் விதமாக** 2024-2025ஆம் ஆண்டில், 100 இளைஞர்களுக்கு வங்கிக்கடன் உதவியுடன் கூடிய ஏதாவது ஒரு வேளாண் சார்ந்த தொழில் தொடங்குவதற்காகப் பட்டதாரி ஒருவ ருக்கு அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாய் மானி யம் வழங்கிட, ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 8) கிராம வேளாண் முன்னேற்றக் குழு

பயிர் சாகுபடியில் அதிக உற்பத்தியும் அதிக வரு மானமும் பெற, பருவத்தே பயிர் செய்து உயரிய தொழில்நுட்பங்களைப் புகுத்தி, சந்தைத் திறனில் திறம்பட்டு நீடித்த வளர்ச்சி அடைய உரிய ஆலோ சனைகளைக் குறித்த நேரத்தில் உழவர்களுக்கு வழங்க, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கி ணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத் தப்படும் கிராம ஊராட்சிகளில், கிராம முன்னேற்றக் குழுக்கள் அமைக்கப்பட்டு பயிற்சிகள் அளிக்கப்படு கின்றன. 2024-2025ஆம் ஆண்டில், 2,482 கிராம ஊராட்சிகளில் கிராம முன்னேற்றக் குழுக் கள் உருவாக்கப்பட்டு, 2 கோடியே 48 இலட்சம் ரூபாய் அட்மா (ATMA) திட்ட நிதி ஒதுக்கீட்டில் பயிற் சிகள் வழங்கப்படும்.

### 9) சிறந்த உயிர்ம விவசாயிக்கான நம்மாழ்வார் விருது

2023-2024ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு அரசால் உயிர்ம வேளாண்மையில் ஈடுபடும் சிறந்த விவசாயிகளுக்குச் சிறந்த உயிர்ம விவசா யிக்கான **"நம்மாழ்வார் விருது"** வழங்கப்பட்டு வரு கிறது. 2024-2025ஆம் ஆண்டிலும் உயிர்ம விவசாயிகளைக் கௌரவிக்கும் வகையில், பாராட் டுப் பத்திரத்துடன் பணப்பரிசும் முதல் மூன்று விவ சாயிகளுக்கு வழங்கப்படும். இதற்கென 5 இலட் சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 10) ஆதி திராவிடர், பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த குறு, சிறு விவசாயிகளுக்கு 20 சதவீத கூடுதல் மானியம்

**"யாரும் விடுபடாமல், அனைவரையும் உள்ளடக் கிய வளர்ச்சி"** எனும் சமூக நீதிக் கோட்பாடு உடை யது இந்த அரசு. இதற்காகத்தான் ஆதி திராவிட, பழங்குடியினத்தைச் சேர்ந்த சிறு, குறு விவசாயி கள் பயனடையும் வகையில், துறையின் மூலம் செயல்படுத்தப்படும் உயர் மதிப்புள்ள திட்டங் களுக்கு வழங்கப்படும் மானியத்துடன், கூடுதலாக 20 சதவீத மானியத் தொகை 2022-2023ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. 2024-2025ஆம் ஆண்டிலும் இதற்கென 18 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 11) பலன்தரும் பருத்தி சாகுபடி

வணிகப் பயிரான பருத்தியில் அதிகத் தேவை யுள்ள நீண்ட, மிக நீண்ட இழை இரகங்களை இந் தியாவின் 'நூல் கிண்ணம்' என்றழைக்கப்படும் தமிழ்நாட்டில், அதிக அளவில் உற்பத்தி செய்து நூற்பாலைகளுக்கு உரிய நேரத்தில் வழங்கி, அதன் மூலம் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயி களின் வருமானத்தை அதிகரித்திட "பருத்தி சாகுபடி இயக்கத்தை" 29 கோடியே 72 இலட்சம் ரூபாய் நிதியில் செயல்படுத்தியதன் காரணமாக, 2020-2021இல் இரண்டு இலட்சத்து 76 ஆயிரம் ஏக்கராக இருந்த பருத்தி சாகுபடிப் பரப்பு, 2022-2023ஆம் ஆண்டில் நான்கு இலட்சத்து 27 ஆயிரம் ஏக்கராக உயர்ந்தது. உற்பத்தியும் 2 இலட்சத்து 42 ஆயிரம் பேல்களிலிருந்து 3 இலட்சத்து 19 ஆயிரம் பேல்க ளாக உயர்ந்துள்ளது. **2024-2025ஆம் ஆண்டில், பலன் தரும் பருத்தி சாகுபடித் திட்டம் 14 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப் படும். இதனால், பருத்தி உற்பத்தி தமிழ்நாட்டில் 5 இலட்சத்து 50 ஆயிரம் பேல்களாக உயரும்.**

### 12) பயிர்க்காப்பீடு

இயற்கைச் சீற்றங்களால் விவசாயிகளுக்கு ஏற் படும் வருவாய் இழப்பிலிருந்து அவர்கள் மீண்டு வரும் வகையில் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில், 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17,18ஆம் தேதிகளில் பெய்த கனமழையால் அதிகம் பாதிப்படைந்த தூத்துக்குடி மாவட்டத்தில், மழையால் ஏற்பட்ட **பயிர் சேதத்திற்காக 14 கோடியே 55 இலட்சம் ரூபாய், 9,988 விவசாயி களுக்கு இழப்பீட்டுத் தொகையாக உடனடியாக வழங்கப்பட்டது. 20242025ஆம் ஆண்டில் இத்திட் டத்தைச் செயல்படுத்த 1,775 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

### 13) வேளாண் மேம்பாட்டிற்கான பயிற்சிகள்

பயிற்சி கொடுப்பதை மனிதவள மேம்பாட்டுக் கான முதலீடாகக் கருதவேண்டும். பயிற்சியின் மூலம் பணித்திறனையும், தொழில்நுட்ப அறிவி னையும் மேம்படுத்தி, வேளாண் மேம்பாட்டினை எய்தும் வண்ணம்,

15,000 விவசாயிகளுக்கும், 500 படித்த இளை ஞர்களுக்கும், 1,600 அலுவலர்களுக்கும், 500 பணியாளர்களுக்கும் பல்வேறு பயிற்சிகள் 50 இலட்சம் ரூபாய் நிதியில் வழங்கப்படும்.

### சர்க்கரைத் துறை

சர்க்கரைத் தொழில் விவசாயிகளின் பொருளா தார வளர்ச்சியிலும் கிராமப்புர மேம்பாட்டிலும் பெரும்பங்கு வகிக்கும் முக்கிய வேளாண் சார்ந்த தொழிலாகும். தமிழ்நாட்டில் 13 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 15 தனியார் என மொத்தமாக 30 சர்க்கரை ஆலைகள் இயக்கத்தில் உள்ளன.

கரும்பு விவசாயிகளின் நலனுக்காகவும், கரும்பு பதிவுப் பரப்பு, உற்பத்தியினை அதிகரிக் கவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேலும் மேம்படுத்திடவும், 2024-2025ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத் தப்படும்.

### 14) சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு வழங் கிய விவசாயிகளுக்குச் சிறப்பு ஊக்கத் தொகை

வேளாண்மை நிதிநிலை அறிக்கை தொடர்பாக நடத்தப்பட்ட கருத்துக் கேட்புக் கூட்டங்களின்போது, அனைத்துக் கரும்பு விவசாயிகளாலும் தொடர்ந்து கேட்கப்பட்ட கோரிக்கையினை ஏற்று, கரும்பு சாகு படிப்பரப்பு, உற்பத்தியை அதிகரிக்கவும், கரும்பு விவசாயிகள் கூடுதல் வருவாய் பெறும்வகையி லும், 20232024அரவைப் பருவத்திற்கு சர்க்கரை ஆலைகளுக்குப் பதிவு செய்து கரும்பு வழங்கிய தகுதியுள்ள விவசாயிகளுக்கு, ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல் ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த 195 ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகையினை விட, **முன் எப்போதும் இல்லாத அளவில் டன் ஒன்றுக்கு 215 ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகையாக உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம், சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் கரும்பு விவசாயிகள் பயன் பெறுவர். இதற்கென, 250 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

### 15) கரும்பு சாகுபடி மேம்பாட்டுத்திட்டம்

கரும்பு விவசாயிகளின் நலனுக்காகவும், கரும்பு சாகுபடி செலவைக் குறைத்து, சாகுபடிப் பரப்பை அதிகரிக்கவும், சர்க்கரைக் கட்டுமா னத்தை உயர்த்தவும், பூச்சி, நோய் தாக்குதலுக்கு எதிர்ப்புடைய அதிக சர்க்கரைக் கட்டுமானம் தரக் கூடிய புதிய கரும்பு இரகங்களைக் கரும்பு விவசா யிகளுக்கு மானிய விலையில் வழங்கவும் ஒன் றிய, மாநில அரசு நிதியிலிருந்து 7 கோடியே 92 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 16) சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்துதல்

கள்ளக்குறிச்சி1, செங்கல்ராயன், செய்யாறு, திருப்பத்தூர் ஆகிய கூட்டுறவு சர்க்கரை ஆலைக ளில் நவீன கரும்பு எடைமேடைகள், தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சுழல் கவிழ்ப்பான், 10 கூட்டுறவு, 2 பொதுத்துறை சர்க் கரை ஆலைகளில் சிமெண்ட் கான்கிரீட் கரும்புத் தளங்கள், 4 கூட்டுறவு, ஒரு பொதுத்துறை சர்க் கரை ஆலைகளில் கழிவுமண் மக்கவைக்கும் களங்கள் ஆகியவற்றை அமைக்க, ஒன்றிய, மாநில அரசு நிதியிலிருந்து, 12 கோடியே 50 இலட் சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

தொடர்ச்சி 5ஆம் பக்கம்

## பாரம்பரிய நெல் ரகங்கள் 1000 ஏக்கரில் சாகுபடி செய்ய விதை விநியோகம் !

# கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு 215 ரூபாய்!

## வேளாண் நிதி நிலை அறிக்கை!... 4ஆம் பக்கத் தொடர்ச்சி

# கூட்டுறவு பயிர்க் கடன் வழங்க ரூ.16,500 கோடி இலக்கு!

**17) சர்க்கரை ஆலைகளின் செயல்திறன் உயர்த்தும் நடவடிக்கைகள்**

பெரம்பலூர், செய்யாறு, வேலூர், சேலம், மதுராந்தகம், சுப்பிரமணிய சிவா ஆகிய சர்க்கரை ஆலைகளில், கரும்பு அரவைப் பகுதி இயந்திரங்களை ஒருங்கிணைத்து,

**3 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் ஆலை அரவைப் பகுதி தானியங்கிமயமாக்கப்படும்.**

செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 18 மெகாவாட் பவர் டர்பைனுக்குத் தேவையான புதிய டர்பைன் ரோட்டர் அசெம்பிளி, **6 கோடியே 31 இலட்சம் ரூபாய்** மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு ஆலையில் அரவை நிறுத்தம் ஏற்படுவது தவிர்க்கப்படும்.

செங்கல்ராயன், வேலூர், செய்யாறு, அறிஞர் அண்ணா, பெரம்பலூர், தருமபுரி, எம்.ஆர்.கே ஆகிய சர்க்கரை ஆலைகளில் இயங்கிவரும் இணை மின் நிலையங்களில், நீர் சுத்திகரிப்பு நிலைய அயனி மற்றும் எதிர் அயனி பரிமாற்றி,

ஒரு கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும். இதனால் ஆலை யின் நீரின் தரம் மேம்படுத்தப்பட்டு, பவர் டர்பைனின் ஆயுட்காலம் நீட்டிக்கப்படும். எம்.ஆர்.கே, செய்யாறு ஆகிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு அரவை இயந்திரத்தின் மின் மோட்டாரைக் கட்டுப்படுத்தும் கருவி, ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதனால் மின் மோட்டாரைக் கட்டுப்படுத்தும் கருவியின் பழுது காரணமாக ஏற்படும் அரவை நேர இழப்பு தவிர்க்கப்படும்.

**சர்க்கரை ஆலைகளின் மேம்பாட்டிற்காக, மொத்தம் 12 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஆலை நிதியிலிருந்து செலவிடப்**படும்.

**தோட்டக்கலை -**

**மலைப் பயிர்கள் துறை**

**“கதிர்படு வயலின் உள்ள கடிகமழ் பொழிலின் உள்ள முதிர்பல மரத்தின் உள்ள முதிரைகள் புறவின் உள்ள பதிபடு கொடியின் உள்ள படிவளர் குழியின் உள்ள மதுவள மலரிற் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்வார்”**

என்ற கம்பராமாயணப் பாடல் வாயி லாக, வயல்களில் நெல்லோடு, சோலை களில் மலர் சாகுபடியும், தோட்டங்களில் பழச்சாகுபடியும், மானாவாரி நிலங்களில் புன்செய் பயிரும், பதியமிடப்பட்ட கொடிப் பயிர்களும், படர்ந்து விளையக் கூடிய காய்கறிப் பயிர்களும் சாகுபடி செய்து பண்டைய உழவர்கள் பயன் பெற்றனர் என்பது அறியப்படுகிறது. அதிக வருமானம் தரவல்ல தோட்டக்கலைப் பயிர்களை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**18) வறண்ட நிலங்களில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாடு**

குறைந்த அளவு நீரினைப் பயன்படுத்தி வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய ஊட்டச்சத்து நிறைந்த அத்தி, கொடுக்காப்புளி, பெருநெல்லி, விளாம்பழம், இலந்தை, டிராகன் பழம் போன்ற பயிர்களைப் பயிரிடுதல், நீர் சேமிப்பு ஆதாரம் ஏற்படுத்துதல், வயல்களில் நீர் ஆவியாவதைக் குறைத்திட நெகிழி நிலப்போர்வை வழங்குதல் ஆகியவற்றிற்கு மானியம் வழங்குவதற்காக,

ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், பல்லாண்டுப் பயிர்களுக்குள் ஊடுபயிர் சாகுபடி செய்வதனை ஊக்குவித்து விவசாயி களுக்குக் கூடுதல் வருமானம் கிடைத்திடவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்படும்.

**19) தோட்டக்கலைப் பயிர் சாகுபடியினை ஊக்குவித்தல்**

தோட்டக்கலைப் பயிர்களை, உகந்த காலநிலையில் சாகுபடி செய்யும் பொழுது தரமான விளைபொருட்கள் விளைந்து அவற்றின் சந்தை மதிப்பும் கூடுகிறது. உதாரணமாக, கொடைக்கானல் மலைப்பூண்டு, இராமநாதபுரம் முண்டு மிளகாய், சாத்தூர் சம்பா மிளகாய், கொல்லி மலை மிளகு, கன்னியாகுமரி இலவங்கப் பட்டை, தேனி ஏலக்காய், கோயம்புத்தூர் ஜாதிக்காய், கோகோ போன்றவை நுகர்வோர்களால் அதிக அளவில் விரும்பப்படுகின்றன. விவசாயிகளின் கோரிக்கையின்படி, புவிசார் குறியீடு பெறப்பட்ட முண்டு மிளகாய் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குச் சாகுபடி மானியம் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும்.

மேற்கண்ட பகுதி சார்ந்த தோட்டக்கலைப் பயிர்களுக்கான சாகுபடியினை அதிகரித்திடும் விதமாக, **2 கோடியே 70 இலட்சம் ரூபாய்** ஒதுக்கீட்டில் தரமான நடவுச்செடிகள் மானியத்தில் வழங்கப்படும்.

**20) ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சித் திட்டம்**

**“மல்லல் அம் தெங்கு இள நீர் பெய் பண்டியும் மெல் இலைப் பண்டியும் கமுகின் மேதகு பல் பழுக்காய்க் குலை பெய்த பண்டியும் ஒல்கு தீம் பண்டம் பெய்து ஒழுகும் பண்டியும்”**

என, தேங்காய், இளநீர், வெற்றிலை, பாக்கு, இனிய பண்டங்கள் ஏற்றிய வண்டிகள் சென்றன என்று சீவக சிந்தாமணி செப்புவதன் மூலமும், **“தெங்கின் இளநீர் உதிர்க்கும் வளமிகு நன்னாடு”** என்று புறநானூறு கூறுவதன் மூலமும் தென்னையின் சிறப்பினை நாம் உணரலாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தென்னை சாகுபடியை, 10,000 ஏக்கர் பரப்பில் புதிதாக ஊடுபயிர் சாகுபடி மேற்கொள்ள, **ஏழு இலட்சம் தரமான தென்னை நாற்றுக்கள்,**

**4 கோடியே 80 இலட்சம் ரூபாய் நிதியில் வழங்கப்படும்.** தென்னை பயிரிட்டு, ஐந்து வருடம் வரையிலான தென்னந்தோப்புகளில் வாழையும், நன்கு வளர்ந்த தென்னந்தோப்புகளில் ஜாதிக்காயும் ஊடுபயிராகப் பயிரிட,

**5 கோடியே 70 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.** தென்னை நாற்றங்கால்கள் அமைத்தல், நாற்றங்கால் மேம்பாடு, பழைய தென்னந்தோப்புகளைப் புதுப்பித்தல், தென்னங் கழிவுகளை மக்கச் செய்து இயற்கை உரங்களாக மாற்ற இயற்கை உரம் தயாரிக்கும் கூடம் ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்கு மானியம் வழங்குவதோடு தென்னை சார்ந்த தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிவதற்கு ஏதுவாக, விவசாய நிலங்களிலும், தென்னை நாற்றங்கால்




மையங்களிலும், தென்னை செயல் விளக்கத் திடல்கள் அமைத்து உற்பத்தியினை அதிகரித்திட வழிவகை செய்யப்படும். இதற்கென, **12 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

தென்னை சாகுபடிக்குத் தேவையான இடுபொருட்களை, உரிய நேரத்தில் குறித்த அளவில் அளிப்பதால் தென்னையில் உற்பத்தித்திறன் அதிகரிக்கும் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் 25,000 ஏக்கர் பரப்பில் செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்படும். இதற்கென 12 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

தென்னையில் கேரளா வேர் வாடல் நோயினையும், வெள்ளை ஈக்களையும் கட்டுப்படுத்தத் தேவையான ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை உத்திகளை, விவசாயிகளுக்கு வழங்கிட, ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

உரிய நேரத்தில் தேங்காயினை அறுவடை செய்தல், சூரிய சக்தி மின் உலர்த்திக் கூடத்தில் உலர்த்துதல், எண்ணெய் தயாரித்தல் முதலியன ஐந்து தென்னை நாற்றுப் பண்ணைகளில் செயல்விளக்கமாக நிறுவப்பட்டு, விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

**21) நுண்ணீர்ப் பாசனத் திட்டம்**

பாசன நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, பயிர் சாகுபடிப் பரப்பை அதிகப்படுத்தவும், பயிரின் உற்பத்தி, உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், நுண்ணீர்ப் பாசனத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் 6 இலட்சத்து 91 ஆயிரம் ஏக்கர் பரப்பில் 2,114 கோடியே 32 இலட்சம் ரூபாய் நிதியில், 2 இலட்சத்து 82 ஆயிரம் விவசாயிகள் பயனடையும் வகையில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. 2024-2025 ஆம் ஆண்டில், 2 இலட்சத்து 22 ஆயிரம் ஏக்கர் பரப்பில், ஒரு இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 232 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒன்றிய நிதியுடன், 540 கோடியே 73 இலட்சம் ரூபாய் மாநில நிதியை ஒருங்கிணைத்து **773 கோடியே 23 இலட்சம் ரூபாய்** நிதி ஒதுக்கீட்டில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்படும். இத்திட்டத்தில் நிலத்தடி நீர் அதிகம் உறிஞ்சப்பட்டு, நிலத்தடி நீர் அதிகமாகக் குறைந்து வரும் குறு வட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**22) அரசு தோட்டக்கலைப் பண்ணைகள், விவசாயிகளின் நிலங்களில் தானியங்கி மின்னணு பாசன வசதிகள் ஏற்படுத்துதல்**

விவசாயப் பணிகளுக்கு வேலை ஆட்கள் கிடைப்பதில் மிகுந்த சிரமம் உள்ளதால், தானியங்கி முறை மூலம் நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை இயக்கி பாசன நீரை பயிரின் தேவைக்கு ஏற்ப துல்லியமாக வேர்ப்பகுதியில் நேரடியாக அளிப்பதை ஊக்குவிக்கும் வகையில், தானியங்கி அமைப்புகளை நிறுவுவதற்கு, மானியம் வழங்கப்படும். இதற்கென, 2024-2025ஆம் ஆண்டில் **12 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

மேலும், அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் பாசன நீர் பயன்பாட்டுத் திறனை அதிகப்படுத்த, முதற்கட்டமாக 10 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில், 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தானியங்கி நீர்ப்பாசன அமைப்புகள் நிறுவப்பட்டு, அவை மாதிரிப் பண்ணைகளாகவும் செயல்படும்.

**23) தோட்டக்கலைப் பண்ணை இயந்திரக் கண்காட்சி**

தோட்டக்கலைப் பயிர்களில் இயந்திரங்களின் பயன்பாடு மிகவும் இன்றியமையாததாக உள்ள நிலையில், நிலம் சீர்செய்தல் முதல் அறுவடை பின்செய் மேலாண்மை வரையில் பயன்படுத்தப்படும் கருவிகள், இயந்திரங்கள் ஆகியவை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திட, கண்காட்சி ஒன்று நடத்தப்படும். இதனால், விவசாயிகள், தோட்டக்கலை தொழில்முனைவோர்கள், அலுவலர்கள் ஆகியோர் பயனடைவர். இக்கண்காட்சி 10 கோடி ரூபாய் செலவில் ஒன்றிய, மாநில நிதியில் நடத்தப்படும்.

**24) முக்கனி மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டம்**

**“முந்துமுக் கனியின் நானா முதிரையின் முழுத்த நெய்யின் செந்தயிர்க் கண்டங் கண்டம் இடையிடை செறிந்த சோற்றின்”** என்று கம்பராமாயணத்தில் விருந்தோம்பலை எடுத்துக்கூறுமிடத்து, மா, பலா, வாழை என்னும் முக்கனிகள், பலவகைப்பட்ட பருப்புகள், நெய், செந்நிற தயிர்க் கட்டிகளுடன் பரிமாறப்பட்ட அமுதம் போன்ற உணவினை உறவினர்களுடன் சேர்ந்து மக்கள் உண்கின்றனர் என்கிறார் கம்பர்.

இக்கனிகள் அவற்றின் சுவைக்காக வும், ஊட்டச்சத்துகளுக்காகவும் எல்லோராலும் விரும்பப்படுவதால், அவற்றின் பரப்பினையும் உற்பத்தியினையும் அதிகரித்து, அனைவருக்கும் கிடைக்கும் வகையில் மா, பலா, வாழை பயிரிடும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**i) மா: “கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம் பழன வாளை கதூஉ மூரன்”**

என, வயல் அருகில் உள்ள மா மரத்திலிருந்து, பழுத்துத் தானாக விழுகின்ற இனிய பழங்களை வாளை மீன்கள் கவ்வி உண்ணும் வளமிக்க நாட்டினைப் பற்றிக் குறுந்தொகையும்,

**“அடுமகள் முகந்த அளவா வெண்ணெல் தொடிமாண் உலக்கைப் பருஉக்குற்று அரிசி காடி வெள்ளுலைக் கொளீஇ நீழல் ஓங்குசினை மாவின் தீங்கனி நறும்புளி”** என, அரிசியால் ஆக்கிய சோற்றை, புளித்த நீருள்ள உலையில் பெய்து, மிகுந்த நிழல் தரும் கிளைகளையுடைய மாமரத்தின் இனிய மாம்பழங்களைப் பிசைந்து செய்த மணமுள்ள புளிக்குழம்பும் இட்டு உண்டதாகக் கூறி,

பண்டைய உணவில் மாம்பழம் புளிப்பு சுவையளிக்கப் பயன்படுத்தப்பட்டதைப் புறநானூறும் விவரிக்கின்றன. முக்கனிகளில் முதற்கனியான 'மா' வில், தென்னாட்டு இரகங்களான பாதிரி, நீலம், பெங்களூரா, ருமானி, மல்கோவா, பங்கனப்பள்ளி போன்ற விருப்பத்திற்குரிய இரகங்களைக் கொண்டு 4,380 ஏக்கரிலும், ஏற்றுமதிக்கேற்ற இரகங்களான இமாம் பசந்த், இரத்தினகிரி அல்போன்ஸோ, சிந்து போன்ற இரகங்களைக் கொண்டு புதிதாக 250 ஏக்கரிலும் மாந்தோப்புகள் உருவாக்கப்படும். நன்னெறி வேளாண் நடைமுறை, உற்பத்தி முதல் விற்பனை வரை ஒவ்வொரு நிலையிலும் ஏற்றுமதிக்குரிய வகையில் விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படும்.

கவாத்து செய்வதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுவதோடு, 26 ஆயிரத்து 540 ஏக்கர் பரப்பிலான பழைய தோட்டங்களைப் புது ப்பித்து அதிக விளைச்சல் தரும் தோட்டங்களாக மாற்றிட விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படும்.

மேலும், மா பயிரிட்டுள்ள விவசாயி களுக்கு வளர்ச்சி ஊக்கிகள், உயிர் உரங்கள், உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான செயல்விளக்கத்திடல்கள், 6,175 ஏக்கர் பரப்பிற்கு மானியத்தில் வழங்கப்படும்.

**2024-2025ஆம் ஆண்டில் ‘மா’ விற்கான சிறப்புத்திட்டம், 27 கோடியே 48 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

**ii) வாழை:** உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழைக்கான தேவை அதிகரித்துள்ளதால் வாழை உற்பத்தியை அதிகரிக்க, 5,220 ஏக்கரில் வாழை பரப்பு விரிவாக்கம் செய்யப்படும். விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க, குலைகொண்ட வாழைகள் காற்றில் விழுந்து சேதமடைவதைத் தடுக்கும் வகையில் 3,700 ஏக்கரில்கழிகளைக்கொண்டுமுட்டுக்கொடுத்தல்




மேற்கொள்ள மானியம் வழங்கப்படும். சேதம், கறைகளற்ற தரமான வாழைத்தார்கள் உற்பத்தி செய்து அதிக விலை கிடைக்கப்பெறும் வகையில், வாழைத்தார் உறைகள் **4,440 ஏக்கருக்கு வழங்கப்படும். 2024-2025ஆம் ஆண்டில் வாழைக்கான சிறப்புத்திட்டம், 12 கோடியே 73 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

**iii) பலா:** 2023-2024ஆம் ஆண்டில், 1,850 ஏக்கர் பரப்பில் செயல்படுத்தப்பட்டதன் தொடர்ச்சியாக, 2024-2025ஆம் ஆண்டிலும், பலாவில் உள்ளூர் இரகங்கள் 620 ஏக்கரிலும், புதிய இரகங்கள் 620 ஏக்கரிலும் பரப்பு விரிவாக்கம் செய்யவும், பலா விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த உரம், பூச்சி மேலாண்மைக்கான இடுபொருட்கள், பயிற்சிகள் வழங்கவும், பலா பதப்படுத்தும் கூடங்கள் அமைக்கவும், ஒரு கோடியே 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**25) குளிர்மண்டலப் பழப்பயிர்களின் பழைய தோட்டங்களைப் புதுப்பித்தல்**

கொடைக்கானலில் பயிரிடப்பட்டுள்ள பேரிக்காய், பிளம்ஸ் போன்ற குளிர் மண்டல பழப்பயிர்களின் பழைய இரகங்களை, புதிய இரகங்களைக் கொண்டு ஒட்டுக்கட்டுதல் மூலம் புதுப்பித்து மரங்களின் மகசூலை அதிகரித்திட மானியம் வழங்கப்படும். இத்திட்டம், 370 ஏக்கர் பரப்பளவில், 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**26) புதிய அரசு தோட்டக்கலைப் பண்ணைகள், பூங்காக்கள் அமைத்தல்**

**i) முல்லைப் பூங்கா:** ஐவகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றான காடும் காடு சார்ந்த இடத்தைச் சேர்ந்த முல்லை நிலத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்வியல், புவியியல் நிலைகளை எடுத்துக்காட்டும் விதமாக, முல்லைப் பூங்கா கன்னியாகுமரியில் உள்ள வேளிமலையில், 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**ii) மருதம் பூங்கா:** வயலும் வயல் சார்ந்த இடத்தைச் சேர்ந்த மருத நில மக்களின் வாழ்வியலையும், மரங்களையும், செடிகளையும் எடுத்துக்காட்டும் வகையில் காவிரி ஆற்றின் படுகையில் வளம் செறிந்த வயல் வெளிகள் நிறைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் திருமலைச் சமுத்திரம் என்ற இடத்தில், 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் “மருதம் பூங்கா” அமைக்கப்படும்.

**iii) சூரியத் தோட்டம்:** தமிழ்நாட்டில் பிரபல சுற்றுலாத்தலமாக கன்னியாகுமரி விளங்கு கிறது. கன்னியாகுமரியில் சூரிய உதயப்புள்ளிக்கும் மறைவுப் புள்ளிக்கும் இடையே ஒரு தோட்டம் அமைத்தால் அது பார்வையாளர்களை மிகவும் கவரும். இதனைக் கருத்தில் கொண்டு, கடற்கரை அருகில் **சூரியத் தோட்டம், 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**

**iv) செம்பருத்தி நடவுச்செடிகள் உற்பத்தி மையம்:** செம்பருத்தி, உணவு, அழகு சாதனப் பொருட்கள், மருத்துவப் பொருட்கள் போன்றவை உற்பத்தி செய்யப் பயன்படுகிறது. மேலும், செம்பருத்திப் பூ இதழ்களிலிருந்து தயாரிக்கப்படும் தேநீர், இரத்த அழுத்தம், மன அழுத்தம், கொழுப்பு, உடல் எடை ஆகியவற்றைக் குறைக்க உதவுகிறது. இத்தகைய சிறப்புமிக்க செம்பருத்தியை பொதுமக்களிடம் கொண்டு செல்ல, செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூரில், ஒரு கோடி ரூபாய் செலவில் செம்பருத்தி நடவுச்செடிகள் உற்பத்தி மையம் அமைக்கப்படும்.

**v) நடுவக்குறிச்சியில் புதிய அரசு தோட்டக்கலைப் பண்ணை:** இனத்தூய்மையான, தரமான நடவுச் செடிகளை உரிய நேரத்தில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு நியாயமான விலையில் வழங்கவும், விவசாயிகளுக்கு மாதிரி செயல் விளக்கப் பண்ணையாகச் செயல்படவும், தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம், நடுவக்குறிச்சி கிராமத்தில் நான்கு ஏக்கர் நிலப்பரப்பில் புதிய அரசுத் தோட்டக்கலைப் பண்ணை, ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**vi) ஊட்டி ரோஜா பூங்காவில் புதிய ரோஜா இரகங்களை அறிமுகம் செய்தல்**

உதகையில் அரசு ரோஜா பூங்காவில் பெரிய, சிறிய வகை ரோஜாக்கள், கொடி ரோஜா போன்ற 4,201 வகைகளை உள்ளடக்கிய 32,000 ரோஜாச் செடிகள் உள்ளன. இந்த உலகப் புகழ் பெற்ற அரசு ரோஜா பூங்காவில் ஆண்டுக்கு சராசரியாக 10 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்து அனைத்து வகையான ரோஜாக்களையும் கண்டு மகிழ்கின்றனர். இப்பூங்காவின் ரோஜா தொகுப்பினைச் செறிவூட்டும் வகையில், முதற்கட்டமாக, 100 புதிய இரக ரோஜா வகைகள் நடவு செய்யப்பட்டு சுற்றுலாப் பயணிகளை மேலும் கவரும் வண்ணம் இப்பூங்கா மேம்படுத்தப்படும்.

**27) மூலிகைப் பயிர் சாகுபடியை ஊக்குவித்தல்**

பாரம்பரிய மருத்துவத்தின் மகத்துவத்தை மக்கள் உணர்ந்துள்ளதால், மூலிகைப் பயிர்களின் பயன்பாடு தற்போது அதிகரித்துள்ள சூழ்நிலையில், மூலிகைப் பயிர் சாகுபடியை ஊக்குவிக்கவும், மூலிகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உதவவும், கண்வலிக் கிழங்கு (செங்காந்தள்), சென்னா, நித்தியகல்யாணி, மருந்துக்கூர்க்கன் (Coleus) போன்ற மூலிகைப் பயிர்களை 1,680 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்வதற்கு, 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**28) ஒருங்கிணைந்த முந்திரி வளர்ச்சித் திட்டம்**

தமிழ்நாட்டில், முந்திரி இரண்டு இலட்சத்து ஏழாயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, ஆண்டிற்கு சுமார் 43,500 மெட்ரிக் டன் முந்திரிப் பருப்பு உற்பத்தியாகிறது. மேலும், 4 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு முந்திரி பதப்படுத்தும் வசதிகள் இருந்தும், அதற்கான மூலப் பொருளான முந்திரி 10 சதவீதம் மட்டுமே இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, முந்திரி சாகுபடிப் பரப்பை அதிகரித்து உற்பத்தியை உயர்த்திட, 2 கோடியே 36 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், தரமான முந்திரியை விளைவிக்க இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் 2,470 ஏக்கர் பரப்பளவில் செயல் விளக்கம் அமைத்திட, ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**29) மிளகாய் பயிர் ஊக்குவிப்புத் திட்டம்**

கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, 2,470 ஏக்கர் பரப்பில் சீமைக்கருவேல மரங்கள் அகற்றப்பட்டு மிளகாய் பயிரிடப்பட்டது. 2024-2025ஆம் ஆண்டிலும், மிளகாய் மண்டலம் ஏற்படுத்தப்பட்ட பகுதிகளான இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி, மாவட்டங்களில் மிளகாய் உற்பத்தியை அதிகரிக்க, 1,230 ஏக்கர் பரப்பில் சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்பட்டு மிளகாய் சாகுபடி செய்யப்படும். மேலும், நெல், இதர தானியங்களின் அறுவடைக்குப்பின்பு, 3,700 ஏக்கர் பரப்பளவில் மிளகாய் பயிரிட ஊக்குவிக்கப்படும். இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் தேவைப்படும் இடங்களில் 200 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டு நீர் ஆதாரங்கள் ஏற்படுத்தப்படும். இதற்கென, **3 கோடியே 67 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**30) மரவள்ளியில் மாவுப்பூச்சியினைக் கட்டுப்படுத்துதல்**

மரவள்ளி அதிகமாகப் பயிரிடும் மாவட்டங்களில் ஏற்படும் மாவுப்பூச்சி தாக்குதலால் உற்பத்தி குறைந்து, விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் விதமாக ஒருங்கிணைந்த உர, பூச்சி மேலாண்மைக்காக 21,000 ஏக்கருக்கு, ஒரு கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கப்படும்.

**31) பேரீச்சை சாகுபடி**

இரும்பு சத்து அதிகமுள்ள பேரீச்சை சாகுபடியை தமிழ்நாட்டில் 250 ஏக்கர் பரப்பில் விரிவாக்கம் செய்ய, 30 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

**32) கொய்யாவில் பூச்சி மேலாண்மை**

கொய்யாவில் அறுவடைக் காலங்களில் உருவாகும் பழ ஈக்களால் அதிக சேதம் ஏற்பட்டு மகசூல் பாதிக்கப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் விதமாக 10,000 ஏக்கருக்கு இனக்கவர்ச்சிப் பொறிகள் வழங்கிட, 50 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதியிலிருந்து ஒதுக்கப்படும்

**33)பந்தல் காய்கறிகள் ஊக்குவிப்புத் திட்டம்**

பந்தல் காய்கறிகளான பாகல், புடல், பீர்க்கன், சுரை போன்ற கொடி வகைக் காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்கவும், உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், தரமான விளைபொருட்களைப் பெறவும் உயர் தொழில்நுட்பமான நிரந்தரப் பந்தல் அமைப்பது இன்றியமையாதது. **2024-2025ஆம் ஆண்டில், 770 ஏக்கர் பரப்பளவில், 9 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிரந்தரப் பந்தல் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.**

**34)பாரம்பரியஇரகங்களுக்குமுக்கியத்துவம்**

அன்னை ஊட்டிய அமுதினைக் கண் முன்னே நிறுத்தும் சிறப்புடைய பாரம்பரிய காய்கறி இரகங்களை தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து மீட்டெடுத்து விவசாயிகளிடையே அந்த இரகங்களை ஊக்குவிக்கும் வகையிலும், 2,470 ஏக்கர் பரப்பு விரிவாக்கம் செய்யவும், 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**35) அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் நடவுச்செடிகள் விற்பனை மையம்**

அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் தோட்டக்கலை நடவுச் செடிகள், உயிர் உரங்கள், மண்புழு உரம், உயிரி பூச்சிக்கொல்லிகள், தோட்டக்கலை விளைபொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களோடு, வீட்டுத் தோட்டத்திற்குத் தேவையான மண்தொட்டிகள், செடிவளர்ப்புப் பைகள், கருவிகள் ஆகியவையும் பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்குமாறு விற்பனை செய்ய, முக்கிய சாலைகளை ஒட்டி அமைந்துள்ள பத்து அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் தோட்டக்கலை விற்பனை மையங்கள், ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**36)வட்டாரம் தோறும் தோட்டக்கலைப் பயிர்களுக்கான செயல் விளக்கம்**

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட வருவாய் கிராமங்களில் உள்ள விவசாயிகளை ஊக்குவிக்க, வட்டாரத்திற்கு ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களின் திட்டக்கூறுகளும் ஒரு விவசாயியின் நிலத்தில் ஒரு எக்டர் பரப்பளவில் செயல்விளக்கத் திடலாக அமைக்கப்படும். இதனால், அக்கிராமத்திலும் வட்டாரத்திலும் உள்ள அனைத்து விவசாயிகளும் தொழில்நுட்பச் செயலாக்கத்தை நேரில் கண்டறிந்து, பின்பற்றிட வழிவகை செய்யப்படும்.

**37)தொகுப்பு முறை சாகுபடியினை தொழில்நுட்ப ஆலோசனைகள் மூலம் வலுப்படுத்துதல்**

2023-2024ஆம் ஆண்டு முதல் தொகுப்பு முறை சாகுபடியினை ஊக்குவிக்கும் விதத்தில் செயல்படுத்தப்பட்டு வரும், மல்லிகை இயக்கம், பலா இயக்கம், மிளகாய் இயக்கம், கறிவேப்பிலை இயக்கம் ஆகிய இயக்கங்களை வலுப்படுத்துவதற்காக, நவீன உயர் தொழில்நுட்பச் சாகுபடிகுறித்தஆலோசனைகள்விவசாயிகளின் தேவைக்கேற்பத் தோட்டக்கலைத்துறை வல்லுநர்களால் தொடர்ந்து வழங்கப்படும்.

**38) வட்டார அலுவலகங்களில் தகவல் மையம் ஏற்படுத்தி விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல்.**

உற்பத்தி, உற்பத்தித் திறனை அதிகரிக்கக் கூடிய சாகுபடித் தொழில்நுட்பங்கள், புதிய உயர் விளைச்சல் இரகங்கள், சந்தை வாய்ப்புகள், அதற்குரிய அரசுத் திட்டங்கள் குறித்த தகவல்கள் விவசாயிகளுக்கு எளிதாகக் கிடைத்திட, ஒவ்வொரு தோட்டக்கலை வட்டார அலுவலகத்திலும் தகவல் மையம் அமைக்கப்படும்.

**39) பருவமில்லா காலங்களிலும் முருங்கை உற்பத்தி**

தமிழ்நாட்டில் முருங்கை 51,800 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டாலும் ஆண்டுதோறும் அக்டோபர் முதல் ஜனவரி மாதம் வரை முருங்கைக் காய்களின் வரத்து குறைவாகவே உள்ளது. நெகிழி விரிப்பான் கொண்டு முருங்கை மரத்தினை மூடுவதால் இலைகள், பூக்கள் உதிர்வதைத் தடுத்து பருவமில்லா காலங்களிலும் உற்பத்தியை உறுதி செய்திடும் நோக்கில், முதல்கட்டமாக இத்தொழில்நுட்பம் சிறிய அளவில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் சோதனை முறையில் செயல்படுத்தப்படும்.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

# மொத்த சாகுபடி பரப்பளவு 155 லட்சம் ஏக்கராக அதிகரிப்பு!

## வேளாண் நிதிநிலை அறிக்கை!... 5ஆம் பக்கத் தொடர்ச்சி

**வேளாண்மைப் பொறியியல் துறை**

**40) வேளாண் இயந்திரமயமாக்குதல்**

**'பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்**
**உடும்பு முக முழுக்கொழு மூழ்க ஊன்றி'**

என்ற பெரும்பாணாற்றுப்படை தொடரில் பண்டைய காலத்திலேயே நிலத்தை உழ 'ஏர்' கருவி பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதன் மூலம் வேளாண்மையில் கருவிகளின் பயன்பாடு உணர்த்தப்பட்டுள்ளது.

வேளாண்மைத் தொழிலை ஆட்பற்றாக்குறையினால் நலிவுறாமல் காப்பதற்கு வேளாண் இயந்திரமயமாக்குதல் இன்றியமையாதது என்பதால், வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டம் தற்போது பெருமளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் விளையும் பயிர்களுக்கு ஏற்ற உழவு, நடவு, களையெடுத்தல், பயிர் மேலாண்மை, அறுவடை, பயிர்க்கழிவு மேலாண்மை போன்ற பணிகளை மேற்கொள்ள, பல்வேறு மாவட்ட விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, டிராக்டர், சுழற் கலப்பை, வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவி, நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், களையெடுக்கும் கருவி, தெளிப்பான்கள், டிரோன், நெல் அறுவடை இயந்திரம், பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம் போன்ற வேளாண் இயந்திரங்கள், கருவிகள், விளைபொருட்களை உலரவைத்து மதிப்புக் கூட்டிட சூரிய கூடார உலர்த்திகள் ஆகியவை விவசாயிகள் பயனடையும் வகையில் மானியத்தில் வழங்கப்படும்.

மேலும், சிறு, குறு விவசாயிகள் தங்கள் சிறிய நிலப்பரப்பில் வேளாண் பணிகளைத் தாங்களே மேற்கொள்ள உதவும் வகையில், நடப்பாண்டில் பவர் டில்லர்கள், பவர் வீடர்கள் மொத்தம் 5,000 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, **2024 - 2025ஆம் ஆண்டில், பவர் டில்லர்களின் மானியத் தொகையானது 85 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டு, பவர் டில்லர்கள் 4,000 விவசாயிகளுக்கும், பவர் வீடர்கள் 4,000 விவசாயிகளுக்கும் வழங்கப்படும்.**

வயல்வெளிகளில் இரவு நேரங்களில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பாம்புக்கடிப் பிரச்சினை, மழைக்காலங்களில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்திடும் வகையில், தங்களது கிணறுகளுக்குச் செல்லாமலேயே மின்சார இணைப்பு பம்பு செட்டுகளை எங்கிருந்தாலும் எளிமையாக இயக்கவும், அவற்றின் இயக்கத்தினைக் கண்காணிக்கவும் கைபேசியால் இயங்கும் தானியங்கி பம்புசெட்டு கட்டுப்படுத்தும் கருவிகளை 10,000 விவசாயிகள் வாங்கிப் பயனடையும் வகையில், 50 சதவீத மானிய அடிப்படையில் அதிகபட்சமாக ஏழாயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும்.

**வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தில் 26 ஆயிரத்து 179 விவசாயிகள் பயனடையும் வகையில், 20242025ஆம் ஆண்டில் 170 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**41) எளியோர்க்கென இயந்திர வாடகை மையங்கள்**

விவசாயிகளிடையே அதிகரித்து வரும் வேளாண் இயந்திரத் தேவையினை நிவர்த்தி செய்து, உயர்மதிப்பு வேளாண் இயந்திரங்கள் பயன்பாட்டினை ஊக்குவிக்க, தனியார் வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க விவசாயிகள், ஊரகத் தொழில்முனைவோர்கள், விவசாயச் சங்கங்கள், விவசாயக் கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு அரசு மானியம் வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, பல்வேறு மாவட்ட விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, **2024-2025ஆம் ஆண்டில், 207 வேளாண் இயந்திர வாடகை மையங்கள், மொத்தம் 32 கோடியே 90 இலட்சம் ரூபாய் மானியத்தில் அமைக்கப்படும்.**

மேலும், தனியார் வேளாண் இயந்திர உரிமையாளர்கள், விவசாயிகளை ஒருங்கிணைத்திட "தனியார் வேளாண் இயந்திரங்கள் வாடகை சேவை கைபேசி செயலி", 50 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

**42) வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திர வாடகை திட்டத்தினை வலுப்படுத்துதல்**

வேளாண்மைப் பொறியியல் துறையின் 2,700 வேளாண் இயந்திரங்கள், கருவிகள், இவாடகை ஆன்லைன் செயலி மூலமாக விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இப்பணிக்கு மேலும் வலு சேர்க்க, 2024 - 2025ஆம் ஆண்டில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

i) 85 மண்தள்ளும் இயந்திரங்களை எடுத்துச் செல்வதற்காக, 20 கனரக வாகனங்கள் கொள்முதல்,

ii) வேளாண் இயந்திரங்கள், உபகரணங்களைப் பாதுகாக்க, பழுது நீக்க, 25 வட்டாரங்களில் வேளாண் இயந்திரக் கூடாரங்கள்,

iii) 10 டிராக் வகை நெல் அறுவடை இயந்திரங்கள், 10 நெல் அறுவடை இயந்திரத்தினை சுமந்து செல்லும் வாகனங்கள் கொள்முதல்,

iv) அதிக தேவையுள்ள வேளாண் கருவிகள், மண் அள்ளும் இயந்திரங்களுக்கான உதிரி பாகங்கள், கிரேன்கள், மின்சார ஜெனரேட்டர்கள் கொள்முதல்,

v) வேளாண் இயந்திரங்களைச் சுத்தம் செய்து, பயன்படுத்தத் தேவையான வேளாண் இயந்திரங்கள் பராமரிப்புக்கான தொகுப்புகள் கொள்முதல்,

ஆகிய பணிகளை மேற்கொள்ள **மொத்தம் 28 கோடியே 82 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**43) சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் வாங்கிடக் கூடுதல் மானியம்**

பல்வேறு கருத்துக்கேட்புக் கூட்டங்களில், உழவர் பெருமக்கள் கோரியபடி, வேலையாட்கள் பற்றாக்குறை காரணமாக குறித்த நேரத்தில் வேளாண் பணிகளை மேற்கொள்வதில் சிறு, குறு விவசாயிகளுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்கும் வகையில், நெல் நாற்று நடவு இயந்திரங்கள் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்களை வாங்கிப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க, நடைமுறையிலுள்ள 50 சதவீத மானியத்துடன் கூடுதலாக 10 சதவீத மானியம் சேர்த்து, மொத்தமாக 60 சதவீத மானியம் வழங்கிட, 2024-2025ஆம் ஆண்டில் 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**44) நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரங்கள்**

கொள்முதலுக்கு ஏற்றவாறு நெல்லின் ஈரப்பதத்தைக் குறைப்பதன் மூலம் நெல்லின் சேமிப்புக் காலம் அதிகரிக்கும். இதனைக் கருத்தில் கொண்டு, விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தில், தனிப்பட்ட விவசாயிகள், விவசாய சுய உதவிக் குழுக்கள், விவசாயக் கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், தொழில் முனைவோர்களுக்கு, 10 நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரங்கள் மானியத்தில் வழங்கிட, 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**45) வேளாண் இயந்திரங்களைப் பரவலாக்குதலுக்கான நடவடிக்கைகள்**

விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், கருவிகளை இயக்குதல், பராமரித்தல் தொடர்பான மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் நடத்தப்படுவதோடு, தொழில்நுட்பக் கையேடும் தயார் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கும், கள அலுவலர்களுக்கும் பகிரப்படும்.

**46) நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள் செயல்விளக்கம்**

நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள் 30 இலட்சம் ரூபாய் செலவில் அரசு இயந்திரக் கலப்பை பணிமனைகளில் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்வதுடன், குறைந்த வாடகைக்கும் வழங்கப்படும்.

மேலும், புதுமையான வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடத்தில் ஊக்குவிக்கும் பொருட்டும், அத்தொழில்நுட்பங்களுக்கு ஒன்றிய அரசின் திட்டங்களின் கீழ் மானியம் வழங்கிட ஆவன செய்திடவும், 2024 -2025ஆம் ஆண்டில் பல்வேறு தனியார், அரசு, ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, புதுமையான தொழில்நுட்பங்கள் குறித்த செயல் விளக்கங்கள் நடத்தப்படும்.

**47) பயிர்களைக் காத்திட சூரிய சக்தி மின் வேலிகள்**

**"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு"** என்பது வள்ளுவர் வாக்கு.

வறட்சி, மழை, வெள்ளம், பூச்சித் தாக்குதல் போன்ற பல சவால்களுக்கிடையே, தான் இளைத்தாலும் பயிர்கள் செழிக்கப்பாடுபடும் விவசாயிகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பது விளைந்த பயிர்களுக்கு விலங்குகளால் ஏற்படும் சேதாரமாகும். அதிகரித்து வரும் மனிதவிலங்கு மோதல்களால், பாடுபட்டு வளர்த்த பயிர்கள் பாழாகும் நிலையை மாற்றி, விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் ஆபத்தில்லாமல் பயிர்களைக் காத்திடும் நோக் கில், **2024 - 2025ஆம் ஆண்டில், 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் விவசாயிகளுக்கு 75 ஆயிரம் மீட்டர் நீளத்திற்கு சூரிய சக்தி மின்வேலிகள் அமைத்துத் தரப்படும்.**

**48) நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் அமைத்தல், பராமரித்தல்**

குளம் தொட்டு, வளம் பெருக்கி வாழ்ந்த தமிழ் நாட்டில், விவசாயத்திற்குத் தேவைப்படும் நீர்ப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு, மழை நீரைச் சேகரித்து, நிலத்தடி நீர் மட்டத்தினை அதிகரிக்க, புதிய நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் அமைத்திடவும், ஏற்கனவே அமைக்கப்பட்ட நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளைத் தூர்வாரி, ஆழப்படுத்தி அவற்றின் கொள்ளளவை அதிகரிக்கவும், 2024 - 2025ஆம் ஆண்டில், பல்வேறு நீர்வடிப்பகுதிகளில் 100 புதிய நீர்சேகரிப்புக் கட்டமைப்புகள் அமைக்கப்படுவதோடு, 500 நீர்சேகரிப் புக் கட்டமைப்புகளில் பராமரிப்புப் பணிகளும், 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.




**49) டெல்டா மாவட்டங்களில் "சி", "டி" பிரிவு வாய்க்கால்களைத் தூர்வாருதல்**

கடந்த இரண்டு ஆண்டுகளில் செயல்படுத்தியதைப் போலவே, மூன்றாம் கட்டமாக, 2024-2025ஆம் ஆண்டில், காவேரி, வெண்ணாறு, கல்லணை வடிநிலப்பகுதிகளில் உள்ள தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், அரியலூர், திருச்சி ஆகிய ஏழு மாவட்டங்களில், ஒரு இலட்சத்து 57 ஆயிரம் ஏக்கர் பயன் பெறும் வகையில், 2,235 கிலோ மீட்டர் நீளத்திற்கு "சி", "டி" பிரிவு வாய்க்கால்களைத் தூர்வாரும் பணிகள், 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**50) விவசாயிகளுக்கு மழை நீர் சேகரிப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண்மைப் பொறியில் துறையும், வேளாண் அறிவியல் நிலையங்களும் இணைந்து, விவசாயிகளுக்கு மழை நீர் சேகரிப்பு முறைகளான கோடை உழவு, பண்ணைக் குட்டை, தடுப்பணை போன்ற மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளின் முக்கியத்துவம், அவற்றினை பராமரித்தல் போன்றவை குறித்து துண்டு பிரசுரங்கள், காணொலிக் காட்சிகள், வானொலி செய்திகள், செயல் விளக்கங்கள், கருத்தரங்குகள், கிராம அளவிலான விவசாய முகாம்கள், கிராம சபைக் கூட்டங்கள், பட்டறிவுப் பயணங்கள் போன்ற உத்திகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும்.

**வேளாண்மை விற்பனை வேளாண் வணிகத் துறை**

வியர்வை சிந்தி, விளைந்த பலனை விவசாயிகள் முழுமையாக அடையும் நோக்கத்தினை ஈடேற்றும் வகையில், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைக்கும் தொழில்நுட்பங்கள், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், சந்தை இணைப்பு வழிமுறைகள், ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், உழவர் சந்தைகள் வாயிலாக நியாயமான விலை, வெளிப்படையான வர்த்தகம், மின்னணு, இணைய வழி வர்த்தக நடைமுறைகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**51) தானியங்களை உலர்த்துவதற்கு நடமாடும் உலர்த்திகள்**

உணவு தானியங்களின் ஈரப்பதம் சரியான அளவில் பராமரிக்கப்பட்டு, நீண்ட நாட்களுக்கு வீணாகாமல் சேமித்து வைக்க ஏதுவாக, திருவண்ணாமலை, தருமபுரி, விழுப்புரம், கடலூர், இராணிப்பேட்டை, திருவள்ளூர், தஞ்சாவூர் நாகப்பட்டினம், திருவாரூர், தேனி ஆகிய 10 மாவட்டங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு, தானியங்களை உலர்த்துவதற்கான நடமாடும் உலர்த்திகள், 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்படும்.

**52) மஞ்சள் மெருகூட்டும் இயந்திரம்**

நாட்டின் முக்கியமான மஞ்சள் சந்தைகளில் ஒன்றானது ஈரோடு. அறுவடைக்குப்பின் மஞ்சளைப் பதப்படுத்தி, மெருகேற்றம் செய்வதன் மூலம் மஞ்சளின் சேமிப்புக்காலமும் தரமும் மேம்படுத்தப்படுகிறது. எனவே, மஞ்சள் விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக மஞ்சளுக்கென ஐந்து மெருகூட்டும் இயந்திரங்களும், எட்டு மஞ்சள் வேகவைக்கும் இயந்திரங்களும், 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதியில், ஈரோடு, கள்ளக்குறிச்சி, தருமபுரி மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்படும்.

**53) மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களுக்குப் பொது முத்திரை, சிப்பமிடல் வசதிகள்**

விவசாயிகளின் வருமானத்தை உயர்த்திட, விளைபொருட்களைத் தனியார் நிறுவனங்களுக்கு நிகராக மதிப்புக்கூட்டி திறம்பட சந்தைப்படுத்தி, விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வேளாண் தொழில்முனைவோர்களின் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கான பொது முத்திரை வடிவமைக்கப்படும். சிப்பம் கட்டுவதற்கும், முத்திரையிடுவதற்குமான பொதுக் கட்டமைப்பு வசதிகள் சென்னையிலும் கோவையிலும், 4 கோடியே 10 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

**54) கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் பலா மதிப்பு கூட்டுதலுக்கான மையம்**

முக்கனிகளில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கும் பலாவில் நிறைவான ஆரோக்கியத்திற்குத் தேவையான சத்துக்கள் செறிந்துள்ளன. பலாவிலிருந்து பல்வேறு மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. இதற்கென, பண்ருட்டியில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, பல்வேறு மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை ஏற்றுமதித் தரத்தில் தயாரித்து விற்பனை செய்திட ஏதுவாக, பலா மதிப்புக்கூட்டுதலுக்கான மையம், 16 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒன்றிய, மாநில அரசு நிதியில் ஏற்படுத்தப்படும்.

**55) பெரம்பலூர் மாவட்டத்தில் சிறுதானியங்களுக்கான தொழில்நுட்ப வணிக மேம்பாட்டு மையம்**

பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோளம், சிறுதானியங்கள் பயிரிடும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, தேவையான கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தொழில்நுட்ப வணிக மேம்பாட்டு மையம், 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இங்கு சிறுதானியங்கள், மக்காச்சோளம் மதிப்புக்கூட்டும் தொழில்நுட்பங்கள் குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், விவசாயிகள், சுய உதவிக் குழுக்கள், உழவர் ஆர்வலர் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும்.

**56) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கட்டமைப்பு வசதிகளைப் புதுப்பித்தல்**

தமிழ்நாட்டில் 2023-2024ஆம் ஆண்டில், 100 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் கட்டமைப்புகளைப் புதுப்பிக்க, 47 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2024-2025ஆம் ஆண்டில் 100 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் கட்டமைப்பு வசதிகள், 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

**57) வேளாண் விளைபொருட்களுக்குப் புவிசார் குறியீடு**

**புவிசார் குறியீடு** பெறப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துவதால் அவற்றின் தேவை, ஏற்றுமதி அளவு ஆகியன அதிகரிக்கும். எனவே, நமது மண்ணின் அடையாளங்களான மாநிலத்தின் தனித்துவமான 25 வேளாண் விளைபொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெற கடந்த மூன்று ஆண்டுகளில், விண்ணப்பிக்கப் பட்டுள்ளது. இதே போல், 2024 - 2025ஆம் ஆண்டில் சத்தியமங்கலம் செவ்வாழை (ஈரோடு), கொல்லிமலை மிளகு (நாமக்கல்), மீனம்பூர் சீரக சம்பா (இராணிப்பேட்டை), ஐயம்பாளையம் நெட்டைத் தென்னை (திண்டுக்கல்), உரிகம்புளி (கிருஷ்ணகிரி), புவனகிரி மிதி பாகற்காய் (கடலூர்), செஞ்சோளம் (சேலம், கரூர்), திருநெல்வேலி அவுரி இலை (திருநெல்வேலி), ஓடைப்பட்டி விதையில்லா திராட்சை (தேனி), செங்காந்தள் (கண்வலி) விதை (கரூர், திண்டுக்கல், திருப்பூர்) ஆகிய 10 பொருட்களுக்குப் புவிசார் குறியீடு, 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பெறப்படும்.

**58) அப்பீடா (APEDA) பயிற்சி பெற்ற விவசாயிகளை ஏற்றுமதியாளர்களாக்குதல்**

பல்வேறு மாவட்ட விவசாயிகளின் கோரிக்கைக் கிணங்க, மா, தென்னை, சிறுதானியங்கள்,முருங்கை, மஞ்சள், சின்ன வெங்காயம், வெள்ளரி ஆகியவற்றைப் பயிரிடும், அப்பீடா பயிற்சி பெற்ற நூறு விவசாயிகளைத் தேர்வு செய்து, அவர்களை நூற்றுக்கு நூறு ஏற்றுமதியாளர்களாக மாற்றுவதற்கான உரிய சான்றிதழ்களைப் பெற்றுத் தரும் பொருட்டு, ஒரு நபருக்கு 15,000 ரூபாய் வீதம் 15 இலட்சம் ரூபாய் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**59)விளைபொருட்களின் விற்பனையை இணைய வழி வர்த்தகத் தளங்களுடன் இணைத்தல்**

புதிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கிட, இணையவழி வர்த்தக நிறுவனங்கள் வாயிலாக உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோருக்குமான இணைப்பினை ஏற்படுத்தி விளைபொருட்களை விற்பனை செய்ய உகந்த சூழல் உருவாக்கப்படும். இதன் மூலம் உற்பத்தியாளர்களுக்குக் கூடுதல் வருவாயும், தரமான பொருட்கள் நுகர்வோர்களுக்கு நியாயமான விலையிலும் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

**60)வேளாண் வர்த்தக மேம்பாட்டிற்கான முனைப்புகள்**

விளைவித்த விவசாயியே விலை வைக்கும் நிலையினை உருவாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும். வர்த்தகம் மேம்பட விவசாயிகளின் விளைபொருட்கள் இருப்பையும், வர்த்தகர்களின் தேவையையும் இணைத்து சமூக வலைதளக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுடன் இணைக்கப்படும். அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள், சந்தைப்படுத்துதல், தரம் பிரித்தல், மதிப்புக் கூட்டுதல், ஏற்றுமதி வழிமுறைகள் போன்றவை குறித்து ஒவ்வொரு வட்டாரத்திலும் இரண்டு கிராமங்கள் வீதம் மாதம் ஒன்றிற்கு, 770 தீவிர விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு இரண்டாண்டுகளில் அனைத்து கிராமங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

**61) பண்ணை வழி வர்த்தகத்தை ஊக்குவித்தல் (Facilitating Farm Gate Trade)**

## மேலும் 50,000 மின் இணைப்புகள்!

தமிழ்நாட்டிலுள்ள 284 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், 157 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் (eNAM) ஒருங்கிணைக்கப்பட்டு வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது வரை, 40 கோடி ரூபாய் மதிப்புள்ள 8,300 மெட்ரிக் டன் வேளாண் விளைபொருட்கள் விவசாயிகளின் விளைநிலங்களிலேயே வணிகம் செய்யப்பட்டுள்ளன.

2024-2025ஆம் ஆண்டில் பண்ணை வழி வர்த்தகம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு 60 கோடி ரூபாய் மதிப்பிலான விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சிறந்த விலை கிடைக்க வழி வகை செய்யப்படும்.

**62) விவசாயிகளுக்குப் பொருளீட்டுக் கடன் வரம்பினை உயர்த்துதல்**

அறுவடைக் காலங்களில் வேளாண் விளை பொருட்களின் அதிக வரத்து காரணமாக ஏற்படும் விலை வீழ்ச்சியைத் தவிர்க்க, விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் பொருட்களை இருப்பு வைத்து, பொருளீட்டுக்கடன் பெறுகின்றனர். இவ்வாறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் பொருளீட்டுக்கடனின் வரம்பு, 3 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

**63) சேமிப்புக் கிடங்குகளுக்கு கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் அங்கீகாரம்**

மின்னணு மாற்றத்தகு கிடங்கு இரசீது (eNegotiable Warehouse Receipt) முறை 150 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களிலுள்ள சேமிப்புக் கிடங்குகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2024 - 2025ஆம் ஆண்டில், கூடுதலாக 100 சேமிப்புக் கிடங்குகளுக்கு, கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் அங்கீகாரம் பெறப்பட்டு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன்பெற வழிவகை செய்யப்படும்.

**64) புத்தாக்க நிறுவனங்களை (Startup) ஊக்குவித்தல்**

வேளாண்மை, வேளாண் சார்ந்த தொழில் தொடங்கும் புத்தாக்க நிறுவனங்களைக் கண்டறிந்து, அவற்றின் நோக்கம், செயல்பாடு, வணிக திட்டத்தினை ஆய்வு செய்து, தகுதியுள்ள புத்தாக்க நிறுவனங்களுக்கு மானியம் அளித்து மேம்படுத்திட, 10 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**65) வேளாண் கண்காட்சிகள்**

2023-2024ஆம் ஆண்டில் சென்னையிலும், திருச்சியிலும் நடத்தப்பட்ட வேளாண் கண்காட்சிகளுக்கு விவசாயிகள், பொதுமக்களிடையே கிடைத்த பெரும் வரவேற்பினைத் தொடர்ந்து, 2024 - 2025ஆம் ஆண்டிலும், மூன்று இடங்களில் வேளாண் கண்காட்சிகள் நடத்தப்படும். இதற்கென 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை**

விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை இனி விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத்துறை என பெயர் மாற்றம் செய்யப்படும்.

**66) விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையினால்,**

- ஒருங்கிணைந்த விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு வளாகம் கரூர், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் அமைக்கவும்,




- விதை மரபணு தூய்மையை உறுதி செய்வதற்காக, தானியங்கி மூன்றாம் தலைமுறை டிஎன்ஏ மார்க்கர் அடிப்படையிலான தொழில்நுட்பங்களுடன் கூடிய ஆய்வகத்தை கோயம்புத்தூரில் அமைக்கவும்,
- தமிழ்நாட்டில் உயிர்மச் சான்றளிப்பை ஊக்குவிக்கும் வகையில், தேசிய உயிர்ம உற்பத்தி திட்டத்தில் பதிவு செய்யப்பட்டு உயிர்ம நிலையை அடைந்த விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கிடவும்,
- தருமபுரி, காஞ்சிபுரம், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி ஆகிய ஆறு விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு NABL (National Accreditation Board for Testing and Calibration Laboratories) தரச்சான்று பெற்றிடவும்,
- உயிர்ம விளைபொருட்களில் இருக்கும் நச்சுப்பொருட்களின் தன்மையினை விவசாயிகள் அறிந்து, அதன் தரத்தை உறுதிப்படுத்தி ஏற்றுமதி செய்ய, எஞ்சிய நச்சு மதிப்பீடு பரிசோதனை செய்வதற்கான கட்டணத்திற்கு முழு மானியம் வழங்கவும், 2024 - 2025ஆம் ஆண்டில் 9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இது தவிர, முன்னணி விதை நிறுவனங்களின் விதைகள் மாற்றுப்பெயரில் சந்தையில் வராமல் கண்காணித்து, விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கிடைக்கச்செய்யும் வகையில் புதிய பதிவு முறை அறிமுகப்படுத்தப்படுவதோடு, தனியார் நாற்றங்கால்களில் உற்பத்தி செய்யப்படும் நாற்றுகள், நடவுப்பொருட்களின் தரம், அவற்றுக்கான விதைகள் பெறப்பட்ட இடம் ஆகியவை விதைச்சட்டத்தின்படி உறுதி செய்யப்படும். அதிக விளைச்சலைத் தரும் தரமான வீரிய ஒட்டு மக்காச்சோள விதைகள் விவசாயிகளுக்குக் கிடைக்கும் வகையில் சான்றளிப்பு, விதை ஆய்வு, விதைப்பரிசோதனை போன்ற நடவடிக்கைகள் விதைச்சட்டங்கள் மூலம் மேற்கொள்ளப்படும்.

**தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை**

67) **பெரம்பலூர், தூத்துக்குடி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தருமபுரி, திண்டுக்கல், விருதுநகர்** ஆகிய ஏழு மாவட்டங்களில், 25 வட்டாரங்களிலுள்ள **275** நீர்வடிப்பகுதிகளில், **43 கோடி ரூபாய் மதிப்பீட்டில்** இயற்கை வள மேம்பாட்டுப் பணிகள், உற்பத்திப் பணிகள், வாழ்வாதாரப் பணிகள் ஆகியவை நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் 2024-2025ஆம் ஆண்டில் ஒன்றிய, மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

68) **தோட்டக்கலைப் பயிர்களுக்கு வேளாண் இடுபொருட்களை துல்லியமாகத் தெளிக்கச் செய்வதற்கான ட்ரோன் தெளிக்கும் தொழில்நுட்பம்**

தோட்டக்கலைப் பயிர்களுக்கான வேளாண் இடுபொருட்களை ட்ரோன்கள் மூலம் துல்லியமாகத் தெளிக்கச் செய்வதற்கான தொழில்நுட்பங்களை உருவாக்கி, கிராமப்புர இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும் பொருட்டு, பயிற்சி, செயல் விளக்கத் திடல்கள் ஏற்படுத்தப்படும்.

**69) நீரிழிவு நோயாளிக்கு ஏற்ற, சத்துகள் செறிவூட்டப்பட்ட நெல் இரகங்களை உருவாக்குதல்**

குறைந்த சர்க்கரை அளவு குறியீடு (Low Glycemic Index), அதிக ஊட்டச்சத்து உள்ள பாரம்பரிய நெல் இரகங்களை மேம்படுத்தவும், நேரடி நெல் விதைப்பிற்கு ஏற்ற நெல் இரகங்களை, துரித இனப்பெருக்க முறை வாயிலாக உருவாக்கவும், தேவையான ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**70) மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு, வெங்காயம் சாகுபடியில் இயந்திரமயமாக்கல்**

தமிழ்நாட்டில் மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு, வெங்காய சாகுபடியினை இயந்திரமயமாக்குவதற்கு சாத்தியக்கூறு சோதனை, இயந்திரங்கள் உற்பத்தி, செயல்விளக்கங்கள் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

**தொடர்ச்சி 7 ஆம் பக்கம்**

# உணவு தானிய உற்பத்தி 116 மெட்ரிக் டன்னாக அதிகரிப்பு!

## வேளாண் நிதி நிலை அறிக்கை... 6 ஆம் பக்கத் தொடர்ச்சி

**71) நிலசம்பங்கி, செவ்வந்தி, ரோஜாவில் புதிய இரகங்களுக்கான ஆராய்ச்சி**

நிலசம்பங்கி, செவ்வந்தி, ரோஜா ஆகிய தோட்டக்கலைப் பயிர்களில் புதுமையான மரபியல் முறைகளைக் கையாண்டு, மேம்பட்ட பண்புகளைக் கொண்ட இரகங்களை உருவாக்குவதற்குத் தேவையான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டங்களுக்காக, 5 கோடியே 44 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**72) தமிழ்நாடு வேளாண் பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEX)**

உணவு பதப்படுத்தும் திட்டத்தில், தற்போது வரை, 627 கோடியே 65 இலட்சம் ரூபாய் அளவிற்கான கடன், மொத்தம் 10,548 குழுக்களுக்கும் தனி நபர்களுக்கும் வழங்கப்பட்டு, மானியமாக 196 கோடியே 89 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. **நாட்டிலேயே இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்கு, ஒட்டு மொத்த செயல்பாட்டிற்கான விருதினை நம் மாநிலம் பெற்றுள்ளதை இம்மாமன்றத்தில் பெருமிதத்துடன் பதிவு செய்கிறேன்.**

தமிழ்நாடு வேளாண் பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 2024-2025ஆம் ஆண்டில்,

i) தருமபுரி, திண்டுக்கல், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள வேளாண் முதன்மை பதப்படுத்தும் மையங்களின் பயன்பாட்டை அதிகரிக்க அவற்றில் மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கும் தொழில் கூடங்களும்,

ii) வேளாண் தொழில் பெருந்தடமாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றான தஞ்சாவூரில் வேளாண் விளை பொருட்கள், கழிவுகளிலிருந்து ஏற்றுமதி சந்தை வாய்ப்புள்ள மூலக்கூறுகளைப் பிரித்தெடுப்பதற்கான கட்டமைப்புகளும்.

iii) கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, வேலூர் ஆகிய இடங்களில் ஏற்றுமதி தரப் பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்குவதற்கான உணவுப்பரிசோதனை ஆய்வகங்களும்,

iv) அரிசி, மா, வாழை, கொய்யா, தக்காளி, மிளகாய் போன்ற வேளாண்விளை பொருட்களுக்கும், கடல் சார் மீன் பொருட்களுக்கும், இடுபொருள் வழங்கல், உற்பத்தி, அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, பதப்படுத்துதல், நுகர்வு மேலாண்மை போன்ற பல்வேறு செயல்பாடுகளை உள்ளடக்கிய மதிப்புச் சங்கிலிகள் உருவாக்கிடும் திட்டம் உட்பட மேற்கண்ட திட்டங்கள் மொத்தம் 72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**73) கூட்டுறவு, உணவு, நுகர்வோர் பாதுகாப்பு**

**i) கூட்டுறவு பயிர்க்கடன்**

2022-2023ஆம் நிதியாண்டில், இதுவரை இல்லாத அளவிற்கு, 13,442 கோடி ரூபாய் பயிர்க்கடனாக 17 இலட்சத்து 44 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2023-2024ஆம் நிதியாண்டில், 16,500 கோடி ரூபாய் பயிர்க்கடன் என்ற உயரிய இலக்கினை நிர்ணயித்து, இதுவரை 13,600 கோடி ரூபாய் பயிர்க்கடனாக, 16 இலட்சத்து 19 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. **2024-2025ஆம் ஆண்டிற்கு, பயிர்க்கடன் வழங்க 16,500 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

2023-2024ஆம் ஆண்டில் ஆடு, மாடு, கோழி, மீன் வளர்ப்போருக்கு பராமரிப்பு, நடைமுறை முதலீட்டுக் கடன் இலக்காக, 2,300 கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 1,900 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.




2024-2025ஆம் ஆண்டிற்கு, பயிர்க்கடன் வட்டி மானியத்திற்கென 700 கோடி ரூபாயும், ஆடு, மாடு, கோழி, மீன் வளர்ப்போருக்கு நடைமுறை முதலீட்டுக் கடன் வட்டி மானியத்திற்கென, 200 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், கூட்டுறவு கடன் வழங்கும் நிறுவனங்களை, குறிப்பாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளைக் கணினிமயமாக்கும் திட்டம் 141 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது. இதனால், கூட்டுறவு நிறுவனங்கள் கடன் வழங்கும் முறை இணையமயமாக்கப்பட்டு, கடன் ஒப்பளிப்பு வழங்கும் நேரம் குறைக்கப்பட்டு, வெளிப்படைத் தன்மை மேம்படுத்தப்படும்.

**ii) பல்நோக்கு சேவை மையம்**

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் செயல்பாடுகளை விரிவுபடுத்தி வேளாண் சேவை மையங்கள், ஊரக வணிக நிலையங்கள், பதப்படுத்தும் நிலையங்கள், சேமிப்புக் கிடங்குகள் ஆகியவற்றை உள்ளடக்கி ஊரக மக்களுக்குப் பயனளிக்கும் வகையில், பல்நோக்கு சேவை மையங்களாக அவற்றை உருவாக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கென, 2,609 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு 4,757 திட்டங்களுக்காக, 457 கோடி ரூபாய் ஒப்பளிக்கப்பட்டு இதுவரை, 341 கோடி ரூபாய் கடனாக விடுவிக்கப்பட்டுள்ளது. இது தவிர, வேளாண் கட்டமைப்பு நிதியின் வட்டி மானியம் பெற்று 1,380 வேளாண் இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள் இவாடகை (உழவன் செயலி) செயலியில் இணைக்கப்பட்டு, அதன்மூலம் குறைந்த வாடகைக்கு இயந்திரங்கள் பெற்று விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.

**iii) மின்னணு வங்கி சேவைகள்**

நாட்டிலேயே முதன்முறையாக கூட்டுறவு வங்கிகளில் ஒருங்கிணைந்த பணப் பரிவர்த்தனை அமைப்பு (UPI) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், UPI, NEFT உள்ளிட்ட மின்னணு வங்கியியல் சேவைகள் மாதந்தோறும் ஒரு கோடிக்கும் அதிகமான வாடிக்கையாளர்களால் பயன்படுத்தப்பட்டு, சராசரியாக 30 இலட்சம் பரிவர்த்தனைகள் 17,000 கோடி ரூபாய் அளவில் கூட்டுறவு வங்கிகளில் நடைபெற்று வருகின்றன.

**iv) நேரடி நெல் கொள்முதல்**

நெல் அரவைத் திறனை மேலும் அதிகரித்திட, ஆறு புதிய நவீன அரிசி ஆலைகள் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படவுள்ளன. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொணரப்பட்ட நெல்மணிகளை இயற்கையின் இடர்ப்பாடுகளிலிருந்து காத்திட, நெல் சேமிப்புக் கட்டமைப்புகள் 18 இடங்களில் 238 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. மேலும், 250 மெட்ரிக் டன் கொள்ளளவிலான

55 எண்ணிக்கையிலான நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

**2024-2025ஆம் ஆண்டில், உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் உணவு மானியத்திற்கு, 10,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசின் நெல் கொள்முதல் ஊக்கத் தொகை வழங்குவதற்கு என, 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**74) நீர்வளத் துறை**

நீரினைச் சேமித்து பாசனத்தினை மேம்படுத்தும் நோக்கத்தில் கதவணைகள், நீரொழுங்கிகள், தடுப்பணைகள், கால்வாய்கள், ஏரிகள் அமைத்தல், மாநிலத்திற்குள் நதிகளை இணைத்தல், நிலத்தடிநீரைச் செறிவூட்டுதல் போன்ற பணிகளை நீர்வளத்துறை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிலேயே ஒவ்வொரு ஆண்டும் தேவையான நிதியினை ஒதுக்கி, தென்மேற்குப் பருவ மழை துவங்கும் முன்பே, தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால், காவிரி நீர் கடைமடை வரை செல்வது உறுதி செய்யப்படுகிறது. **2024-2025ஆம் ஆண்டில், காவிரி டெல்டா பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை தொடங்கும் முன், 5,338 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஆறுகள், கால்வாய்கள், வாய்க்கால்களைத் தூர்வாருவதற்கு, 110 கோடி ரூபாய் செலவில், 919 பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**75) கால்நடை பராமரிப்பு**

தீவனப் பயிர் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமும், கால்நடைகளுக்கான மருத்துவ வசதி அளிப்பதாலும் பால் உற்பத்தியை உயர்த்த இயலும். 2022-2023, 2023-2024ஆம் ஆண்டுகளில் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டு, 2,000 ஏக்கர் தோப்புகள், பழத்தோட்டங்களில் ஊடுபயிராகத் தீவனசாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றியினைத் தொடர்ந்து, 2024-2025ஆம் ஆண்டில் தோப்புகள், பழத்தோட்டங்களில் 5,000 ஏக்கர் பரப்பில் தீவனப்பயிரை ஊடுபயிராகப் பயிரிட ஏதுவாக, இத்திட்டம் 2 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்..

**76) மீன்வளம்**

உள்நாட்டு மீன்வளர்ப்போரை ஊக்குவித்து, உள்ளூர் சந்தைகளின் மீன் தேவையினைப் நிறைவு செய்திடும் வகையில், புதிதாக நன்னீர் மீன்வளர்ப்புக் குளங்கள் அமைத்தல், இடுபொருள் மானியம் வழங்குதல், உயிர்க்கூழ்ம முறையில் மீன்வளர்ப்பு, நீரினை மறுசுழற்சி செய்து மீன்வளர்ப்பு, மீன்தீவன ஆலை அமைத்தல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்திட, மொத்தம் 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும். இத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், மீன்வளர்ப்போரின் வருவாய் கணிசமாக உயர்வதுடன் உள்நாட்டு மீன் உற்பத்தியும் அதிகரிக்கும்.

## பசுந்தாள் உரம் பரிட ரூ.20 கோடி ஒதுக்கீடு!

**77) ஊரக வளர்ச்சி**

**i) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் இயற்கை வள மேம்பாட்டுப் பணிகளான தடுப்பணைகள், பண்ணைக்குட்டைகள், நீர் செறிவூட்டு குழிகள், கல் வரப்பு போன்ற பல்வேறு வகையான பணிகளோடு நிலத்தடி நீர், மண்ணின் ஈரப்பதத்தை மேம்படுத்தத் தேவையான வறட்சித் தடுப்பு, நில மேம்பாடு, சிறு பாசன மேம்பாடு, பாரம்பரிய நீர்நிலைகள் புதுப்பித்தல் போன்ற விவசாயம் சார்ந்த பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊரகப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்குச் சந்தைகளுடனான இணைப்பை உறுதி செய்வதற்கும், விவசாய விளைபொருட்களின் போக்குவரத்தை எளிதாக்குவதற்கும், சாலை இணைப்பு இல்லாத பழங்குடியின குடியிருப்புகள் உள்ள மலைப்பகுதிகளுக்கு ஓரடுக்கு கப்பிச்சாலை வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

2024-2025ஆம் ஆண்டில் பண்ணைக் குட்டைகள், நீர் செறிவூட்டுத் தண்டுகள், கசிவு நீர் குட்டை, செறிவூட்டு கிணறுகள், புதிய குளங்கள், மண் வரப்பு, கல் வரப்பு போன்ற இரண்டு இலட்சம் பணிகள் 7,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**ii) பண்ணை மகளிர் சுய உதவிக் குழுக்கள்**

விதைப்பு முதல் வேளாண்மை தொடர்பான அனைத்துப் பணிகளிலும் மகளிரின் பங்கு மிக முக்கியமாகும். எனவே, 2024-2025ஆம் ஆண்டில், ஆர்வமுள்ள, பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களைக் கொண்டு, தோட்டக்கலைத்துறையின் ஒருங்கிணைப்பின் மூலம், 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 60 தென்னை நாற்றுப்பண்ணைகள் அமைக்கப்படும். தென்னங்கன்றுகள் தோட்டக்கலைத் துறையினால் கொள்முதல் செய்யப்பட்டு, அரசுத் திட்டங்களின் கீழ் விநியோகிக்கப்படும்.

மேலும், வேளாண் உற்பத்திக்கு விதையே முக்கிய இடுபொருள் என்பதால், பயறு வகைகள், எண்ணெய்வித்துகளில், 100 விதை உற்பத்தித் தொகுப்புகள் அமைப்பதற்கு, 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். இதற்குத் தேவையான பயிற்சியும், ஆதார விதைகளும் வேளாண்மைத்துறை வழங்குவதுடன், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த விதைகளை, உற்பத்தி மானியம் வழங்கி வேளாண்மைத் துறையே கொள்முதல் செய்து, வேளாண்மைவிரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.




**78) எரிசக்தித் துறை**

பாசன வேளாண்மையினால் ஏற்படும் ஆதாயங்களை உணர்ந்து நிலத்தடி நீரினைப் பயன்படுத்தி விவசாயிகள் அதிக உற்பத்தி செய்து உலகுக்கு அளித்து, தாமும் உய்யவேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு, வேளாண் பாசனத்திற்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை, 23 இலட்சத்து 51 ஆயிரம் இலவச மின் இணைப்புகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தேவையான கட்டணத் தொகையாக, சுமார் 7,280 கோடி ரூபாய் நிதியினை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு அரசு வழங்கும்.

**79) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை**

i) தருமபுரி, திருப்பூர், புதுக்கோட்டை, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய ஏழு மாவட்டங்களின் 55 வட்டங்களில் உள்ள 110 கிராமங்களில் வறட்சித் தணிப்பிற்கான சிறப்பு உதவித் திட்டம், 2024-2025ஆம் ஆண்டு முதல், 110 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

ii) தமிழ்நாட்டில் விளைவிக்கப்படும் பயிர்களின் விவரங்களைக் கணக்கிடுவதற்கான மின்னணு முறையிலான பயிராய்வு (Digital Crop Survey) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனைக் கொண்டு 2024-2025ஆம் ஆண்டு முதல் இணையவழியில் விவசாயிகளுக்கு அடங்கல் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**80) பனை பொருள் வளர்ச்சி பனை மேம்பாட்டு இயக்கம்**

தமிழ்நாட்டில் பனை மரங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவதை அரசு கவனத்தில் கொண்டு, பனை மரங்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கும் பொருட்டு, மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து பனை மேம்பாட்டு இயக்கத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில், 47 இலட்சம் பனை விதைகள் நடப்பட்டதுடன், 950 நபர்களுக்குத் தரமான பனை வெல்லம், பனங்கற்கண்டு, மதிப்புக் கூட்டுப் பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சியும் கருவிகளும் அளிக்கப்பட்டு, 350 மகளிருக்கு பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியும் கருவிகளும் வழங்கப்பட்டன.

2024-2025ஆம் ஆண்டில், பனை சாகுபடியினை ஊக்குவிக்க, 10 இலட்சம் பனை விதைகள் தோட்டக்கலைத் துறையின் மூலம் நடப்படும். மேலும், பனைத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு 200 பனைத் தொழிலாளர்களுக்கு, தரமான பனை வெல்லம், பனங்கற்கண்டு, பிற மதிப்புக் கூட்டுப் பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சிகளும், 100 மகளிருக்கு பனை ஓலைப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியும், பயிற்சி பெற்ற அனைவருக்கும் உரிய கருவிகளும் வழங்கப்படும். இதற்கென, ஒரு கோடியே 14 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2024-2025ஆம் ஆண்டில் வேளாண்மை மற்றும் அதன் தொடர்புடைய துறைகளான கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, பால்வளத்துறை, நீர்வள ஆதாரத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, உணவுத்துறை, கூட்டுறவுத்துறை, வருவாய்த்துறை, வனத்துறை, பட்டு வளர்ச்சித் துறை ஆகியவற்றின் மானியக் கோரிக்கைகளின் கீழ் 42 ஆயிரத்து 281 கோடியே 87 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அட்டவணை 1)

உழவர்களின் பெருந்தன்மையை புறநானூற்றுப்பாடல்

**"வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்**
**குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅமையின்**
**குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து**

விதைக்காக விடப்பட்டிருக்கும் தினையையும், விருப்பத்துடன் உரலில் இட்டு இடித்துச் சமைத்து உணவு அளிப்பவர்கள் உழவர்கள் என்று உழவர்களின் உன்னதப்பண்பை உணர்த்துகிறது. வறியநிலையில் இருந்தாலும், பெருந்தன்மையோடு இருக்கும் இத்தகைய உழவர் பெருமக்களின் நலனைப் பேணிக்காக்கும் அரசுதான் நம் அரசு.

**"வான்நோக்கி வாழும் உலகுஎல்லாம் மன்னவன்**
**கோல்நோக்கி வாழும் குடி"**

**(திருக்குறள் 542)**

உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவதுபோல ஒரு நாட்டில் குடிமக்கள் வாழ்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது,

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க, நல்லாட்சி செய்துவரும் **முதலமைச்சர் அவர்கள்** உழவர் நலன்காக்க, இந்த மாமன்றத்தில் கடந்த ஆண்டுகளைப் போலவே, தமிழ்நாட்டின் நான்காம் வேளாண் நிதிநிலை அறிக்கையையும் தாக்கல் செய்யும் அரிதினும் அரிதான பொன்னான வாய்ப்பினை எனக்கு அளித்ததற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எல்லாம் ஆயிரம் ஆயிரமாய்**

**"அடிசில் வைகல் ஆயிரம் அறப்புறமும் ஆயிரம்**
**கொடியனார் செய் கோலமும் வைகல்தோறும் ஆயிரம்**
**மடிவுஇல் கம்மியர்களோடும் மங்கலமும் ஆயிரம்**
**ஒடிவுஇலை வேறுஆயிரம் ஓம்புவாரின் ஓம்பலே".**

**...... (சீவகசிந்தாமணி. 76)**

வளம் நிறைந்த நாட்டில் உள்ள ஊர்களில் நாள்தோறும் கிடைக்கும் உணவு வகைகள் ஆயிரம்; அறச்சாலைகள் ஆயிரம்; அங்கே மகளிர் ஒப்பனை செய்துகொள்ள மணிமாடங்கள் ஆயிரம்; மேலும், செய்தொழிலில் சிறிதும் சோம்பல் இல்லாத கம்மியர் ஆயிரம்; அதனால் நிகழும் திருமணங்களும் ஆயிரம்; நாட்டில் தவிர்தலின்றிக் காவல் செய்யும் பாதுகாவலரும் ஆயிரம் எனும் திருத்தக்கதேவர் அவர்கள் சீவகசிந்தாமணி காப்பியத்தில் கூறியுள்ளதைப் போலவே, மக்களின் பசியையும் விவசாயிகளின் வறுமையையும் அறவே அழித்தொழித்தல், உணவுப் பாதுகாப்பை அளித்தல், ஊட்டச்சத்துள்ள உணவை வழங்குதல், வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், இயற்கை வளங்களைச் சிறப்பாகக் கையாளுதல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், வளங்குன்றாத வளர்ச்சியினை அடைதல் ஆகிய பணிகளில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் சிறப்பாக நடைபெற்று வரும் வேளாண்மை உழவர் நலத்துறையின் பங்களிப்பினை மேலும் மெருகூட்டி, வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதே நான்காம் வேளாண் நிதிநிலை அறிக்கையின் மேன்மையான நோக்கமாகும்.

வரும் நிதியாண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப, அறிவிக்கப்பட்ட திட்டங்களில் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து, மேலும் சிறப்பாகத் திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்படும்.

இந்த மகத்துவமான நான்காம் தனி வேளாண் நிதிநிலை அறிக்கையானது விவசாயத்திற்குத் தொடர்புடைய அனைவரையும் இணைக்கும் பலம் பொருந்திய பாலமாக இருக்கப் போகிறது என்பதை உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் மூன்று வேளாண் நிதிநிலை அறிக்கைகளையும் சீரிய முறையில் தயாரித்து இம்மாமன்றத்தில் சமர்ப்பித்தது போல, நான்காம் நிதிநிலை அறிக்கையினையும் பல்வேறு புதிய திட்டங்களுடன் உருவாக்கிட எனக்கு உறுதுணையாக இருந்த தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா அவர்களுக்கும், நிதித்துறை அரசு முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் அவர்களுக்கும், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா அவர்களுக்கும், துறைத் தலைவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்நாடு!

வளர்க வேளாண்மை !

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேளாண் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து உரையாற்றினார்.

## தமிழ்நாடு சட்டப் பேரவையில் வேளாண் நிதி நிலை அறிக்கை!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் 117 மணித்துளிகள் பேசினார்!



சென்னை, பிப். 21-

தமிழ்நாடு சட்டப் பேரவையில் நேற்று வேளாண்மை துறைக்கான 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை வேளாண் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தாக்கல் செய்து உரை நிகழ்த்தினார்.

10 மணியளவில் துவங்கிய அவரது உரை 11.57 மணி வரை 117 மணித் துளிகள் நீடித்தது.

அவரது உரையில் பல்வேறு அறிவிப்புகள் இடம் பெற்றிருந்தன. அறிவிப்புகள் தெரிவிக்கும்போதெல்லாம் உறுப்பினர்கள் மேஜையைத் தட்டி மகிழ்வை வெளிப்படுத்தினர்.

# நாடும் ஏடும் போற்றும் நனி சிறந்த பட்ஜெட்!

TUESDAY February 20, 2024 CHENNAI CITY EDITION 20 Pages ₹5.00
THE HINDU www.thehindu.com
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878



- Government to cover **higher education expenses of transpersons**. All such expenses, including tuition and hostel fees, of transpersons aspiring to pursue higher education will be covered. An additional grant of **₹2 crore** will be given to the Transgender Welfare Board
- The **Tamizh Pudhalvan scheme to benefit boys** who have studied in government schools from **Class VI to Class XII**, by crediting **₹1,000** a month to their bank accounts for higher education

## Breakfast scheme extended to aided schools in rural areas

The Hindu Bureau
CHENNAI

The Chief Minister's Breakfast Scheme will be extended to government aided schools in rural areas from the coming academic year. It will benefit around 2.5 lakh more students of Classes I-V, Finance Minister Thangam Thennarasu said on Monday.

In his Budget speech, he announced an allocation of ₹600 crore in the next financial year to implement this vision of the Chief Minister, who said: "We are willing to make any sacrifice to ensure widespread access to school education, foster enjoyable learning experience, and ensure that students learn without hunger."

**Hostels for women**

The Minister said that new 'Thozhi hostels' would be constructed this year, in cities such as Chennai, Coimbatore and Madurai, at a cost of ₹26 crore, benefiting 345 women.

Another significant announcement is the decision to cover all educational expenses, including tuition and hostel fees, of transpersons pursuing higher education.

An additional allocation of ₹2 crore will be made to the Transgender Welfare Board by the government for this initiative in the coming year, the Minister said.

**Reforms of govt. homes**

The government will also implement reforms based on the recommendations of a committee, chaired by former judge K. Chandru, for the efficient operation and administration of Government Observation Homes, Special Homes, and Places of Safety.

The Department under which these homes function, currently known as the Directorate of Social Defence, will be renamed as the Department of Children Welfare and Special Services.

ILLUSTRATION: SOUMYADIP SINHA

தலையங்கம்

தினத் தந்தி

20.2.2024 (செவ்வாய்க்கிழமை)

## தடைகளைத் தாண்டி வளர்ச்சியை நோக்கிய பட்ஜெட் இது




THE NEW INDIAN EXPRESS



7 pillars of CM's grand Tamil dream: Social justice, welfare of marginalised, welfare of women, transforming Tamils into global achievers, knowledge-based economy, sustainable green future, (promotion of) Tamil language and culture

இந்து தமிழ் திசை 10 செவ்வாய், பிப்ரவரி 20, 2024

இந்து தமிழ் திசை

செவ்வாய், பிப்ரவரி 20, 2024

## நம்பிக்கையளிக்கும் பட்ஜெட்!

தமிழ்நாட்டின் நிதியமைச்சராகத் தனது முதல் பட்ஜெட்டைத் தாக்கல் செய்திருக்கிறார் தங்கம் தென்னரசு. சமீபத்தில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடர்களால் தமிழ்நாட்டின் நிதிநிலையில் பின்னடைவு ஏற்பட்டதால், பெரிய அளவிலான அறிவிப்புகள் இடம்பெறுமா என்ற ஐயம் நிலவியது. ஆனால், ஆக்கபூர்வமான பல அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளன. மக்களவைத் தேர்தல் நெருங்கிவரும் நேரத்தில் தாக்கலாகியிருக்கும் இந்த பட்ஜெட்டில் மக்களை ஈர்க்கும் அறிவிப்புகள் நிறையவே உள்ளன.

தமிழ்நாட்டில் முதன்முறையாகப் புத்தொழில் மாநாடு, 6 ஆண்டுகளில் 8 லட்சம் கான்கிரீட் வீடுகள், கிராமச் சாலைகளுக்கு ரூ.1,000 கோடி ஒதுக்கீடு, 5 லட்சம் ஏழைக் குடும்பங்களைக் கண்டறிந்து வறுமையை அகற்றும் திட்டம், கீழடி உள்பட 8 இடங்களில் அகழாய்வு மேற்கொள்ள ரூ.5 கோடி ஒதுக்கீடு என்பன உள்ளிட்ட அறிவிப்புகள் நம்பிக்கையளிக்கின்றன.

வளர்ச்சியின் கரங்கள் சென்னைக்கு வெளியிலும் நீள வேண்டும் என்ற குரல்கள் வலுத்துவரும் நிலையில், கோயம்புத்தூரில் ரூ.1,100 கோடி மதிப்பில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா; மதுரை, திருச்சி, தஞ்சாவூர் எனத் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி பரவலாகும் என்பன உள்ளிட்ட அறிவிப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. இயற்கைப் பேரிடர்கள் அதிகரித்திருக்கும் நிலையில், வெள்ளம், நில அதிர்வு உள்ளிட்டவற்றைக் கண்காணித்துப் பேரிடர் அபாய அளவைக் குறைக்கத் தொழில்நுட்ப மையம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. விரைவான வானிலை முன்னறிவிப்புகளைப் பெற இந்திய வானிலை ஆராய்ச்சி நிறுவனத்துடன் ஒப்பந்தம் என்பது உள்ளிட்ட அறிவிப்புகளும் இடம்பெற்றிருக்கின்றன. தேசியப் பேரிடர் நிவாரணத்திலிருந்து எந்த நிதியும் தற்போது வரை விடுவிக்கப்படவில்லை என்ற அறிவிப்புடன் இந்தத் திட்டங்கள் கொண்டுவரப்படுவது கவனிக்கத்தக்கது. நாய்க்கடி அச்சுறுத்தல் அதிகரித்திருக்கும் நிலையில், தெரு நாய்களின் இனப்பெருக்கத்தைத் தடுக்க நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் முதன்மை நதிகளைப் புனரமைப்பதற்கான திட்ட அறிக்கை தயாரிப்பு, 2,000 புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க ரூ.365 கோடி ஒதுக்கீடு, மழைநீரைச் சேமிக்கவும், நீர்நிலைகளை மேம்படுத்தவும் ரூ.500 கோடியில் 5,000 நீர்நிலைகளைப் புனரமைக்கும் திட்டம் உள்ளிட்டவை நீர்நிலைப் பாதுகாப்பில் அரசின் முனைப்பைக் காட்டுகின்றன.

காலை உணவுத் திட்டத்தின் காரணமாக, அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் வருகை அதிகரித்திருக்கும் நிலையில், ஊரகப் பகுதிகளில் இயங்கும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படுவது பாராட்டத்தக்கது. 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ், ரூ.200 கோடி மதிப்பீட்டில் 100 கலை-அறிவியல், பொறியியல் கல்லூரிகளில் திறன் ஆய்வகங்கள், மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்காக 6 இடங்களில் பாரா தடகள விளையாட்டு மையங்கள், மதி இறுக்கம் (Autism) உடையோருக்கு ரூ.25 கோடியில் உயர்திறன் மையம், திருநர்களின் கல்லூரிப் படிப்புக்கான முழுச் செலவையும் அரசே ஏற்பது உள்ளிட்டவை வரவேற்கத்தக்க முன்னெடுப்புகள்.

பட்ஜெட் உரையில் திருக்குறள் தொடங்கி பிரமிள் கவிதைகள் வரை மேற்கோள் காட்டியிருக்கும் தங்கம் தென்னரசு, தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்க்க ரூ.2 கோடி, தமிழ் மொழியை நவீனப்படுத்த செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்களை ஊக்குவிக்க ரூ.5 கோடி என்பன உள்ளிட்ட அறிவிப்புகளையும் வெளியிட்டிருக்கிறார்.

இந்த பட்ஜெட் பெருமளவில் ஆக்கபூர்வமானதாகவே அமைந்திருக்கிறது. இந்த அறிவிப்புகள் அரசியல் ஆதாயம் பெறுவதற்கானவை என்ற பேச்சு எழுந்துவிடாமல், அர்ப்பணிப்புடன் அவற்றை நிறைவேற்றுவதுதான் அரசுக்கு அழகு!

தினகரன்

பிப்ரவரி 20, 2024 செவ்வாய்க்கிழமை

## தலைநிமிரச் செய்யும் 2024

DECCAN Chronicle

20 FEBRUARY 2024

## TN budget tries to please all

Ahead of the Lok Sabha polls, the Tamil Nadu government has come out with a dream budget that aims to please all sections of society, particularly the marginalised and the poor. It is not surprising that on social media platforms common people are going gung ho over the budget proposals for 2024-25, read out in the State Assembly by finance minister, Thangam Thennarsu, on Monday. For, it has not just something for everyone to rejoice but has been framed with lofty ideas like social justice, gender equality, poverty eradication, environmental protection, modernization, industrial development and public education in mind.

A futuristic document with proposals for new skill labs in colleges and the setting up of an Artificial Intelligence (AI) Mission, it also takes pride in the past by allocating Rs 17 crore to set up an open-air museum at Keezhadi, the excavation site that gave indisputable evidence to the antiquity of the Tamil race, and launching more archeological explorations.

Besides laying emphasis on spending more on roads and bridges (Rs 17,890 crore), transport (Rs 2,966 crore, urban development (Rs 3,767 crore), water supply (Rs 9,535 crore), water bodies (Rs 4,747 crore) and education and health services (Rs 2,810 crore), it also makes available funds to the tune of Rs 1,000 crore for providing basic amenities in tribal habitations and improving the living conditions of the people there and proposes to rescue five lakh families from the clutches of poverty, besides disbursing Rs 35,000 crore credit to women self-help groups.

In a bold step, the State government that has hitherto been complaining about the Union Government not providing the promised funds for the second phase of the Metro Rail project has now decided to allot Rs 12,000 for completing the work that it had started without waiting for money from Delhi and extend the line up to Kilambakkam to provide connectivity to the new bus terminus that has been constructed for south-bound buses. In short, it's a people oriented budget, drawn up by the DMK government with the coming Lok Sabha elections in mind.

DECCAN Chronicle
THE LARGEST CIRCULATED ENGLISH DAILY IN SOUTH INDIA
CHENNAI TUESDAY 20 FEBRUARY 2024

# Big push for social sector

- 5 lakh families to be rescued from poverty; sop for employing women
- More smart classrooms; ₹1K monthly aid to boys joining for higher education

G. BABU JAYAKUMAR
D. SEKAR | DC
CHENNAI, FEB 19

Presenting a ₹49,278.73 crore deficit budget for the year 2024-25, finance minister Thangam Thennarasu said Tamil Nadu's growth was higher than that of the national GDP, which was a positive sign, and that the growth advantage was expected to continue in the next year through resource augmentation and improvement in revenue collection efficiency.

Addressing the state Assembly, he said the proposals had been prepared on the basis of the seven objectives of the DMK government namely social justice, welfare of the marginalised, transforming young Tamils as global achievers, knowl-... ture.

Comparing the objectives to the colours of the rainbow, Mr Thennasaru came up with a slew of announcements which included the 'Thayumanavar scheme' to launch a final assault on poverty in the next two years by rescuing around five lakh poorest families from the clutches of poverty and the 'Tamil sons scheme' under which boys who studied in government schools from Class 6 to 12 would get an assistance of ₹1,000 a month if they enrolled for higher education.

Among the proposals to improve the transport sector was the allocation of ₹12,000 crore for the Chennai Metro Rail Phase-II and the announcement made through the budget was that the first elevated ...



**INVESTING IN FUTURE**

- Monthly aid of ₹1,000 to government school students
- Hi-Tech labs and smart classrooms: ₹960 crore
- Skill labs in 100 government and aided colleges: ₹200 crores
- Education loans to one lakh college students
- Basic amenities in tribal habitations: ₹1,000 crore
- Credit disbursement to SHGs: ₹35,000 crore
- Vada Chennai Valarchi Thittam: ₹1,000 crore
- Restoration of Adyar River: ₹1,500 crore
- IT park in Coimbatore: ₹1,100 crore
- Textile parks in Virudhunagar and Salem districts: ₹2,483 crore
- Hi-Tech film city in Poonamallee: ₹500 crore
- Plug and play facilities in Coimbatore, Krishnagiri, Tiruvallur districts

God-giver ... rebuild In...

# நாடும் ஏடும் போற்றும் நனி சிறந்த பட்ஜெட்!

## தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

செவ்வாய்க்கிழமை 20-2-2024

### 'சபாஷ்' பட்ஜெட்!

நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தமிழக சட்டப்பேரவையில் தாக்கல் செய்திருக்கும் 2024 - 25 நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் காணப்படும் அறிவிப்புகள் ...

2024 - 25 நிதியாண்டின் வருவாய் ரூ.2,99,010 கோடி எனவும், மொத்த செலவினங்கள் ரூ.3,48,289 கோடி எனவும் நிதிநிலை அறிக்கை தெரிவிக்கிறது. ... பற்றாக்குறை ரூ.49,279 கோடி ... ரூ.49,639.92 கோடி ...

மாநிலத்தின் சொந்த வரி வருவாய் ரூ.1,95,173 கோடி. ... ரூ.30,728 கோடி. ... ரூ.25,354 கோடி ...

## இந்து தமிழ் திசை

INDHU TAMIZH THISAI - TAMIL DAILY
சென்னை பதிப்பு (CHENNAI) • TUESDAY, FEBRUARY 20, 2024

அரசுப் பள்ளியில் படித்து கல்லூரியில் சேர்வதை ஊக்கப்படுத்த

### 3 லட்சம் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000

• தமிழக பட்ஜெட்டில் 'தமிழ் புதல்வன்' திட்டத்தை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்தார். புதிதாக 3,500 பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும், கிராமப்புற பகுதிகளில் 8 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



**பட்ஜெட் முக்கிய அம்சங்கள்**
- ரூ.500 கோடியில் 5,000 நீர்நிலைகள் சீரமைப்பு
- வறுமை ஒழிப்புக்கு 'முதல்வரின் தாயுமானவர்' திட்டம்
- மகளிர் உரிமை திட்டத்துக்கு ரூ.13,720 கோடி
- அரசு உதவி பள்ளிக்கும் காலை உணவு திட்டம்
- கல்லூரி மாணவருக்கு ரூ.2,500 கோடி கல்விக் கடன்
- கிராமப்புறங்களில் சிற்றுந்து சேவை
- நிதி பற்றாக்குறையை குறைத்து சாதனை

## THE NEW INDIAN EXPRESS

TAMIL NADU'S NOMINAL GSDP GROWTH IS EXPECTED TO BE AT 15.9% IN 2024-25; THE STATE'S OUTSTANDING DEBT BY MARCH 2025 WILL TO BE ₹8.33 LAKH CRORE

### GOVT BLOWS POLL BUGLE, COURTS YOUTH, MARGINALISED IN BUDGET

WITH the Lok Sabha polls round the corner, Finance Minister Thangam Thennarasu on Monday presented a please-all budget to "achieve the seven grand Tamil dreams of the CM" by rolling out new schemes and extending old ones. The seven dreams are "social justice, welfare of the marginalised, welfare of women, transforming young Tamils into global achievers, knowledge-based economy, ...

Outlining the government's aim to create a hut-free Tamil Nadu by 2030, Thennarasu said eight lakh concrete houses will be constructed in rural areas under the Kalaignarin Kanavu Illam. In the first phase, one lakh new houses will be built at a cost of ₹3.50 lakh per house at an allocation of ₹3,500 crore, he said.

Referring to the Niti Aayog report that highlighted the remarkably low multidimensional poverty of just 2.2% in the state, ...

Under the Tamizh Pudhalvan scheme, boys studying in government schools in Classes 6 to 12 will get monthly aid of ₹1,000 to realise their higher education dream. The scheme to be implemented at a cost of ₹360 crore this year will benefit three lakh students.

Thennarasu said to upgrade the basic amenities in tribal habitations, 'Tholkudi', a new scheme, will be implemented in four years at an outlay of ₹1,000 crore. ...

**DEFICIT & TANGEDCO**

EXPRESS NEWS SERVICE @Chennai

TAMIL Nadu's outstanding debt will reach ₹8,33,361.80 crore on March 31, 2025, if the government borrows ₹1,55,584.48 crore and makes a repayment of ₹49,638.82 crore, as per budget data. ...

## தினமணி

### ஏழைகளுக்கு 8 லட்சம் கான்கிரீட் வீடுகள்

**கல்லூரி மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000**

**காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்**

**தமிழக பட்ஜெட்டில் அறிவிப்பு**

**7 இலக்குகள்**

சென்னை, பிப். 19: 'குடிசையில்லா தமிழ்நாடு' இலக்கை எட்டும் வகையில், ஏழைகளுக்கு 6 ஆண்டுகளில் 8 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும் என்று சட்டப் பேரவையில் திங்கள்கிழமை தாக்கல் செய்யப்பட்ட தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.



## தினகரன்

ஒரு புதிய அனுபவம்

Dinakaran

அரசு பள்ளிகளில் படித்து கல்லூரிகளில் சேரும்

### மாணவர்களுக்கு மாதம் ₹1000

**தமிழ்நாடு பட்ஜெட்டில் அதிரடி அறிவிப்புகள்**

சென்னை, பிப். 20: 2024-25ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று தாக்கல் செய்தார். அதில், குடிசை இல்லாத தமிழகமாக மாற்ற 8 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும். சென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கு ரூ.12,000 கோடி ஒதுக்கீடு, சென்னை உள்ளிட்ட 5 நகரங்களில் 1000 இடங்களில் இலவச வைஃபை, அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கும் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் விரிவாக்கம், அரசு பள்ளியில் 6 முதல் 12ம் வகுப்பு வரை படித்து உயர் கல்வியில் சேரும் மாணவர்களுக்கு 'தமிழ்ப் புதல்வன்' திட்டத்தின் மூலம் மாதம் ரூ.1000, அடையாறு ஆற்றை சீரமைக்க ரூ.1500 கோடி, சென்னையை ஒட்டி ரூ.500 கோடியில் திரைப்பட நகரம், கோவையில் ஐவுளிப்பூங்கா, விருதுநகர், ஈரோட்டில் ஜவுளி பூங்கா உள்ளிட்ட ஏராளமான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது. ...

**2.07 மணி நேரம் பட்ஜெட்டை படித்த அமைச்சர்**

நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு சட்டப்பேரவையில் நேற்று காலை 10 மணிக்கு 2024-2025ம் ஆண்டுக்கான பட்ஜெட் உரையை வாசிக்க தொடங்கினார். கம்ப்யூட்டரில் 419 பக்கம் கொண்ட பட்ஜெட் உரையை அமைச்சர் மதியம் 12.07 மணிக்கு வாசித்து முடித்தார். முன்னதாக பட்ஜெட் உரை வாசிக்க சட்டப்பேரவைக்குள் முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் காலை 9.58 மணிக்கு வந்தார். அப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மேஜையை தட்டி வரவேற்றனர். தமிழக நிதி அமைச்சராக தங்கம் தென்னரசு படித்த முதல் பட்ஜெட் உரை இது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழக அரசின் பட்ஜெட் உரையை பிரதான எதிர்க்கட்சியான அதிமுக உள்ளிட்ட எந்த கட்சி உறுப்பினர்களும் புறக்கணிக்காமல் இறுதி வரை பேரவையில் இருந்து கவனித்தனர்.



மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு ₹13,720 கோடி

- 8 லட்சம் கான்கிரீட் வீடுகள்
- 5 லட்சம் ஏழைகள் வறுமை ஒழிப்பு
- 3000 புதிய பேருந்துகள்
- ₹4500 கோடியில் கிளாம்பாக்கத்துக்கு மெட்ரோ ரயில்
- 5 நகரங்களில் இலவச வைபை
- அடையாறு ஆற்றை சீர்படுத்த ₹1500 கோடி

25ம் நிதியாண்டுக்கான தமிழ்நாடு அரசின் பட்ஜெட்டை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, மாபெரும் தமிழ்க்கனவு என்ற தலைப்பின் கீழ் பேரவையில் தாக்கல் செய்தார். ...

## தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

கடல்சார் தமிழர்களுக்கு ரூ.35 ஆயிரம் கோடி கடன்

கிராமப்புற ஏழைகளுக்கு 8 லட்சம் கான்கிரீட் வீடுகள்

அரசு பள்ளியில் படித்து கல்லூரியில் சேரும்

### 3 லட்சம் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000

**தமிழக பட்ஜெட்டில் அறிவிப்பு**



அரசு பள்ளியில் படித்து கல்லூரியில் சேரும் 3 லட்சம் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என்று தமிழக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. ...

## தினமலர்

வறுமையை ஒழித்துக்கட்ட தமிழக அரசு...
5 லட்சம் குடும்பங்களை கரை சேர்க்க திட்டம்

சென்னை, பிப். 20–

... 2024 – 25ம் நிதியாண்டுக்கான தமிழக அரசின் பட்ஜெட்டை, நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று சட்டசபையில் தாக்கல் செய்தார்.

... தேர்தல் நெருங்குவதால் சலுகைகளும், புதிய திட்டங்களும், பட்ஜெட்டில் இடம்பெறும் என, பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. அதை, தென்னரசு பொய்யாக்கவில்லை.



... மகளிர் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கும், 'விடியல் பயணம்' திட்டம், நீலகிரி, கொடைக்கானல், வால்பாறை போன்ற மலைப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் ...

பட்ஜெட் தாக்கல் செய்ய முதல்வர் ஸ்டாலினுடன் ... வந்த அமைச்சர் தங்கம் தென்னரசு.

# சிவகங்கையில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - 1500க்கும் மேற்பட்ட கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கினார்!



சிவகங்கை மாவட்டக் கழகம் சார்பில், கூட்டுறவுத் துறை அமைச்சர் – மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் ஏற்பாட்டில் வைரவன்பட்டியில் நடைபெற்ற மாபெரும் விழாவில், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடிகள் 1500–க்கும் மேற்பட்டோருக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பொற்கிழியும், நல உதவிகளும் வழங்கிப் பெருமைச் சேர்த்தார்கள்.



பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் அவர்களின் மகன் முஸம்மில் அஹமது – பாத்திமா பர்ஸானா ஆகியோரின் திருமண விழாவை பாளையங்கோட்டையில் அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து வாழ்த்தினார்.




சிவகங்கை மாவட்டம் – வைரவன் பட்டியில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி பேருரையாற்றினார்.



நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் இல்ல மணவிழாவை அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து வாழ்த்தினார். இதில் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.



இராமநாதபுரத்தில் தி.மு.க. சார்பில் உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் , நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டம் அரண்மனை முன்பு அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. வரவேற்றுப் பேசினார். இந்த பரப்புரைக் கூட்டம் வெற்றிவிழா கூட்டமாக மலரட்டும் என கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, கழக இளைஞரணித் துணைச் செயலாளர் இன்பா ரகு வெள்ளி செங்கோலை வழங்கி வரவேற்றார்.



வைரவன்பட்டியில், பிரம்மாண்டப் பந்தல் கொள்ளாது திரண்டிருந்த கழகத்தினருடன் கரங்குலுக்கி தமது மகிழ்ச்சியைப் பகிர்ந்து வாழ்த்துப் பெறுகிறார், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்!



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக சட்டத்துறை சார்பாக மதுரை வடக்கு மாவட்டம் அய்யர்பங்களாவில் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி வார்ரூமினை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. திறந்து வைத்தார். உடன் சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன், வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வக்கீல் கலாநிதி, மாவட்டப் பொருளாளர் சோமசுந்தரபாண்டியன், வழக்கறிஞர் செல்வகணேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் அமைப்புச் செயலாளர் சிறுகதை மன்னர் எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் 95வது பிறந்த தினத்தை முன்னிட்டு அன்னாரது இல்லத்தில் மாநில தணிக்கைக் குழு உறுப்பினர் வ. வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு ஆகியோர் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.ஜெயராம், மாவட்ட அவைத் தலைவர் ஒச்சு பாலு, பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.ஜி.முத்து கணேஷ், விஜயலட்சுமி பாண்டியன், பகுதிச் செயலாளர் அறிவு நிதி, இளைஞர் அணி சௌந்தர்ராஜன், வட்டச் செயலாளர் ராஜேஷ் கண்ணா, ச.தாமோதரன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சென்னை- செங்கல்பட்டு - நீலகிரி - திருப்பூர் மாவட்டங்களில் - விளையாட்டு வீரர்கள் பயன்பாட்டிற்கு

# ரூ.44 கோடி மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடங்கள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்! பல்வேறு இணையதளச் சேவைகளை துவக்கி வைத்தார்!

சென்னை, பிப்.21-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு வீரர்கள் பயன்பாட்டிற்காக சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க வளாகத்தில் சென்னை, செங்கல்பட்டு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் ரூ. 44 கோடியே 8 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கட்டடங்களையும், பல்வேறு இணையதள சேவைகளையும் துவக்கி வைத்தார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் உரிய பயிற்சி அளித்தல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் திறந்தவெளி விளையாட்டரங்கம், உள் விளையாட்டரங்கம், நீச்சல் குளம் மற்றும் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் சிறு விளையாட்டரங்கம் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களை உருவாக்கும் குறிக்கோளுடனும் சர்வதேச அரங்கை அலங்கரிக்க விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு பயிற்சி அளிப்பதே அகாடமியின் நோக்கமாக கொண்டு சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் வளாகத்தில் ரூ. 17 கோடியே 47 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ள மூன்றடுக்கு கட்டிடத்தில் சென்னை ஒலிம்பிக் அகாடமி அமைக்கப் பட்ட கட்டடம். அகடாமியின் தரைதளத்தில் பன்நோக்கு விளையாட்டுத் தளம், முதல் தளத்தில் டேக்வாண்டோ மற்றும் ஜுடோ விளையாட்டுத் தளம், இரண்டாவது தளத்தில் வாள்வீச்சு தளம் மற்றும் மூன்றாவது தளத்தில் விளையாட்டு அறிவியல் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம், மேல்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ. 5.33 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் கொண்ட கட்டடம், மேலும் ரூ. 4.70 கோடி மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு மையம் அமைக்கப்பட்ட கட்டடம், மேலும் ரூ.2.58 கோடி மதிப்பீட்டில் கெனோயிங் மற்றும் கயாக்கிங்கிற்கான முதன்மை நிலை பயிற்சி மையக் கட்டடம், விளையாட்டு வீரர்கள் சிறந்து விளங்குவதற்கு உதவும் வகையில் அதிநவீன வசதிகள் மற்றும் பயிற்சிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டும் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெறுவதை ஊக்குவிக்கும் பொருட்டும் சிறந்த மையமாக அமையப் பெற்றுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் உடற்பயிற்சிச் கூடம், ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளி களுக்கான குளியலறை கள், கழிவறைகள், இருப்பு அறைகள் மற்றும் பார்வையாளர் மாடம் ஆகிய வசதிகளுடன் கூடிய மாவட்ட விளையாட்டரங்கம் ரூ.9 கோடி மதிப்பீட்டில் கட்டடம் மேலும் நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் தமிழ்நாடு புத்தாக்க முயற்சித் திட்டத்தின் கீழ் விளையாட்டு வீரர்கள் மலை மேலிட பயிற்சி மேற்கொள்ளும்போது, இதய செயல்பாடு, தசை செயல்திறன் மற்றும் ஆரோக்கிய மேம்பாடு, உடற்வலிமை மற்றும் நீடித்து உழைக்கும் திறன் கிடைத்திடும் வகையில் உலக தரம் வாய்ந்த வசதிகளும் அதற்கான உபகரணங்கள் கூடிய மலை மேலிடப் பயிற்சி மையம் முதல் தளத்திலும் அலுவலக அறை, கணிணி அறை, உடற்பயிற்சி அறை, மருத்துவர் அறை, மாணவர்கள் தங்கும் அறை, சமையல் அறை, உணவருந்தும் கூடம் ஆகியவை தரைத்தளத்திலும் அமைக்கப்பட்ட ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட கட்டடத்தை இளைஞர் நலன் மற்றும் விளை யாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மறுசீரமைக்கப்பட்ட, மேம்படுத்தப் பட்ட www.sdat.tn.gov.in என்ற இணையதளத்தையும், இணையதள சேவைகளான விளையாட்டரங்க பதிவு (Stadia Booking), உறுப்பினர் பதிவு (Membership Booking), உரிமம் பெற்ற வளாக நிர்வாக அமைப்பு (Licensed Premises Management System), உயரிய ஊக்கத்தொகை இணையவழி விண்ணப்பம் (Online High Cash Incentive Application) மற்றும் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் சான்றிதழ்களை Digilocker இணையதளம் வாயிலாக பெறுதல் ஆகிய சேவைகளை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

கடந்த பிப்ரவரி மாதம் 9 முதல் 19 வயதுக்குட்பட்ட 14 ஆட்டிசம் வீரர்கள் கடலூர் சில்வர் கடற்கரையில் இருந்து சென்னை மெரினாக் கடற்கரை வரையிலான 165 கிலோ மீட்டர் தூரத்தை 4 நாட்களில் நீந்திச் சாதனை படைத்த வீரர்களுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்து சிறப்புப் பரிசினை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதி மற்றும் அனைத்துத் தரப்பு மக்களின்

# சமமான வளர்ச்சிக்கான நிதிநிலை அறிக்கை!

## விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் பாராட்டு!

சென்னை, பிப். 21 -

இதுகுறித்து பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு அரசு நிதி நிலை அறிக்கையில் 2030க்குள் கிராமப்புறங்களில் 8 லட்சம் குடிசை வீடுகள் கான்கிரீட் வீடுகளாகக் கட்டித் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது, கிராமப்புற ஏழை எளிய மக்களின் 'வீடு' கனவை நினைவாக்கிடும் அரிய திட்டமாகும். குடிசைகள் இல்லாத தமிழகத்தை உருவாக்கும் திட்டம் மட்டுமல்ல, கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பை உருவாக்கக்கூடிய அரியத் திட்டமாகும்.

ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள ஏரி, குளம் போன்ற சுமார் 5000 நீர் நிலைகளை ரூபாய் 500 கோடியில் புனரமைக்கப்படும் என்று அறிவித்திருப்பது மிகுந்த வரவேற்புக்குரியதாகும். குறிப்பாக, நிலத்தடி நீரை பாதுகாத்திடவும், கிராமப்புற மக்களின் நீர் ஆதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும், விவசாயிகளுக்கு உறுதுணையாக அமைவதற்குமான அரியத் திட்டமாகும்.

ஊரக வேலைவாய்ப்பு திட்டத்திற்கு ரூபாய் 3,300 கோடி ஒதுக்கி இருப்பது, ஊரக பகுதிகளில் சாலைகளை மேம்படுத்திட ரூபாய் 100 கோடி ஒதுக்கப்பட்டு இருப்பது, இப்படி கிராமப்புறத்தை மேம்படுத்துவதற்கான நோக்கத்தோடு நிதி அமைச்சர் இந்த நிதிநிலை அறிக்கையை அளித்துள்ளார்.



சிங்கார சென்னையை மேம்படுத்தவும், சென்னையை சமன்படுத்துவதற்கு ஏற்ப ரூபாய் 1000 கோடியில் வட சென்னைக்கு திட்டங்கள் தீட்டிடவும், சென்னை கடற்கரையை மேம்படுத்திடவும் அறிவிக்கப்பட்டு இருப்பது தமிழ்நாட்டின் தலைநகரை உயர்த்துவதற்கான உயரியத் திட்டமாகும்.

நூலகங்களை தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கொண்டு சேர்த்து அறிவுள்ள அடுத்த தலைமுறையை உருவாக்கிட அரசு திட்டமிட்டு செயல்படுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டு, கோவையில் கலைஞர் நூலகம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பாகும்.

5 லட்சம் ஏழைகளை வறுமை கோட்டில் இருந்து மீட்டெடுக்க முதல்வரின் தாயுமானவர் திட்டம், ஏழை எளிய மக்களுக்கு கிடைத்த அட்சயத் திட்டமாகும்.

மூன்றாம் பாலினத்தவரின் உயர்கல்வி செலவை அரசு ஏற்கும் என்பது ஒரு புரட்சிகரமான அறிவிப்பாகும். அரசு பள்ளியில் 6 முதல் 12 வரை பயின்று உயர்கல்விக்கு செல்லும் மாணவர்களுக்கு மாதம் 1000 ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்பது ஏழை எளிய மாணவர்களின் உயர்கல்வியை ஊக்குவித்து உதவி செய்யும் திட்டமாகும்.

எட்டு இடங்களில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்ள ரூபாய் 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொழி பெயர்க்கப்பட்டுள்ள தமிழ் மொழி நூல்களை 100 நாடுகளின் நூலகங்களில் வைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் தமிழ் மொழியை, தமிழர்களின் நாகரிகப் பண்பாட்டை உலகறிய செய்யும் உயரிய நோக்கமாகும்.

பொதுவாக தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் கருத்தில் கொண்டு, அனைத்துத் தரப்பு மக்களையும் மனதில் கொண்டு இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. எவராலும் குறை கூற முடியாத சமமான வளர்ச்சிக்கான அரியத் திட்டமாகும்.

சமூக நீதி, கடைக்கோடி மனிதருக்கும் நல வாழ்வு, உலகை வெல்லும் இணைய தமிழகம், அறிவுசார் பொருளாதாரம், சமத்துவ நோக்கில் மகளிர் நலம், பசுமைவழிப் பயணம், தாய்த் தமிழும் தமிழர் பண்பாடும் இப்படி ஏழு தமிழ் கனவுகள் என்ற தலைப்பில் பல்வேறு திட்டங்களை இந்த அரசு அறிவித்துள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையை தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வரவேற்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில்

# இஸ்லாமியர்களுக்கான அடக்கஸ்தலம் அமைக்க அரசு நடவடிக்கை!

## பேரவையில் கே.எஸ்.சரவணகுமார் கேள்விக்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் பதில்!

சென்னை, பிப்.21-

சட்டப்பேரவையில் இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தலம் அமைப்பது தொடர்பாக உறுப்பினர் கே.எஸ்.சரவணகுமார் கேட்ட கேள்விக்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் பதிலளிக்கையில் இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான் (அடக்கஸ்தலம்) இல்லாத மாவட்டங்களில் இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதிலளித்தார்.

**கே.எஸ்.சரவணக்குமார்:** பெரியகுளம் தொகுதி, பெரியகுளத்தில் இஸ்லாமியர்களுக்கு அடக்கஸ்தலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் செஞ்சி மஸ்தான்** சிறுபான்மையினருக்கு கல்லறைத் தோட்டம், அடக்கஸ்தலம் அமைக்க, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வாயிலாக அரசு புறம்போக்கு இடங்களில் நிலம் வழங்கப்பட்டு வருகிறது. அரசு புறம்போக்கு நிலம் இல்லாத பகுதிகளில், தனியார் நிலங்களை விலைக்கு வாங்கும்பட்சத்தில், இதற்கென அரசின் பங்களிப்பாக முதலமைச்சர் அவர்கள் ஒரு கோடி ரூபாயை வழங்கியுள்ளார்கள். 9.1.2024 அன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், மக்கள் முதல்வர் முதலமைச்சர் அவர்கள், கிறிஸ்தவர்களுக்கான கல்லறைத் தோட்டங்கள், இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான் இல்லாத மாவட்டத் தலைநகரங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மாநகராட்சி/நகராட்சி சார்பில் கல்லறைத் தோட்டம், கபர்ஸ்தான் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்ததன் அடிப்படையில், அதற்கான தொகையாக 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிட்டுள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளபடி, தேனி மாவட்டம், பெரியகுளத்தில் அரசு புறம்போக்கு நிலம் இருக்கும் பட்சத்தில், அந்த இடத்தில் நிலம் வழங்குவதற்கோ, நிலம் இல்லாத பட்சத்தில், இந்த நிதியில் பங்களிப்புடன் தனியார் நிலத்திலோ இஸ்லாமியர்களுக்கு கபர்ஸ்தான் அமைக்கப்படும்.

**கே.எஸ். சரவணக்குமார்** பெரியகுளம் தொகுதிக்குட்பட்ட மாவட்ட தலைநகரான தேனியும், தேனியைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கணிசமாக இஸ்லாமியப் பெருமக்கள் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு விழாக்காலங்களில், பெருநாள் தொழுகையான ரம்ஜான், பக்ரீத் போன்ற பண்டிகை நாட்களில் தொழுகை நடத்துவதற்கென்று தனியாக இடம் இல்லை. எனவே, அனைவரும் இணைந்து தொழுகை நடத்துவதற்கென தனியாக ஈத்கா மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் செஞ்சி K.S. மஸ்தான்:** இஸ்லாமியர்களுக்கு கபர்ஸ்தான் அமைக்க காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், சாலமங்கலம் கிராமத்தில் புல எண் 105ல் ஒன்றே முக்கால் ஹெக்டேர் நிலமும், ருத்ரபூமி வகைப்பட்ட நிலத்தில் 2 ஹெக்டேர் நிலமும் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள் உதவியோடு வழங்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம், பெருங்குடி கிராமத்தில் புலம் எண் 9/1ல் ஒரு எக்டேர் நிலமும் அமைச்சர் ரகுபதி உதவியோடு வழங்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சி, கவுண்டம்பாளையம் சங்கனூர் 2 ஏக்கர் நிலமும் பொறுப்பு அமைச்சர் முத்துசாமி உதவியுடன் வழங்கப்பட்டு இஸ்லாமியர்களுக்கு கபர்ஸ்தான் அமைக்க வழங்கப்பட்டுள்ளது. அதைப் போல, கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை நகராட்சிக்குட்பட்ட பத்மநாபபுரம் கிராமம் புலம் எண் A5/14ல் உள்ள 40.77 செண்ட் நிலத்தில் கபர்ஸ்தான் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அமைச்சர் மனோ தங்கராஜ் அவர்களின் உதவியோடு செயல்பட்டு வருகிறது. சென்னை மாநகராட்சி மண்டலம் 1, சாத்தாங்காடு கிராமம், வார்டு எண் 7ல் உள்ள 5 ஏக்கர் நிலத்தை கபர்ஸ்தான் அமைக்க முறைப்படி நில மாற்றம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அமைச்சர் சேகர் பாபு அவர்களின் உதவியோடு நடைபெற்று வருகிறது. இதைப்போல, கிறித்துவர்களுக்கு விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டம், மேல்மலையனூர் கிராமத்தில் புலம் எண்கள் 319, 319/5 ஆகிய நிலங்களில் 1.9 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினத்தில் வார்டு எண் 2, பிளாக் எண் 27ல் அரசு புறம்போக்கு நிலம் 2.250 சதுர மீட்டர் நிலம்.

வழங்கப்பட்டு வருகின்ற நிலையில்... உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பதிலே தேனி மாவட்டம், அல்லி நகரம் கிராமத்தில் புலம் எண் 4.400 சதுர மீட்டர் நிலம் கிறித்துவ மற்றும் முஸ்லீம் சிறுபான்மையின மக்களுக்கு மயானம் அமைக்க வழங்கப்பட நடவடிக்கையில் உள்ளது என்பதை அமைச்சர் பெரியசாமி அவர்களின் உதவியோடு, இதைப்போல பல்வேறு இடங்களில் அந்த இடம் தேவைப்படும் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கவனத்திற்கு அதை எடுத்து வர வேண்டும். தனியார் இடத்தை விலைபேசி வாங்க அரசினுடைய பங்களிப்பை அளிக்க அரசாங்கம் முன்வர உள்ள நிலையில் இதைச் சரியான முறையில் நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

**கே.எஸ். சரவணக்குமார்** எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொது மயானம் அமைப்பதற்கு எவ்வாறு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்துகிறோமோ அதேபோல, இஸ்லாமியப் பெருமக்கள் அடக்கஸ்தலங்களுக்கு அடிப்படைப் பணிகளை மேற்கொள்வதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் செஞ்சி K.S. மஸ்தான்:** சட்டமன்ற உறுப்பினருடைய அந்தக் கோரிக்கையை நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறேன். அதை உரிய நேரத்தில் பரிசீலனை செய்து முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு செயல்படுத்துவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.




## 20 ஆம் ஆண்டு நினைவு நாள்



**திருமதி.தமிழரசி ஜெயராமன்**

நினைவு நாள் : 21.02.2024

**எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே**
**எங்களது இதயத்தில் நிலைத்து நிற்கும்**
**உன்னை எண்ணி எங்களது கண்ணீர் அஞ்சலியை**
**காணிக்கையாக்குகிறோம்.**

★★★

**தந்தை** - நினைவில் வாழும் **கோ.சி.மணி** முன்னாள் அமைச்சர்
**தாய்** - நினைவில் வாழும் **கோ.சி.கிருஷ்ணவேணி மணி**
**கணவர் - தி.ஜெயராமன்**
**மகன் :** டாக்டர் **ஜெ.தமிழ்குமணன்** M.D.,D.M (Oncology)
**மருமகள் :** டாக்டர் **கே.கண்மணி**
**பேரன் : நிலன் குமணன்** **பேத்தி : நிலா தமிழரசி**
மற்றும் குடும்பத்தினர் – ஆடுதுறை – தஞ்சை மாவட்டம்



# தி.மு.க. வர்த்தகர் அணி
# மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் கூட்டம்

தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் கூட்டம் 25-2-2024 ஞாயிறு அன்று காலை 11.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது (காசிமுத்து மாணிக்கம்) தலைமையில், வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் கே.எஸ்.மூர்த்தி, முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் மாலைராஜா, வி.ஜெயன், கோவைநா.முருகவேல்,பி.டி.பாண்டிச்செல்வம்,எஸ்.முத்துச்செல்வி,என்.தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், சிவகாசித.வனராஜ்,வி.பி.மணி,இ.ராமர்,க.தனசெல்வம்,வேப்பூர்வி.எஸ்.பெரியசாமி, பெ. சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ. சத்தியமூர்த்தி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட மற்றும் மாநில அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா; நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்து

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர், தி.மு.க. வர்த்தகர் அணி

### வடசென்னை மத்திய சென்னையை இணைக்கும்

# யானைக்கவுனி மேம்பாலப் பணியினை விரைவில் முடிக்க வேண்டும்!

## தெற்கு ரயில்வே அதிகாரிகளிடம் தயாநிதிமாறன் எம்.பி. நேரில் வலியுறுத்தல்



சென்னை,பிப்.22 - வடசென்னை மத்திய சென்னையை இணைக்கும் யானைகவுனி மேம்பால பணியை விரைவில் முடிக்க வேண்டுமென தெற்கு ரயில்வே அதிகாரிகளிடம் தயாநிதிமாறன் எம்பி நேரில் வலியுறுத்தியுள்ளார்.

தெற்கு ரயில்வேயின் சென்னை ரயில்வே கோட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்தாலோசனைக் கூட்டம் சென்னை தெற்கு ரயில்வே பொது மேலாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கூட்டத்தில் தயாநிதிமாறன் எம்பி பேசியதாவது:

யானைக்கவுனி பாலமானது வடசென்னை மற்றும் மத்திய சென்னைப் பகுதிகளை இணைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. கடந்த 2019 முதல் தெற்கு ரயில்வே பொது மேலாளரிடம் பல்வேறு முறை வலியுறுத்தியும் இந்தப் பாலத்தின் சீரமைப்புப் பணி மந்த நிலையிலேயே நடைபெற்று வருவதால் இப்பகுதி குடியிருப்புவாசிகள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்தை அனுபவிப்பதோடு அவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கிறது. முன்னாள் முதல்வர் கலைஞர் நினைவாகவும், அவருக்கு மரியாதை செலுத்திடும் வகையிலும் எழும்பூர் ரயில் நிலையத்திற்கு அவரது பெயரை சூட்ட வேண்டும்.

வில்லிவாக்கம் பழைய ரயில்வே சாலையை மறுசீரமைக்கும் நடைமுறைகளை விரைவுபடுத்த தெற்கு ரயில்வே பொது மேலாளருக்கு கடிதம் எழுதியிருந்தேன். இந்த பணியை மேற்கொள்ள முன்வந்த சென்னை மாநகராட்சிக்கு தடையில்லா சான்று வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் பொது மேலாளரிடம் வழங்கியிருந்தேன். ஆனால் இன்றுவரை தடையில்லா சான்று வழங்கப்படாததால் அந்தச் சாலை சீரமைப்பு பணிகள் கிடப்பில் உள்ளது.

சென்னை சென்ட்ரல், எழும்பூர் மற்றும் அனைத்து பறக்கும் ரயில், புறநகர் ரயில் நிலையங்களிலும் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி பயணிகளுக்கு போதுமான அளவு பேட்டரி மூலம் இயக்கப்படும் வாகனங்கள் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக முதியவர்கள் அதிகமாக பயன்படுத்தும் மாம்பலம், சேத்துப்பட்டு, கடற்கரை, பார்க் டவுன் மற்றும் சூளைமேடு புறநகர் ரயில் நிலையங்களில் பேட்டரி வாகனங்கள், எஸ்குலேட்டர்கள் இன்றியமையாதவை. எழும்பூர் ரயில் நிலையத்திற்கு அடுக்கு மாடி வசதி கொண்ட பல்நோக்கு கார் பார்க்கிங் அமைக்க வேண்டும்.

சென்னை சென்ட்ரல், எழும்பூர் ரயில் நிலையங்களில் குறுகிய நேர காத்திருக்கும் அறை மற்றும் பொருட்கள் பாதுகாக்கும் அறைகள் மேம்படுத்தப்பட்டு, தேவையான ஏற்பாடுகளை செய்திட வேண்டும். டிஜிட்டல் அறிவிப்புப் பலகைகளை சுற்றுலாவை மேம்படுத்தவும், விழிப்புணர்வை அதிகரிப்பதற்காகவும் பொதுத் தகவல்களைக் காண்பிக்கவும் காட்சிப்படுத்தலாம். மூடப்பட்ட அண்ணாநகர் ரயில் நிலையத்தை மீண்டும் இயக்கக் கோரி அப்பகுதி மக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர். அது திறக்கப்பட்டால், இப்பகுதி மக்களின் சிரமம் குறையும். எனவே அண்ணாநகர் ரயில் நிலையத்தை மீண்டும் இயக்க வேண்டும்.

பறக்கும் ரயில் நிலையங்களில் சமூக விரோத செயல்களை தடுக்க நடவடிக்கை எடுப்பதுடன், பெண் பாதுகாப்புப் பணியாளர்களின் இருப்பை அதிகரிக்கவும், பெண்களுக்கான பெட்டிகளில் சிறந்த சுகாதார வசதிகளை வழங்குவது காலத்தின் தேவை. தானியங்கி கதவுகள், கை சுத்திகரிப்பான்கள் மற்றும் வெப்பத் திரையிடல் நுழைவாயில்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக ரயில் நிலையங்களை நவீனப்படுத்த வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ரயில்வே அதிகாரிகளுடன், ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒரு முறையாவது, அனைத்து ரயில் நிலையங்களிலும், புகார்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துகளுக்கு முறையான அமைப்பு உள்ளதா என்பதை உறுதிப்படுத்த, வழக்கமான ஆய்வுகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் எம்பிக்கள் கதிர் ஆனந்த், கலாநிதி வீராசாமி, செல்வம், கிரிராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# குன்னூர் அ.சீனிவாசன் இல்லத் திருமண விழா!

## அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தங்கம் தென்னரசு தலைமை ஏற்று வாழ்த்து!

விருதுநகர், பிப். 21 - குன்னூர் அ.சீனிவாசன், தலைமை சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இல்லத் திருமண விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதித்துறை மின்துறை மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் திருமணத்தை தலைமை ஏற்று நடத்தி வைக்க உள்ளனர்.

இன்று (21.02.2024 - புதன்கிழமை) காலை 9 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் Dr.D.சீதாபதி மற்றும் பாமினிரதி ஆகியோர்களின் திருமணம் இராஜபாளையம் தென்காசி சாலையில் உள்ள பி.எஸ்.குமாரசாமி இராஜா திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இத்திருமணத்தில் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம். குமார், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் S.தங்கப்பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்க உள்ளனர். மேலும் கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்ள உள்ளனர்.

### ஆம்னி பேருந்துகள்

# அரசு அறிவித்த இடங்களில் மட்டுமே பயணிகளை ஏற்றி, இறக்க வேண்டும்!

## போக்குவரத்துத்துறை அறிவிப்பு!

சென்னை, பிப்.20- தெற்கு நோக்கி செல்லும் அனைத்து ஆம்னி பேருந்துகளும் சென்னை புறவழிச் சாலையில் போரூர் சுங்கச்சாவடி மற்றும் சூரப்பட்டு சுங்கச்சாவடி மற்றும் கிளாம்பாக்கம் பேருந்து முனையம் ஆகிய மூன்று இடங்களை தவிர வேறு எந்த இடத்திலும் பயணிகளை ஏற்றி இறக்க கூடாது என்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் 09.02.2024 தேதியிட்ட இடைக்கால உத்தரவினை எதிர்த்தும் அதனடிப்படையில் போக்குவரத்து ஆணையர் கடந்த 13.02.2024 அன்று வெளியிட்ட ஒரு விரிவான பத்திரிக்கைச் செய்தியை எதிர்த்தும், கடந்த 22.01.2024 அன்று போக்குவரத்து ஆணையர் பிறப்பித்த இரண்டு ஆணைகளை எதிர்த்தும் ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு இன்று மாண்பமை உச்சநீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

இதன்மூலம் கடந்த 22.01.2024 அன்று போக்குவரத்து ஆணையர் பிறப்பித்த இரு உத்தரவுகளும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் 09.02.2024 தேதியிட்ட இடைக்கால உத்தரவும் மற்றும் போக்குவரத்து ஆணையரால் 13.02.2024 அன்று வெளியிடப்பட்ட பத்திரிக்கைச்செய்தியும் மாண்பமை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பால் உறுதி படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி சென்னையில் இருந்து தெற்கு நோக்கி பயணிக்கும் ஆம்னி பேருந்துகளின் உரிமையாளர்கள் எக்காரணம் கொண்டும் கீழ்க்கண்ட 3 இடங்களை தவிர வேறு எங்கும் பயணிகளை ஏற்றி இறக்க கூடாது என அறிவிக்கப்படுகிறது:

1. சென்னை புறவழிச்சாலையில் போரூர் சுங்கச்சாவடி
2. சென்னைபுறவழிச்சாலையில் சூரப்பட்டு சுங்கச்சாவடி
3. கிளாம்பாக்கம் பேருந்து முனையம்

மேற்கண்ட 3 இடங்களை தவிர தெற்கு நோக்கி செல்லும் ஆம்னி பேருந்துகள் வேறு எங்கும் பயணிகளை ஏற்றி இறக்குவதற்கு அனுமதி இல்லை என்பது மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பினால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறி மேற்கூறிய 3 இடங்களை தவிர வேறு இடங்களில் தெற்கு நோக்கி செல்லும் ஆம்னி பேருந்துகள் பயணிகளை ஏற்றி இறக்குவது கண்டறியப்பட்டால் தொடர்புடைய ஆம்னி பேருந்துகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவது மட்டுமல்லாமல் நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தொடரப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

இவ்வாறு போக்குவரத்துத்துறை ஆணையர் அறிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திண்டிவனம் கோ.வெங்கட்ராமன்

பிப்ரவரி 21 (2013)



1974ஆம் ஆண்டு முதல் கழக வழக்கறிஞராக பணியாற்றி வந்தார்.

1989–ல் மாநிலங்களவை உறுப்பினராகவும் – 1996–ல் திண்டிவனம் மக்களவை தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மத்திய அமைச்சராகப் பணியாற்றினார்.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இவர் கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், சட்ட எரிப்பு போராட்டம் போன்ற போராட்டங்களில் பங்கேற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# ஒட்டு மொத்த மக்கள் சக்தியாக விளங்கும் தி.மு.க.வின் வெற்றியை யாராலும் தடுக்க முடியாது!

தமிழ்நாடு அரசியல் வரலாற்றில் திராவிட பாரம்பரியத்தின் வரலாற்றைப் பற்றி கடுகளவும் தெரியாது, புரியாது, அறியாது. மூன்று ஆண்டுகளாக அரசியலில் கத்துக்குட்டியாக அறிமுகமாகி பெரிய மேதாவி போல அறிவாளி போல அண்ணாமலை பேசி வருகிறார். அவருக்கு ஒன்றுமே தெரியாது.

இவர் அடிக்கிற காற்றில் பறக்கிற இலை போல பி.ஜே.பி.யின் தலைவர் ஆனதும் எந்த தகுதியும் இல்லாமல் ஒரு மனிதநேயம் பண்பாடு இல்லாமல் பேசி வருகிறார் .

இவரோடு இருப்பவர்கள் இந்த மூன்றாண்டு காலத்தில் புதிதாக நிதி நிறுவனங்கள் என்ற பெயரில் ஆரம்பித்து மக்களின் மனதை ஆசை வார்த்தை மூலம் திசை திருப்பி அதிக வட்டி கொடுப்பதாக கூறி பல்லாயிரம் கோடிகளை ஒரு ஏழு எட்டு போலி நிதி நிறுவனங்கள் மூலம் மக்களை ஏமாற்றி பணம் சம்பாதித்து இருக்கிறார்கள். அவர்களெல்லாம் அண்ணாமலையால் பி.ஜே.பி.யில் நிர்வாகிகளாக பணியாற்றியவர்கள். இதை இல்லை என்று அண்ணாமலை சொல்லுவாரா?

அண்ணாமலை, பி.ஜே.பி. தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்தால் வீட்டுக்கு ஒருவருக்கு அரசு வேலை வாய்ப்பு கொடுப்போம் என்கிறார். பி.ஜே.பி. தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்தால் காவல்துறையினருக்கு இரட்டிப்பு சம்பளம் வழங்குவோம் என்கிறார். அண்ணாமலை அவர்களே

சுமார் இரண்டு கோடியே 15 லட்சம் குடும்பங்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் அந்த குடும்பங்களில் இரண்டு கோடியே 15 லட்சம் பேருக்கு இவரால் அரசு வேலை வாய்ப்பு கொடுக்க முடியுமா வாய்கூசாமல் இப்படி பேச வெட்கமாக இல்லையா.

உங்களுடைய பிரதம அமைச்சர் 2014 இல் 2019 இல் பாராளுமன்ற தேர்தல் நேரத்தில் 20 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்போம் என்றார். அதுவே அவரால் செய்ய முடியாத பொழுது ஒரு மாநிலத்தில் தலைவராக இருக்கிற அண்ணாமலை வீட்டுக்கு ஒருவருக்கு அரசு பணி கொடுப்போம் என்கிறார். இதை எல்லாம் அவரை நம்பி அவருக்கு பின்னால் அலையும் முட்டாள்கள் இடத்தில்தான் இவர் பேச முடியும்.

மக்கள் இடத்தில் இவர்கள் பேச முடியாது. காவல் துறையில் பணியாற்றுபவர்களுக்கு இரட்டிப்பு சம்பளம் கொடுப்போம் என்கிறார். ஏன் இந்தியாவில் பி.ஜே.பி. ஆளுகிற மாநிலங்களில் காவல்துறையினருக்கு எந்த மாநிலத்தில் இரட்டிப்பு சம்பளம் தருகிறார்கள். உயர்த்தி கொடுக்கப்பட்டுள்ளது என்பதனை அண்ணாமலை சொல்லுவாரா?

பாராளுமன்றத் தேர்தலில் பி.ஜே.பி. காணாமல் போய் விடும். இந்தத் தேர்தலோடு அண்ணாமலையும் காணாமல் போய்விடுவார். இவரை கட்சி பதிவிலிருந்து தேர்தலுக்குப் பிறகு தூக்கி எறிந்து விடுவார்கள்.

இவர் எங்கே இருப்பார் என்பது யாருக்கும் தெரியாது. சம்பாதித்த பணத்தை வைத்து தொழில் செய்ய போய் விடுவார். இவரை நம்பி ஒரு வாக்காளராவது வாக்களித்தால் அந்த வாக்கு நோட்டாவுக்கு அளிக்கிற வாக்குக்கு இணையான வாக்காக இருக்கும்.



கோவை
கே.செல்வராஜ்
கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர்

பி.ஜே.பி. என்கிற கட்சி எந்த தொகுதியிலும் பாண்டிச்சேரி உட்பட 40 நாடாளுமன்ற தொகுதிகளிலும் டெபாசிட் தொகை கூட வாங்க முடியாது.

அப்படிப்பட்ட அந்த கட்சியின் தலைவராக இருக்கிற அண்ணாமலை சொல்கிறார் தி.மு.க.வை அகற்றுவதுதான் எங்கள் வேலை என்று.

தி.மு.க. என்கிற இயக்கம் 75 ஆண்டு காலம் மக்கள் நலனுக்காக உருவாக்கப்பட்ட இயக்கம். அதற்கு முன்பே திராவிட இயக்கம் சுமார் 1880 லிருந்து தமிழக மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிற இயக்கம். மதராஸ் மாகாணமாக இருந்த பொழுது 20 ஆண்டு காலம் திராவிட பாரம்பரியம் சுதந்திரம் வாங்குவதற்கு முன்பே தமிழகத்தில் ஆட்சியை நடத்திய இயக்கம் நீதிக்கட்சி.

திராவிடர் கழகம் திராவிட முன்னேற்றக் கழகம் என்று மக்களின் மனதில் பதிந்த இந்த சக்தியை எந்த கொம்பனாலும் தமிழக அரசியல் வரலாற்றில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பக்கத்தில் கூட வந்து பார்க்க முடியாது .

இந்த இயக்கம் என்பது அண்ணாமலை அங்கம் வைக்கிற கட்சிக்கு முன்பிருந்த ஜனசங்கத்தையும் பார்த்த கட்சி, பி.ஜே.பி.யையும் பார்த்த கட்சி.

இந்த திராவிட மண்ணில் எந்த தேசியக் கட்சிக்கும் இடமில்லை. மக்கள் ஒரு நாளும் வேறு இயக்கத்தை நினைத்து கூட பார்க்க மாட்டார்கள்.

ஏதோ கோவில்களில் பி.ஜே.பி. சொந்தம் கொண்டாடுவது போல் பேசி வருகிறது. தமிழகம் முழுவதும் இருக்கிற கோயில்கள், இந்து மக்கள், ஒட்டுமொத்தமாக அரசியல் பண்பாட்டில் தி.மு.க.வை ஆதரிப்பார்கள், ஆதரிக்கிறார்கள், ஆதரித்துக் கொண்டும் இருக்கிறார்கள், எப்பொழுதும் ஆதரிப்பார்கள்.

காரணம் திராவிட பண்பாடு என்பது இந்து கலாச்சாரத்திற்கும் இஸ்லாமிய கலாச்சாரத்திற்கும் கிறிஸ்துவ கலாச்சாரத்திற்கும் நன்மை செய்து, எல்லா மக்களையும் காக்கும் அரவணைக்கும் இயக்கம் தி.மு.க.

எந்த ஒரு மதத்தின் பெயரால் பிரிவினையாக செயல்படாமல் மனிதநேயத்தோடு அனைத்து மக்களும் நாம் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும், செயல்பட வேண்டும், நாட்டுக்காக வாழ வேண்டும் என்று நினைக்கிற இயக்கம் தி.மு.க.

அவரவர்கள் விருப்பத்திற்கு எந்தக் கோயிலில் விரும்புகிறார்களோ அந்த கோயிலுக்கு சென்று வணங்கலாம், கோவில் திருப்பணிகள் செய்யலாம், அதில் ஒரு நாளும் தி.மு.க. யாரையும் தடுத்தது கிடையாது, பிரிவினைவாதிகளை அடக்கும் இயக்கம் தி.மு.க.

மக்கள் இயக்கம் ஒட்டு மொத்த மக்களுக்காக குரல் கொடுக்கிற இயக்கம். மக்களுக்காக செயல்படுகிற இயக்கம். மக்கள் நலனுக்காக செயல்பட்டுக் கொண்டிருக்கிற திராவிட மாடல் ஆட்சியை முதல்வர் தளபதி அவர்கள் பொறுப்பேற்று சுமார் மூன்று ஆண்டுகளில் 50 ஆண்டு கால சாதனைகளை செய்து ஒட்டுமொத்த தாய்மார்களின் மொத்த ஆதரவையும் பெற்ற முதலமைச்சராக திகழ்கிறார்.

எந்த நேரத்திலும் எப்பொழுது தேர்தல் வந்தாலும் ஒட்டு மொத்த மக்களும் தி.மு.க.வுக்கு தான் வாக்களிப்பார்கள்.

மற்ற கட்சிகள் இரண்டாவது இடத்துக்கும் மூன்றாவது இடத்திற்கும் போட்டி போட்டுக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்

நாங்களும் இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்ள மக்களிடத்தில் தெரிவிக்க அறிக்கைகளை போலியாக விட்டுக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் .

மக்களுக்கு தெரியும் கொடுமையான கேவலமான துரோகத்தை மட்டுமே நம்பி செயல்படுகிறவர்கள் யார் என்று அனைத்து மக்களுக்கும் தெரியும்.

இன்றைக்கு தங்களது வாழ்வாதாரத்தில் திராவிட மாடல் அரசு செய்து கொடுக்கிற திட்டங்கள், தொழில்துறையில் இந்தியாவிலேயே முதலிடத்திற்கு தமிழகத்தை கொண்டு வரவும், தனியார் மருத்துவமனையை விட அரசு மருத்துவ மனை சூப்பர் ஸ்பெஷாலிட்டி அனைத்து அறுவை சிகிச்சை வசதி,

மருத்துவத் துறையில், கல்வித்துறையில், விவசாயத்தில், உணவு உற்பத்தியில், குடிநீர் வழங்குவதில், சாலைகள் அமைத்துக் கொடுப்பதில், புதிய பள்ளி கட்டிடங்கள் கட்டிக் கொடுப்பதில் ஒட்டுமொத்த மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அற்புதமான திட்டங்களை தீட்டி சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிற அரசு திராவிட மாடல் அரசு.

இந்திய அரசியல் வரலாற்றில் கடுமையான மழை வெள்ளம் பாதிப்பில் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களும் அதே நேரத்தில் நான்கு நாட்களில் மீண்டும் கடுமையான மழை வெள்ளத்தில் பாதித்த தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் வாழும் லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் பாதித்து, வீடுகளை இழந்து, உடைமைகளை இழந்து கடுமையான பாதிப்புக்கு உள்ளாகி இருந்த பொழுது நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் மழை வெள்ளத்திலேயே சென்று நேரடியாக மக்களை சந்தித்து எல்லா பகுதிகளுக்கும் அமைச்சர்களை அனுப்பி 24 மணி நேரமும் அவர்களுக்கு உண்ண உணவு, இருக்க இடம் மற்றும் அத்யாவசிய பொருட்களை எல்லாம் கொடுத்து காப்பாற்றிய ஆட்சி திராவிடமடல் ஆட்சி.

முதலமைச்சர் தளபதி அவர்கள் உதவி செய்வதற்கு மக்கள் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுவதற்கு அவர்களுக்கு நிதிஉதவி வேண்டும் என்று ஒன்றிய அரசிடம் கேட்ட பொழுது எத்தனையோ தவறான கருத்துக்களை ஒரு நிதி அமைச்சராக ஒன்றிய அரசில் இருப்பவரே சொல்லி வந்தார் .

அது மட்டுமல்ல பி.ஜே.பி. அரசு தமிழக மக்களுக்கு உதவுவது போல் நடித்து ராணுவஅமைச்சர் ராஜ்நாத் சிங், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோர் நேரடியாக வந்து வெள்ளம் பாதித்ததை பார்வையிட்டு சென்றார்கள், கட்டாயம் உதவுவோம் என்றார்கள்.

உள்துறை அமைச்சர் அமித்ஷாவை பாராளுமன்ற உறுப்பினர் அத்தனை பேரும் சென்று சந்தித்து கேட்ட பொழுதும் நிச்சயம் நிதி உதவி செய்வோம் என்று கூறினார்.

ஆனால் இதுவரை இரண்டு மாதம் ஆகிறது. ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை. இவர்கள் தமிழக மக்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள், ஒரு நாளும் தமிழக மக்கள் காதுகளில் பி.ஜே.பி. ஒன்றிய அரசு பூ சுற்ற முடியாது, பொய்யான கருத்துகளை எடுத்து வைப்பதை மக்கள் நம்ப மாட்டார்கள்.

பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தும் கடுமையாக பேசியும் வெளிநடப்பு செய்தும் எந்த பதிலும் சொல்லாமல் தமிழ்மக்களுக்கு உதவாத ஒன்றிய அரசினுடைய இந்த துரோகத்துக்கு தமிழக மக்கள் தேர்தலில் சரியான பதிலடி கொடுத்து விரட்டி அடிப்பார்கள்.

முதலமைச்சர் தளபதி அவர்கள் எத்தனை சோதனை வந்தாலும் எவ்வளவு நிதி பற்றாக்குறை இருந்தாலும் மக்களை காப்பதில் பின் வாங்க மாட்டேன் என்று கூறி இந்த பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் வாழும் மக்களுக்கு குடும்பத்திற்கு ஆறாயிரம் ரூபாய் வழங்கினார்கள்.

இதுபோல் எந்த ஒரு அரசும் இந்தியாவில் வெள்ள பாதிப்பில் பாதித்த குடும்பங்களுக்கு நிதி வழங்கியதாக வரலாறு கிடையாது முதலமைச்சர் தளபதி அவர்கள் துணிச்சலான முடிவெடுத்து அத்தனை மக்களுக்கும் உதவி செய்து மழை வெள்ளத்தில் பாதித்த மக்கள் தன்னுடைய வாழ்வாதாரத்தில் நல்ல ஒரு நிலைக்கு வருவதற்கு உதவியதை மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்.

அதே நேரத்தில் பொங்கல் பண்டிகைக்கு ஆயிரம் ரூபாய், எல்லா குடும்பங்களுக்கும் நிதி உதவி கரும்பு, சர்க்கரை, அரிசி ஒட்டுமொத்த குடும்பங்களுக்கும் வழங்கியதால் மகிழ்ச்சியாக, சந்தோஷமாக பொங்கலை கொண்டாடினார்கள்.

கோடிக்கணக்கான குடும்பங்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருவதையும் சுமார் 4 20 கோடி மகளிர் விடியல் பயணத்தில் கட்டணமில்லா பேருந்தில் பயணித்து வருவதையும் இந்தியாவில் இருக்கிற மற்ற மாநில அரசுகளே தமிழ்நாடு அரசின் இந்த செயலை பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். முதலமைச்சர் காலை சிற்றுண்டி 17,00,000 குழந்தைகளுக்கு வழங்கும் திட்டம் உட்பட தமிழகத்தில் மக்களுக்கு திராவிட மாடல் ஆட்சி செய்யும் சாதனைகளை பார்த்து மற்ற மாநிலங்களுடைய முதலமைச்சர்கள் அந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள்.

தி.மு.க. கூட்டணி என்பது கொள்கை கூட்டணி மக்களுக்காக உழைக்கிற கூட்டணி மக்கள் வாழ்வாதாரத்தை காக்கிற கூட்டணி. மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கிற கூட்டணி, அப்படிப்பட்ட தி.மு.க. தலைமையில் உள்ள இந்த கூட்டணியை எந்த சக்தியாலும் எந்த கொம்பனாலும் வெற்றி பெற முடியாது.

இது மக்களின் இயக்கங்கள், மக்களின் நலனுக்காக அமைந்திருக்கிற இந்த கூட்டணியை ஒட்டுமொத்த மக்களும் ஆதரிக்கிறார்கள்.

இந்த தேர்தலோடு சில கட்சிகளை மக்கள் காணாமல் செய்து விடுவார்கள், இந்த நிலைதான் வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் மக்களின் மனநிலை என்பதை புரிந்து கொண்டு இவர்கள் செயல்பட வேண்டும்.

அரசியல் வரலாறு தெரியாத இந்த சீசன் கட்சிகளை மக்கள் விரட்டிஅடிப்பார்கள்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (19.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சிப் பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில தலைமை ஒருங்கிணைப்பாளர் செ.பீட்டர் அந்தோணிசாமி, தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம், தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகம், தமிழ் மாநில அரசுப் பணியாளர் சங்கம், தமிழ்நாடு அரசுத்துறை ஊர்தி ஓட்டுநர்கள் சங்கம், தமிழ்நாடு மாநில மாநகராட்சி அலுவலர் சங்கங்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு ஆசிரியர்கள் சங்கம், தமிழ்நாடு தேசிய ஆசிரியர் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் சங்கம், தமிழக பள்ளிக்கல்வி ஆசிரியர் கூட்டணி மற்றும் அனைத்திந்திய ஆசிரியர் பேரவை நிர்வாகிகள் சந்தித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (19.2.2024) முகாம் அலுவலகத்தில், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத் தலைவர் துறைமுகம் காஜா, தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூற்றுப்படி

# நில ஆர்ஜிதம் செய்யப்படாத இடத்திலா, பிரதமர் மோடி எய்ம்ஸ் மருத்துவமனை கட்ட அடிக்கல் நாட்டினார்?

## பா.ஜ.க. ஆட்சியின் முகத்திரையைக் கிழித்து, கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கேள்வி!

**கள்ளக்குறிச்சி, பிப். 21 –**

**தலைமைக் கழக அறிவிப்பின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் – சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் 17–02–2024 அன்று கள்ளக்குறிச்சியில் "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" எனும் தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில் அவர் பேசியதாவது:-

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூற்றுப்படி, நிலஆர்ஜிதம் செய்யப்படாத இடத்திலா? ஒன்றிய அரசின் பிரதமர் மோடி எய்ம்ஸ் மருத்துவமனைக் கட்ட அடிக்கல் நாட்டினார்? என்று பி.ஜே.பி. ஆட்சியின் முகத்திரையைக் கிழித்து, கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கேள்வி எழுப்பி உரையாற்றினார்.

தலைமைக் கழகத்தின் சார்பில் தமிழகத்தின் முதல்வர் அவர்கள் நேற்றைக்கும் - இன்றைக்கும் - நாளைக்கும் தமிழ்நாட்டின் 39 பாராளுமன்ற தொகுதிகளில் இதுபோன்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டங்களை நடத்திட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். மாவட்டக் கழகத்தின் செயலாளர்கள் இனிய சகோதரர் வசந்தம் கார்த்திகேயன், உதயசூரியன் இனிய அண்ணன் சிவலிங்கம் ஆகியோர் மிகச் சிறப்பாக இந்த மாநாட்டிற்கு நிகரான பொதுக்கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தை பொருத்தவரை, நமக்கு பாராளுமன்ற தொகுதியின் ஒரு தேர்தல் பிரச்சாரக் கூட்டம். இதுவே மற்ற அரசியல் இயக்கங்களுக்கு மாநில மாநாடு - தேசிய மாநாடு. அந்த அளவிற்கு எழுச்சியோடு இந்தக் கூட்டம் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தினந்தோறும் எங்களுக்கு 7, 8 நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தாலும், பல்வேறு வகைகளிலான அரசு நிகழ்ச்சிகள், இயக்க நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் சிறப்புமிக்க வாய்ப்பு கிடைத்தாலும், கள்ளக்குறிச்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நல்ல நிகழ்ச்சியில் பங்கேற்பது என்பது என் வாழ்நாளில் எனக்கு கிடைத்த அரும் பெரும் வாய்ப்பு என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இது பாராளுமன்ற தொகுதியின் செயல்வீரர்கள் கூட்டம் அல்ல, இது பொதுக்கூட்டம். செயல்வீரர்கள் நிரம்பி இருந்தாலும், இந்த மாபெரும் பொதுக்கூட்டம் என்பது இன்றைக்கு ஒரு வரலாற்று சிறப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், எந்த நோக்கத்திற்காக இந்த கூட்டத்தை நடத்த சொன்னாரோ - அந்த நோக்கத்தை மிகச் சிறப்பாக நிறைவேற்றுகிற வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த நிகழ்வை பொருத்தவரை, கள்ளக்குறிச்சி, ரிஷிவந்தியம், சங்கராபுரம், கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு ஆகிய ஆறு சட்டமன்றத் தொகுதிகளைச் சார்ந்த தாய்மார்களும், பெரியோர்களும், செயல் வீரர்களும் ஏராளமாய் நிரம்ப வந்து இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிறீர்கள். எனக்கு முன்னால் பேசிய உதயசூரியன் அவர்கள் சொன்னதைப்போல, இந்த நிகழ்ச்சி இதற்கு முன்னால் எல்லாம் தி.மு.கழகத்தின் பொதுக்கூட்டமாக இருந்தாலும் சரி அல்லது வேறு அரசியல் இயக்கங்களின் பொதுக்கூட்டமாக இருந்தாலும் இரவு 10 மணி வரை காவல்துறை அனுமதிப்பார்கள். எனவே, காவல்துறை அனுமதிக்கிற அந்த நேரம் வரை பொதுக்கூட்டம் நிச்சயம் நடைபெற்றே தீரும்.

ஆனால், நம்முடைய கழகத் தலைவர் அவர்கள், இன்றைக்கு அந்த பொதுக்கூட்டத்தின் தன்மையையே மாற்றி அமைக்கும் வகையில் எட்டு மணிக்கெல்லாம் பொதுக்கூட்டங்களை நிறைவு செய்து கழகத் தோழர்களையும், பொது மக்களையும் அவரவர் இல்லங்களுக்கு செல்ல வழிவிடுங்கள் என்று சொல்லும் வகையில் இன்றைக்கு இந்த கூட்டங்களை 6 மணிக்கு தொடங்கி, 8 மணிக்கு முடிக்கச்சொல்லி இருக்கிறார்கள். அந்த வகையில்தான், இந்த கூட்டம் நிறைவுப் பகுதியினை எட்டியிருக்கிறது. கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதியைப் பொறுத்தவரை, எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னார்கள். கடந்த தேர்தலின்போது பொன். கவுதம சிகாமணி எவ்வளவு வாக்குகள் வித்தியாசத்தில் இங்கே வெற்றி பெற்றார் என்கிற தகவலை சொன்னார்கள். 81 வாக்குகள், 4 லட்சத்திற்கு குறைவு. 3,99,919 வாக்குகள் இங்கே கூடுதலாக பெற்று வெற்றி பெற்றார். அவர் மட்டும் 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறவில்லை. 2019-இல் நடைபெற்ற தேர்தலைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில் ஏறத்தாழ 2 தொகுதிகளில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் 2 பேர் வெற்றி பெற்றார்கள். டி.ஆர்.பாலு திருப்பெரும்புதூர் தொகுதியில் 5,07,000-ற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியினை பெற்றார். அதேபோல், நம்முடைய திண்டுக்கல் நாடாளுமன்ற தொகுதியில் 5,18,000 வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.கழகம் வெற்றி பெற்றது.

1977ஆம் ஆண்டு ராம்விலாஸ் பஸ்வான் என்பவர் பீகாரில் இருக்கிற ஹாஜ்பூர் என்ற இடத்தில் 4,24,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப் பெற்றார்கள். ராம்விலாஸ் பஸ்வான் இந்தியாவில் இருக்கிற மிகச்சிறந்த ஓர் பட்டியலினத் தலைவர். அவர் நான்கு லட்சத்து 24 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது ஓர் கின்னஸ் சாதனையாக, உலக சாதனைகளில் ஒன்றாக அன்றைக்கு அது இடம் பெற்றது. அதற்குப் பிறகு 1991ஆம் ஆண்டு ஆந்திராவில் இருக்கிற நந்தியால் தொகுதியில் பெருமதிப்பிற்குரிய நரசிம்மராவ் அவர்கள் ஐந்து லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்கள். இந்த இரண்டு சாதனைகளும் இந்திய அளவில் அன்றைக்குப் பாராட்டுக்களைப் பெற்றது.

ஆனால் 2019ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்கள் சீரிய தலைமையில் நடைபெற்ற அந்தத் தேர்தலில் திருப்பெரும்புதூரிலும், திண்டுக்கல்லிலும் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றியைப் பெற்றோம். 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் சென்னை வடக்கு, திருச்சி, கரூர், பெரம்பலூர் ஆகிய நான்குத் தொகுதிகளைப் பெற்றிருந்தோம்.

### 2019 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வுக்கு கிடைத்த வெற்றி!

2019ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.விற்கு கிடைத்த வெற்றி, இதுவரை அரசியல் வரலாற்றில், இந்தியா விடுதலைப் பெற்றப் பிறகு எந்தத் தேர்தலிலும் கிடைத்திராத, அதிகபட்ச வாக்குகள் வித்தியாசத்தில் பெற்ற வெற்றி என்பதை மக்கள் நன்கு உணர்வார்கள். 3 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் 8 தொகுதிகள், 2 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம் 9 தொகுதிகள், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம் 11 தொகுதிகள், ஒரு லட்சத்திற்கும் கீழான வாக்குகள் வித்தியாசம் 5 தொகுதிகள், இப்படி 39 தொகுதிகளிலும், ஒரு தொகுதியைத் தவிர மகத்தான வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றியைப் பெற்றது. இந்த மாதிரியான வெற்றி இதற்கு முன்னால் எப்போதும் நாம் பெற்றதில்லை. இந்த வெற்றி என்பது தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்களுக்குக் கிடைத்த வெற்றி.

அந்த தேர்தலுக்குப் பிறகு, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இந்த இயக்கத்திற்கு எந்த அளவிற்கு கழக சாதனைகள், இன்றைக்கு இந்த அரசின் சாதனைகளை எந்த அளவுக்கு நிகழ்த்தப் பட்டிருக்கிறது. 'பாசிசத்தை வீழ்த்துவதற்கு இந்தியாவை வெல்வதற்குரிய' சூழலை ஏற்படுத்துவதற்கு நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் எந்த அளவிற்கு குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

அந்த நிலைகளை கடந்து வருகிற தேர்தல் வருகிறபோது, இன்றைக்கு மக்களிடையே ஏற்பட்டிருக்கும் எழுச்சி, தமிழ்நாடு முழுவதிலும் பொதுமக்களிடத்தில் காணப்படும் ஒரு மிகப்பெரிய மாற்றம், நிச்சயம் தெரிவித்துக் கொள்கிறேன் 40-க்கு 40 என்பது மட்டுமல்ல, 40 தொகுதிகளிலும் தி.மு. கழகத்தை எதிர்த்து நின்ற அத்தனை பேருமே டெபாசிட் இழந்தார்கள் என்கிற ஒரு நிலை, இந்த தேர்த லில் வரத்தான் போகிறது. இதில் மாற்றமில்லை. கள்ளக்குறிச்சியைப் பொறுத்தவரை, இந்த தொகுதிக்கு பல்வேறு வரலாற்று சிறப்புமிக்க அடையாளங்கள் இருக்கிறது. நான் இந்த தொகுதியில் பேச வேண்டும் என்று தலைமைக் கழகம் பணித்ததற்குப் பிறகு, இந்த தொகுதி சம்பந்தமான விஷயங்களை எடுத்துப் பார்த்தேன்.

இந்த தொகுதியில்தான் ஏற்காடு மலை இருக்கிறது. இந்த தொகுதியில்தான் கல்வராயன் மலை இருக்கிறது. ஏற்காடும், கல்வராயன் மலையும் இயற்கை ஆர்வலர்கள் அதிகம் நேசிக்கும் மலைப்பகுதிகள். அதற்கு என்ன காரணம்? ஏற்காட்டைப் பொறுத்தவரை, காப்பி தோட்டங்களும், ஆரஞ்சு பழ தோட்டங்களும் ஏற்காட்டுக்கு இன்றைக்கு புகழ் சேர்க்கும் மலைகளாகும். 'மலைகளின் அரசன்' சேர்வராயன் என்று சொல்வார்கள். 'ஏழைகளின் ஊட்டி' ஏற்காடு என்று சொல்வார்கள். அத்தகைய ஏற்காடு இந்த கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதியில் இருக்கிறது.

அதையும் கடந்து, நம்முடைய கல்வராயன் மலையில் மருத்துவ குணம் கொண்ட கடுக்காய் விளைகிற ஒரு மிகச்சிறந்த பகுதி, நம்முடைய கல்வராயன் மலைப்பகுதி. கடுக்காய் பற்றி இயற்கை ஆர்வலர்கள், சித்த வைத்தியர்கள், ஏன் சித்தர்கள் எல்லாம்கூட சொல்வார்கள். என்ன சொல்வார்கள் என்றால், காலையில் இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலையில் கடுக்காய், மண்டலம் வந்தால் - மண்டலம் என்றால் உங்களுக்கு தெரியும் - 48 நாட்கள். காலையில் இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலையில் கடுக்காய் - மண்டலம் உண்டால் கோலை ஊன்றி நடக்கும் கிழவனும், கோழை வீசி உலாவி நடப்பான் என்று சித்தர்கள் பாடி இருக்கிறார்கள். அத்தகைய கடுக்காய் விளையும் பூமி கல்வராயன் மலை. அதையும் கடந்து ஈனாத மாட்டுக்கு 1 கடுக்காய். இளம்பிள்ளை தாய்ச்சிக்கு 7 கடுக்காய் என்று சொல்வார்கள். அத்தகைய மருத்துவ குணம் கொண்ட கடுக்காய் விளைகிற மலை, இந்த கல்வராயன் மலை.

இன்னொரு சிறப்பு இந்த பாராளுமன்ற தொகுதிக்குள்தான் கெங்கவள்ளியும் இருக்கிறது. இந்த கங்கவள்ளியில்தான் விளைகிற மரவள்ளி கிழங்கின் மூலம் வருகிற ஜவ்வரிசிதான் இந்தியா முழுமைக்குமான ஒரு மிகப்பெரிய உணவு ஆதாரமாக இருக்கிறது. எனவே, இந்த பாராளுமன்ற தொகுதியைப் பொறுத்தவரை, அது ஏற்காடாக இருந்தாலும், கங்கவள்ளியாக இருந்தாலும், கல்வராயன் மலையாக இருந்தாலும் இந்த தொகுதிகளுக்கு பல்வேறு சிறப்புகள் உண்டு என்பதை நாம் நன்றாகவே அறிவோம்.



அத்தகைய தொகுதியில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த எழுச்சி மிகுந்த நிகழ்ச்சி என்பது மிகப்பெரிய அளவிலான பாராட்டுக்குரிய ஒன்று. இந்த தொகுதியில் ஏராளமான பணிகள் நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் காலத்திலும் சரி, வணக்கத்திற்குரிய தமிழ்நாட்டின் இன்றைய முதல்வர் அவர்கள் காலத்திலும் சரி நடைபெற்றிருப்பதை இங்கே பட்டியல் போட்டு காட்டினார்கள்.

### கள்ளக்குறிச்சியில் மருத்துவமனை திறப்பு!

கடந்த ஆண்டு இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் பாராட்டுதலுக்குரிய அமைச்சர் எ.வ. வேலு அவர்களின் மூலம் இந்த கள்ளக்குறிச்சியில் ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது. அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 700 படுக்கை வசதிகளுடன் அந்த மருத்துவமனை அன்றைக்கு திறந்து வைக்கப்பட்டது. இப்போது தினந்தோறும் 2,000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பொது நோயாளிகளாக அந்த மருத்துவமனையை இன்றைக்குப் பயன்படுத்திக் கொண் டிருக்கிறார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் கவுதம சிகாமணி, பாராளுமன்றத்திற்கு சென்ற நேரத்தில் அவர் வைத்த கோரிக்கைகளில் ஒன்று, கள்ளக்குறிச்சிக்கு ஒரு மருத்துவ கல்லூரி வேண்டும் என்ற கோரிக்கை. அந்த கோரிக்கை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஏற்கனவே 'மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி' என்ற அந்த விதியின்படி, அந்த கல்லூரி இந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு நம்முடைய முதல்வர் அவர்கள் முன்னிலையில் 2022-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 12-ஆம் தேதி அந்த கல்லூரி திறந்து வைக்கப்பட்டது. இப்படிப்பட்ட மிகப்பெரிய பிரம்மாண்டமான மருத்துவமனை இந்த கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பது ஒரு மகிழ்ச்சிக்குரிய ஒன்று. இன்றைக்கு மோடி அரசு எத்தகைய அரசு என்பதை பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த கூட்டத்தொடரில் பேசியதை பார்த்தவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

2016-ஆம் ஆண்டு கார்ப்பரேட்டுகளின் மூலம் வந்த வரி வருவாய் கார்ப்பரேட்டுகளுக்கான அரசாங்கமாக பா.ஜ.க. அரசு இருந்து கொண்டிருக்கிறது. கார்ப்பரேட்டுகளின் மூலம் 2016-ஆம் ஆண்டு இந்தியாவின் வரி வருவாய் என்பது 33 சதவிகிதமாக இருந்தது. அது தற்போது எவ்வளவு சதவிகிதமாக இருக்கிறது என்றால், மோடி அரசின் பத்தாண்டுகால சாதனைகளின் ஒன்று, தற்போது அந்த வரி வருவாய் 22 சதவிகிதமாக இருக்கிறது. குறைந்திருப்பது 11 சதவிகிதம் தானே என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் 1 சதவிகிதத்திற்கு எவ்வளவு ரூபாய் குறைகிறது என்றால், 50,000 கோடி. 11 சதவிகிதத்திற்கு 5,50,000 கோடி 1 ஆண்டுக்கு. 10 ஆண்டுகள் மோடி ஆட்சியில் கார்ப்பரேட்டுகளுக்கு சலுகையாக வழங்கப்பட்டிருக்கும் தொகை 55 லட்சம் கோடி. 55 லட்சம் கோடி கார்ப்பரேட்களுக்கு வரிகளின் மூலம் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த சலுகை வீழ்ந்திருக்கிறது என்பதை இன்றைக்கு நாம் உணர்கிறோம்.

அத்தகைய ஆட்சிதான் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், 'கலைஞர் நூற்றாண்டு' என்றவுடன் கிண்டியில் ஒரு மருத்துவமனை அமையும் என்று அறிவித்தார்கள். கிண்டி என்பது என்னை தேர்ந்தெடுத்த சைதாப்பேட்டையில் இருக்கிறது. அவ்வாறு நம்முடைய முதலமைச்சர் அறிவித்த, 1000 படுக்கைகளுடன், ரூ.230 கோடி ரூபாய் செலவில் ஒரு மருத்துவமனை அமையும். அந்த மருத்துவமனை கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையாக இருக்கும் என்றார்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அதை அறிவித்தபோது சொன்னார், இதை கட்டுவதற்கு 24 மாதங்கள் ஆகும் என்றார். அதை கட்டியவர் யார் என்றால், இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு தலைமையிலான அந்த பொதுப்பணித் துறை அங்கே கட்டப்பட்ட அந்த மருத்துவமனையை 24 மாதகால அவகாசத்தில் கட்டி முடிக்கப்பட அந்த மருத்துவமனையை பதினைந்தே மாதங்களில் கட்டி முடித்து தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். அந்த 230 கோடி ரூபாய் மருத்துவ மனை, 110 கோடி ரூபாய் மருத்துவ மனை - ஆக மொத்தம் 440 கோடி ரூபாயில் கட்டப்பட்ட அந்த மருத்துவமனை கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டு, இன்றைக்கு ஆயிரக்கணக்கான பொது நோயாளிகளுக்கு தினந்தோறும் சிகிச்சை அளித்து வருகிறது. 12 மிக சிறப்பான முழுவதும் எக்குப்ட் அறுவை சிகிச்சை அரங்கம், ஈரடுக்கு எண்டோஸ்கோப்பி, ஒரு சிறந்த தானியங்கு எம்.ஆர்.ஐ. இக்கருவிகளெல்லாம் இந்தியாவில் வேறு எந்த அரசு மருத்துவமனைகளிலும் இல்லாத உபகரணங்கள், அந்த மருத்துவமனையில் இருக்கிறது.

இதை ஏன் கள்ளக்குறிச்சியில் சொல்கிறேன் என்றால், கிண்டியில் திறந்திருக்கும் மருத்துவமனையை, கள்ளக்குறிச்சியில் சொல்ல வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? கள்ளக்குறிச்சியில் இருக்கிறவர்கள் அங்கு சிகிச்சைக்காக வாருங்கள் என்று சொல்லும் நோக்கம் அல்ல. ஆனால், ஒன்றிய அரசு 2018-ஆம் ஆண்டு மதுரையில் ஒரு எய்ம்ஸ் மருத்துவமனையை திறப்போம் என்றார்கள். எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை 2018-இல் திட்டமிட்டார்கள். 2019 ஜனவரி 27-ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடியே தமிழ்நாட்டிற்கு வந்து மதுரையில் அடிக்கல் நாட்டினார். அவ்வாறு நாட்டிவிட்டு சென்றவர் இதுவரைக்கும் ஒன்றுமே செய்யவில்லை.

இளைஞர் நலன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அந்த அடிக்கல் நாட்டிய செங்கல்லை எடுத்துக்கொண்டு தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரத்தை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நாட்டப்பட்ட அடிக்கல் இதுதான். இந்த ஒரு செங்கல்தான் என்று ஊர் முழுவதும் காட்டி வந்தார். இன்றைக்கும்கூட அந்த ஒரு கல்லோடு அங்கு நிற்கிறது. அந்த மருத்துவமனை குறித்து, கடந்த ஆண்டு நவம்பர் திங்கள் 3-ஆம் தேதி பாராளுமன்றத்தில் ஒரு கேள்வி எழுப்பி இருக்கிறார்கள், தமிழகத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள். ஏன் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதில் அரசு தாமதம் காட்டுகிறது என்று கேட்கிறார்கள்? இந்தியாவின் நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் எழுந்து சொல்கிறார், "இந்த மருத்துவமனைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்வதில் தமிழ்நாடு தாமதம் காட்டுகிறது. அதனால் மருத்துவ மனையை கட்டுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது" என்றார். நான் உடனே அன்றைக்கு மாலையே பத்திரிகையாளர்களை அழைத்து, பத்திரிகையாளர்களிடத்தில் கேட்டேன், நிலம் ஆர்ஜிதம் செய்வதில் அரசு தாமதமாக இருக்கிறது. அதனால் மருத்துவமனை கட்டுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று நிதித்துறை அமைச்சர் சொல்கிறார். 2019 ஜனவரி திங்கள் 27-ஆம் தேதி ஒரு பிரதமர் வந்து அடிக்கல் நாட்டியது நில ஆர்ஜிதம் செய்யப்படாத, யார் வீட்டு நிலத்திலோ வந்து அடிக்கல் நாட்டிவிட்டு சென்றுவிடுவாரா?

ஒரு பிரதமர் வந்து இப்போது இந்த இடத்தில் கூட்டம் போடுகிறார் என்றால், வசந்த கார்த்திகேயனும் சொன்னார். ஏற்கனவே 2019-இல் தேர்தல் பிரச்சாரத்திற்கு இந்த இடத்தை நாங்கள் வாங்கி, கூட்டம் போடுவதற்கு அனுமதி வாங்கி நடத்தினோம் என்றார். இப்போது அதே இடத்தில் திரும்பவும் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி வாங்கி நில உரிமையாளர்களிடத்தில் அனுமதியினை பெற்று இப்போது கூட்டம் நடத்துகிறோம் என்று சொன்னார். பக்கத்தில் இருக்கும் கட்டடம் எல்லாம்கூட அப்போது காலியாக இருந்தது. இப்போது அங்கு எல்லாம் கட்டடங்கள் வந்து விட்டது என்று சொன்னார்கள்.

எனவே ஒரு நிலத்தின் பயன்பாடு என்பது வேறு ஒருவருக்கு சொந்தமாக இருக்கிறபோது, ஒரு பிரதமர் வந்து அங்கு அடிக்கல் நாட்டுவிட்டு வந்துவிட முடியுமா? நில ஆர்ஜிதம் செய்யப்படாத ஒரு இடத்தில் பிரதமர் வந்து அடிக்கல் நாட்டினார் என்றால், பிரதமர் எவ்வளவு பெரிய தவறு இழைத்தவராக ஆகிவிடுகிறார். அல்லது பிரதமரை அங்கு அழைத்து வந்த எடப்பாடி பழனிசாமி ஒரு மிகப்பெரிய குற்றவாளியாக ஆகிறார்.

### ஒன்றிய நிதிநிலை அறிக்கை கூறிய பொய்!

இதில் உண்மை என்னவென்றால், அன்றைக்கு அந்த இடத்தை பொறுத்தவரை 2022 ஏக்கர் நிலம் அரசாங்கம் நில ஆர்ஜிதம் செய்து ஒன்றிய அரசுக்கு ஒப்படைக்கிறோம். அப்போது அந்த அடிக்கல் நாட்டிவிட்டு சென்றவுடன் ஒன்றிய அரசின் அதிகாரிகள் மதுரை ஆட்சியருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார்கள். உங்கள் ஆவணங்களை எல்லாம் - நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட ஆவணங்களை எல்லாம் டெல்லிக்கு அனுப்புங்கள் என்றார்கள். உடனடியாக, 2020 நவம்பர் 3-ஆம் தேதி அந்த ஆவணங்கள் எல்லாம் டெல்லிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆனால், 2023-ஆம் ஆண்டு நிர்மலா சீதாராமன் பாராளுமன்றத்தில் சொல்லுகிறார், "நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. அதனால்தான் இந்த மருத்துவமனை கட்டுவதில் தாமதம்" என்று சொல்கிறார். நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நிலஆர்ஜிதம் செய்யப்படவில்லை. அதனால்தான் இந்த மருத்துவமனை கட்டுவதில் தாமதம் என்று. இந்தியாவின் மிக உயர்ந்த பொறுப்பில் இருக்கிற நிதியமைச்சர் இவ்வளவு பெரிய பொய்யை பாராளுமன்றத்தில் சொல்கிறார்கள். இந்த செய்தியை ஏன் இங்கு சொல்கிறேன் என்றால், ஒன்றிய அரசாங்கம் இணைத்து ஒரு மருத்துவமனையை ஐந்தாண்டுகள் ஆகியும் இன்னும் கட்டவில்லை. ஆனால் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பதினைந்தே மாதங்களில் 1000 படுக்கை வசதிகளுடன் கூடிய ஒரு பிரம்மாண்ட மருத்துவமனையை சென்னையில் ஏற்படுத்தினார். அது மட்டுமல்ல ரூ.220 கோடி செலவில் தென்னகம் பயன்பெறுகிற வகையில் மதுரையில் ஓர் மிகப் பெரிய நூலகம், 4 லட்சம் புத்தகங்கள் இடம் பெற்று பெருமை சேர்க்கும் வகையில் 'கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம்' என்று பெயரிட்டு அதை திறந்துவைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல 'ஏறுதழுவுதல் அரங்கம்' என்று மிகச் சிறப்பாக கட்டப்பட்டு, அதை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள்.

அதேபோல் முதலமைச்சர் அவர்கள் முட்டுக்காட்டு பகுதியில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் 'கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு அரங்கம்' என்று அமைத்திருக்கிறார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவிருந்த போது, சென்னையில் 'டைடல் பார்க்கை' பிரதமராக இருந்த வாஜ்பாய் அவர்களை வைத்து திறந்து வைத்தார்கள். அதற்கு பிறகு தகவல் தொழில்நுட்பம் தமிழ்நாட்டில் எந்தளவுக்கு வளர்ச்சி அடைந்தது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அதற்குப் பிறகு கோவையில் 'டைடல் பார்க்' வந்தாலும், இப்போது கள்ளக்குறிச்சிக்கு அருகில் விழுப்புரத்தில் ரூ.31 கோடி ரூபாய் செலவில், ஓர் மினி டைடல் பார்க் அமைப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று அடிக்கல் நாட்டியுள்ளார்.

இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டதைப் போல, இந்தியாவுக்கே வழிக்காட்டக்கூடிய ஓர் அரசை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்திய வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றில்கூட இல்லாத வகையில் மாதந்தோறும் மகளிருக்கு ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு கோடியே 15 லட்சத்து 16 ஆயிரத்து 292 குடும்பங்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படுகிறது.

பதினைந்து நாட்களுக்கு முன்னால் தொகுதி வாரியாக கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் இயக்க முன்னணித் தலைவர்களையெல்லாம் அழைத்து தேர்தல் நேரத்தில் என்னென்னப் பணிகளையெல்லாம் ஆற்றிட வேண்டும் என்று கேட்ட நேரத்தில் அவர்களே சொன்னது, கலைஞர் உரிமைத் தொகை. உங்களது மாவட்டங்களில் இன்னமும் விடுபட்டு இருந்தால், தகுந்த ஆதாரங்களோடு விண்ணப்பித்தால், அந்தத் தொகை கிடைக்காதவர்களுக்கு பெற்றுத் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். தேர்தல் அறிக்கையில் சொன்ன அத்தனை விஷயங்களையும் முதலமைச்சர் அவர்கள் நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

### விடியல் பயணம் – மகளிர் இலவச பயணம்!

கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் உரையாற்றிய முதலமைச்சர் அவர்கள், மகளிருக்கு இலவச பேருந்து பயணம் கொண்டு வருவதற்கு முன்பு பொதுப் போக்குவரத்து பயணம் என்பது 40 சதவிகிதம் இருந்தது. விடியல் பயணம் - மகளிருக்கு இலவச பயணம் என்று அறிவித்தபிறகு அது 65 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் இதுவரை ரூ.445 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டதையும், அதற்காக ரூ.2,500 கோடி ரூபாயும் மானியம் வழங்கப்பட்டுள்ளதையும் மகிழ்ச்சியோடு குறிப்பிட்டார்கள்.

அதேபோல் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் மகத்தானத் திட்டங்களில் ஒன்று வரலாற்று பெருமைவாய்ந்த காலை உணவுத் திட்டம். சென்னை மாநகரத் தலைவராக இருந்த சர்.பிட்டி தியாகராயர் அவர்கள் ஏழை, எளிய குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வருகிறபோது அவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தத் திட்டம்தான் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மதிய உணவுத்திட்டத்தை விரிவாக்கம் செய்தார்கள். அவருக்குப் பிறகு எம்.ஜி.ஆர். அவர்கள் அத்திட்டத்தை சத்துணவுத் திட்டமாக தமிழ்நாடு முழுவதும் ஏழை, எளிய குழந்தைகளுக்கு மாற்றினார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வாரத்திற்கு 5 முட்டைகளும், முட்டைகள் சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப் பழத்துடன் கூடிய வகையில் சத்துணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்தார்கள். இப்போது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் உலகிலேயே இல்லாத அளவிற்கு காலை உணவுத்திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 16 லட்சம் மாணவர்கள் பயனடைகிற வகையில், 31,008 தொடக்கப் பள்ளிகளில் ஆண்டுக்கு ரூ.500 கோடி ரூபாய் செலவில் இத்திட்டத்தை செயல்படுத்தியுள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்த நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்ததைப் போன்றே 13 லட்சத்து 12 ஆயிரம் குடும்பங்களுக்கு நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. ஒரு லட்சம் பேருக்கு கூட்டுறவு கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இப்படி ஏராளமானத் திட்டங்களை செயல்படுத்திக்கொடிண்ருக்கிறார்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரில் 'புதுமைப்பெண் திட்டம்', புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் 6ஆம் வகுப்பு முதல் 12 வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று, இளங்கலைப் படிக்கும் அரசு மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை அது 3 ஆண்டுகளில் ரூ.36 ஆயிரமும், பொறியியல் பயிலும் மாணவிகளுக்கு 4 ஆண்டுகளில் 48 ஆயிரமும், மருத்துவம் படிக்கும் மாணவிகளுக்கு 5 ஆண்டுகளில் 60 ஆயிரமும், தொழிற்கல்வி படிப்பவர்களுக்கு 24 ஆயிரமும் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 4,81,075 மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகையும், படித்த இளைஞர்கள் பயன்பெறும் வகையில் 'நான் முதல்வன் திட்டம்' – இளைஞர்கள் திறன் பயிற்சி பெறுகிறத் திட்டம் தொடங்கும்போது இத்திட்டத்தின் மூலம் ஆண்டிற்கு 10 லட்சம் மாணவர்கள் பயனடைவார்கள் என்று அரசு உயரதிகாரிகள் குறிப்பிட்டார்கள். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் 28 லட்சம் இளைஞர்கள் பயனடைந்திருப்பதாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்கள். தமிழக வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு, மக்களுடன் முதல்வர் திட்டத்தை பொதுமக்களிடமிருந்து அனைத்துத் துறைகளிலும் மனுக்களைப் பெற்று, அதற்கு தீர்வுகாணுகின்ற திட்டம். சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கில் 3.50 லட்சம் மனுக்களுக்குத் இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தீர்வுக் கண்டிருக்கிறார்கள்.

### மக்களைத் தேடி மருத்துவத் திட்டம்!

அதேபோல் மருத்துவத்துறையில் 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம் சாமணப்பள்ளியில் மக்களைத் தேடி மருத்துவம் என்றதொரு மகத்தானத் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து 1 கோடி பேரை இத்திட்டம் சென்றடைந்தால் மகிழ்ச்சி அடைவேன் என்று குறிப்பிட்டார்கள். முதலாவது பயனாளிக்கும் தொடங்கிவைத்து, 50 லட்சம் பயனாளிக்கும் மருந்துபெட்டகத்தை தந்தார்கள். 60 லட்சம் பயனாளி மதுரையில் இருக்கிற பயனாளிக்கும், 75 லட்சமாவது பயனாளி சேலம் அருகே இருக்கிற மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதியில் ஒரு பயனாளிக்கும் மருந்துப் பெட்டகத்தை வழங்கினோம். திருச்சி அருகே சன்னாசிப்பட்டி 1 கோடியே ஓராவது பயனாளிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருந்துப்பெட்டகத்தை வழங்கினார்கள். கடைக்கோடி மனிதருக்கும் மருத்துவ வசதி கிடைக்க வேண்டும் என்ற வகையில் நீரிழிவு, இரத்த அழுத்தம், பிசியோதெரபி, பாலியேட்டிவ் கேர், டயாலிசிஸ் போன்றவற்றிற்கு இதுவரை 1 கோடியே 72 ஆயிரத்து 332 நோயாளிகளுக்கு வீடுகளுக்கேத் தேடிச் சென்று கிசிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் உலகிலேயே ஒரு மகத்தானத் திட்டமாகும்.

கியூபா போன்ற நாடுகள் மருத்துவத்தில் சிறந்து விளங்கிக்கொண்டிருந்தாலும், மக்கள் மருத்துவமனைக்குப் போனால்தான் சிறந்த மருத்துவம் கிடைக்கும். ஆனால் மருத்துவர்களே வீடுகளுக்குத் தேடி சென்று மருத்துவம் பார்ப்பது உலகிலேயே தமிழ்நாட்டில்தான். 'இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் - 48' திட்டத்தை மேல்மருவத்தூரில் 2021ஆம் ஆண்டு டிச.18 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டில் எங்கே எல்லாம் அதிகமான விபத்துகள் நடக்கிற இடங்கள் என்று 500 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, 500 இடங்களில் இருக்கிற 690 மருத்துவமனைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. விபத்துக்குள்ளான முதல் 24 மணி நேரத்தில் அரசின் சார்பில் ரூ.1 லட்சம் ரூபாய் இலவசமாக தந்து உயிரைக் காப்பது. இதன்மூலம் 2 லட்சத்து 20 ஆயிரத்து 302 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது. இத்திட்டம் ஓராண்டு நிறைவில், அதற்காக செலவழிக்கப்பட்ட தொகை ரூ.191 கோடியே 63 லட்சத்து 14 ஆயிரத்து 113 தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

### கலைஞரின் வரும் முன் காப்போம் திட்டம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவிருந்தபோது உலகிலேயே முன்மாதிரியான வருமுன் காப்போம் என்றத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க.வினர் வருமுன் காப்போம் திட்டத்திற்கு மூடுவிழா நடத்தினார்கள். ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள வால்பாறை - வாழப்பாடியில் தான் அந்தத் திட்டத்தை 'கலைஞரின் வருமுன் காப்போம்' என்று தொடங்கி வைத்து ஆண்டிற்கு 1,250 மருத்துவ முகாம்கள் என்று செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒன்றியத்திற்கு 3 முகாம்களும், சென்னை நீங்கலாக, மாநகராட்சிக்கு 4 முகாம்களும், சென்னையைப் பொறுத்தவரை 15 முகாம்கள் நடத்தப்படுகிறது.

விவசாயப்பெருங்குடிமக்கள் இப்பகுதியில் வசிப்பதால் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவிருந்தபோது இலவச மின்சாரம் வழங்கினார்கள். இப்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1 லட்சத்து 65 ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியிருக்கிறார்கள். இந்த முதலமைச்சர் தான் இந்தியாவின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு, இந்தியாவின் பெருமைகளை மீட்பதற்கு, பாசிசத்தை வீழ்த்துவதற்கு, இந்தியா கூட்டணி வெற்றிபெறுவதற்கு இன்றைக்கு அயராது உழைத்துக்கொண்டிருக்கிறார். இந்தியா முழுவதும் ஸ்டாலினின் குரல் வெல்லட்டும். இந்த சிறப்பான மாநாட்டுக்கு நிகரான பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்த வசந்தம் கார்த்திகேயன், சிவலிங்கம் அவர்களுக்கும் மகிழ்ச்சி கலந்த பாராட்டுக்கள். நன்றி வணக்கம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (19.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கு.செல்வப்பெருந்தகை, காங்கிரஸ் கட்சியின் சட்ட மன்றக் கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள எஸ். ராஜேஷ்குமார் ஆகியோர் சந்தித்தனர். அப்போது முதல்வர் அவர்கள் தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.2.2024) அவரது இல்லத்தில், மயிலாடுதுறை மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கொக்கரக்கோ வை. சௌமியன், அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகன் சௌ.சர்வோதயன் (எ) பாலாஜி, திருமதி சு.தாட்சாயிணி ஆகியோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட கழகத்தினர் விருப்ப மனு!





நாடாளுமன்றத் தேர்தலில் கழக வேட்பாளராகப் போட்டியிட விரும்பும் கழகத் தோழர்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் விநியோகம், சென்னை–அண்ணா அறிவாலயத்திலுள்ள தலைமைக் கழக அலுவலகத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. கழகத்தினர் விண்ணப்பப் படிவங்களுக்கு உரிய கட்டணத்தை தலைமைக் கழகத்தில் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. கழகத்தினருக்கு விண்ணப்பங்களை, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி வழங்கினார். தலைமைக் கழக மேலாளர் ஆர்.பத்மநாபன், தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.




ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க 5 வளாகத்தில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு வீரர்கள் பயன்பாட்டிற்காக சென்னை, செங்கல்பட்டு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் ரூ. 44 கோடியே 8 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கட்டடங்களையும், பல்வேறு இணையதள சேவைகளையும் துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ‘தமிழ்த் தாத்தா’
# உ.வே.சா.வின் தமிழ்த் தொண்டைப் போற்றி வணங்குகிறேன்!
### 170-வது பிறந்த நாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, பிப். 21-

‘தமிழ்த்தாத்தா’ உ.வே.சா அவர்களின் 170ஆவது பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலை தளப் பதிவில், நீடுபுகழ் உ.வே.சா. வின் தமிழ்த் தொண்டைப் போற்றி வணங்குகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:-



அழியக் கிடந்த பழந்தமிழ் இலக்கியங்களை எல்லாம் அச்சிலேற்றி, அழகிய நடையில் அவற்றுக்கு உரையும் எழுதி, தமிழுக்குத் தாம் தந்த பங்களிப்பினால் ‘தமிழ்த்தாத்தா’ என்று நிலைத்துவிட்ட நீடுபுகழ் உ.வே.சா அவர்களின் பிறந்தநாளில் அவரது தமிழ்த் தொண்டைப் போற்றி வணங்குகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### பூண்டி கே.கலைவாணன் தலைமை - அமைச்சர் எஸ்.ரகுபதி - என்.கௌதமன் - ஏ.கே.எஸ்.விஜயன் - உ.மதிவாணன் முன்னிலை!
# திருவாரூரில் உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் பரப்புரைக் கூட்டம்!
## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் சிறப்புரை!

திருவாரூர், பிப்.21-

திருவாரூரில் நடைபெற்ற உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் பாசிசம் வீழட்டும் இந்தியா வெல்லட்டும் நாகை நாடாளுமன்ற தேர்தல் முன்னோட்ட கூட்டத்தில் கூட்டம் நடைபெற்ற காட்டூர் கலைஞர் கோட்டம் மக்கள் வெள்ளத்தில் நிரம்பி, தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதியின் வழிகாட்டுதலின்படி இந்தியா வெல்லும் என நிரூபிக்கும் வகையில் அமைந்தது. பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்த அந்த கூட்டத்தில் ,குறிப்பாக ஆயிரக்கணக்கில் திரண்டிருந்த பெண்கள் கூட்டம் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் சீரிய திட்டங்களுக்கு நன்றிக்கடனாக, வரும் தேர்தலில் வாக்களிக்க தயாராக இருந்ததை தெளிவாக எடுத்துரைத்தது.

காட்டூர் கலைஞர் கோட்டத்தில் உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் தேர்தல் முன்னோட்ட கூட்டம் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, நாகை மாவட்ட செயலாளர் என்.கௌதமன், மாநில விவசாய அணி செயலாளர், தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், முன்னாள் அமைச்சர், தாட்கோ தலைவர் உ. மதிவாணன் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கூட்டத்தில் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் உரையாற்றிய அனைவரும் ஒன்றிய பி.ஜே.பி. அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை பட்டியலிட்டு, தமிழ்நாட்டில் முதல்வர் தளபதி அவர்கள் நிறைவேற்றிக்கொண்டிருக்கும் மக்கள் நலனுக்கான திட்டங்களை உலக அரங்கே உற்றுநோக்கி பாராட்டிக் கொண்டிருக்கும் சிறப்புக்களையும் இந்தியாவின் பிற மாநிலங்கள் தமிழ்நாட்டின் திட்டங்களை பின்பற்றுவதையும் எடுத்துக்கூறினர்.

இந்த கூட்டத்தில் கொரடாச்சேரி ஒன்றிய செயலாளர் சேகர் கலியபெருமாள் வரவேற்புரையாற்ற, மாநில இளைஞர் அணி துணை செயலாளர்.நா.இளையராஜா , தேர்தல் பொறுப்பாளர்கள் பழஞ்சூர் கே.செல்வம், ஜெய.பிரகாஷ் உள்ளிட்டோர் உரைநிகழ்த்தினர். கூட்டத்தில் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். அ.அசோகன், ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா, மாவட்ட அவைத் தலைவர் க.தன்ராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ப.ஆடலரசன், ஆர்.எஸ்.பாண்டியன், டி. செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ். கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், மு. வெங்கடேசன், ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், கோ.தெட்சிணாமூர்த்தி, எஸ்.ஜோதிராமன், ஆர். பாலச்சந்திரன், பால.ஞானவேல், பா.பிரபாகரன், ஐ. வி.குமரேசன், இரா.மனோகரன், ப.பிரகாஷ், வே. மனோகரன், எஸ்.எம்.செல்வராஜ், நகர செயலாளர்கள் வாரை.எஸ்.பிரகாஷ், எஸ். வி.பக்கிரிசாமி, பேரூர் செயலாளர்கள் வ.பக்கிரிசாமி, பா.சிவநேசன், சிவ.தியாகு, ஏ.கே.தமிழ்சேரன், கே. கலைவேந்தன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் இரா. சங்கர், பொதுக்குழு உறுப்பினர்கள், கே.எஸ்.எஸ்.தியாகபாரி, டி.செந்தில், சி.கலியபெருமாள், பிரிதிவிராஜன், ஆர்.முருகேசன், செல்வா ஜெயதேவன், இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எஸ். குமார் உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் கீழ்வேளூர் சட்டமன்ற பார்வையாளர் கே.ஆர். என்.போஸ், நாகை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ஜெயபிரகாஷ், மாநில விவசாய அணி துணை தலைவர் எஸ்.கே.வேதரத்தினம் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் க. ராஜேந்திரன், ப.கோவிந்தராஜன், இல.மேகநாதன், க.மறைமலை, மாவட்ட கழக பொருளாளர் முலோகநாதன், துணை செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், கற்பகம் , ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ, செங்குட்டுவன், கே.பழனியப்பன், தாமஸ் ஆல்வா எடிசன். மகா. குமார், சோ.பா. மலர்வண்ணன், சிக்கல் என்.ஆனந்த், என். சதாசிவம், உதயம் வே. முருகையன், நகர செயலாளர்கள் மா.மீ. புகழேந்தி, எம்.ஆர். செந்தில்குமார், பேரூர் செயலாளர்கள் மரியசார்லஸ், சி.சுப்பிரமணியன், முகமது சுல்தான், பொதுக்குழு உறுப்பினர்கள் எம். பாண்டியன் எஸ்.பி.டி.சார்லஸ், கோ.சிவக்குமார், இல.பழனியப்பன், எல். எஸ்.ஈ பழனியப்பன், எஸ். பன்னீர்செல்வம், உமா. செந்தாமரை மற்றும் நாகை திருவாரூர் மாவட்ட வாக்குச்சாவடி முகவர்கள், பூத் கமிட்டி நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், வார்டு மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள் கழக முன்னோடிகள், உடன்பிறப்புக்கள், பொது மக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் பெருந்திரளாக பங்கேற்றனர். நாகை நகர கழக செயலாளர் இராமாரிமுத்து முடிவில் நன்றி கூறினார்.

### ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ பொதுக்கூட்டங்கள் எழுச்சியுடன் நடந்தேறியுள்ளன!
# கடமை உணர்வோடு ஓய்வின்றி உழைப்போம்! ‘இந்தியா’ கூட்டணியை வெற்றிபெறச் செய்வோம்!
## சமூக வலைதளப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, பிப்.21 -**

**தமிழ் நாடெங்கும் ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ பொதுக்கூட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளதையொட்டி, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், “நாடாளுமன்றத் தேர்தலில் கடமையுணர்வோடு ஓய்வின்றி உழைப்போம்! ‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெறச் செய்வோம்!” எனச் சூளு ரைத்துள்ளார்.**

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

**“நாற்பதும் நமதே! நாடும் நமதே! என்பதை உறுதிசெய்யும் விதமாக மிக எழுச்சியோடு பிரமாண்டமாகத் தமிழ்நாடெங்கும் நடந்தேறியுள்ளன ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ பொதுக்கூட்டங்கள்!**


**வெற்றிகரமாக இந்தக் கூட்டங்களை ஒருங்கிணைத்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் - கழக முன்னணியினர் என அனைவர்க்கும் பாராட்டுகள்! நன்றி!**

2024 நாடாளுமன்றத் தேர்தல் - வெற்றியை நோக்கிய நம் பயணத்தில் அடுத்த நூறு நாட்களும் மிக முக்கியமானவை. கடமையுணர்வோடு ஓய்வின்றி உழைப்போம்; ‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெறச் செய்வோம்!”

இவ்வாறு சமூக வலைதளப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெல்லை மஸ்தான்
### பிப்ரவரி 21 (1984)



தொடக்க காலம் முதலே அய்யா – அண்ணா – தலைவர் கலைஞர் வழியில் தமிழர் நலம் நாடி உழைத்த தோழர் மஸ்தான் காட்சிக்கு எளியவர்; கழகமே உயிர் மூச்சென வாழ்ந்தவர். கழகப் பணிகளில் படிப்படியாக முன்னேறியவர்.

நெல்லை நகரச் செயலாளர், நெல்லை மாவட்ட துணைச் செயலாளர் என பல பொறுப்புகளை வகித்து இறுதியில் நெல்லை மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றினார்.

கழகப் பணியாற்றும்போதே தொழிற் சங்கப் பணிகளிலும் தீவிரம் காட்டியவர். தொ.மு.ச. பேரவைச் செயலாளராகவும் செயல்பட்டவர்.

“நெல்லைச் சீமையில் கழகத்திற்குக் கிடைத்த வைரமணி விளக்கு என் அன்புத் தம்பி மஸ்தான்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி - கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் அற்புதமான திட்டத்தை

# வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மண்ணில் துவக்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்!

## விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் திட்டத்தைத் தொடங்கி வைத்து – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமித உரை!

**மதுரை, பிப். 21 -**

**முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, 'கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்' (Kalaignar Sports Kits) வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர் பேசுகையில்,**

**"இந்த அற்புதமான திட்டத்தை வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மண்ணில் துவக்கி வைப்பதில், மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். டாக்டர் கலைஞர் நூற்றாண்டைச் சிறப்பிக்கும் வகையில், தமிழ்நாட்டிலுள்ள 12 ஆயிரத்து 620 கிராம ஊராட்சிகளுக்கும் 86 கோடி ரூபாய் செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட உள்ளது" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு : -

ஒவ்வொரு ஊராட்சிக்கும் 33 வகையான விளையாட்டு உபகரணங்கள் வழங்க இருக்கின்றோம். கலைஞரின் நூற்றாண்டில் அவரின் பெயரிலேயே இந்தத் திட்டத்தைத் துவங்கி வைப்பதில் நாங்கள் மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம். தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறை என்பது நகரம் முதல் கிராமம் வரை பறந்து விரிந்து இருக்கவேண்டும் என்று பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகின்றோம்.

கிராமப்புற விளையாட்டுத் திறமையாளர்களைக் கண்டறியத்தான் `முதலமைச்சர் கோப்பை' விளையாட்டுப் போட்டிகளை, சென்ற வருடம் சிறப்பாக நடத்தி முடித்தோம். மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள், அதில் கலந்துகொண்டார்கள். ஏழை எளிய கிராமப்புற விளையாட்டு வீரர்களுக்கு உதவத்தான் `தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேஷன்' என்ற திட்டத்தைத் தொடங்கி, பல உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அதன் தொடர்ச்சியாக, இந்த `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்'டை உங்களுக்கு வழங்குகின்றோம்.

படிப்படியாக தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு ஊராட்சிக்கும் இந்தத் திட்டம் போய்ச் சேர இருக்கின்றது. இந்த விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி, கிராமங்களில் இருக்கக்கூடிய இளைஞர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும் புத்துணர்ச்சியுடனும் இருக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

**முத்தமிழறிஞர் கலைஞரின் பெயர்**

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பெயரால் எத்தனையோ திட்டங்கள் இருந்தாலும், நம் விளையாட்டுத் துறையின் சார்பாக முதன்முறையாக



அவரின் பெயரால் ஒரு விளையாட்டுத் துறை திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்பது அந்தத் துறையின் அமைச்சர் என்கின்ற முறையில் நான் மிகுந்த பெருமை அடைகிறேன்.

கலைஞர் அவர்களுக்கு அரசியல் வாதி, இலக்கியவாதி, பேச்சாளர், எழுத்தாளர் எனப் பல முகங்கள் உண்டு. ஆனால், விளையாட்டிற்கும் கலைஞருக்கும் என்ன தொடர்பு ஏன் அவருடைய பெயரை இந்தத் திட்டத்திற்கு வைத்திருக்கிறீர்கள் என்று உங்களில் சில பேர் நினைக்கலாம். கலைஞர் அவர்கள் தன் சிறு வயதிலேயே களத்தில் இறங்கி, எல்லா விளை யாட்டுகளையும் விளையாடியவர். அதன் பிறகுதான் அரசியலுக்கு வந்து, ஆடுகளத்திற்குள் நுழையாமல் தவிர்த்து வந்தார்.

ஆனால், கலைஞர் அவர்கள், விளையாட்டுப் போட்டிகளில் ஒரு ஆர்வம்மிக்க ரசிகர். அது கிரிக்கெட் போட்டியாக இருந்தாலும் சரி, ஃபுட்பால் போட்டியாக இருந்தாலும் சரி, நெருக்கடியான நேரத்திற்கு இடையிலும் அந்தப் போட்டிகளை, தொலைக்காட்சிகளில் பார்த்து ரசிப்பார். ஆனால், அவற்றை எல்லாம் விட அவர் பெயரை இந்தத் திட்டத்திற்கு சூட்டிய காரணம் ஒரு விளையாட்டு வீரனுக்கு இருக்கவேண்டிய அத்தனை குணங்களும் திறமைகளும் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இருந்தன. அது தான் அவருடைய சிறப்பு.

**விளையாட்டு வீரனுக்கான திறமைகள்**

ஒரு விளையாட்டு வீரனுக்கு என்னென்ன திறமைகள் வேண்டும்? நல்ல புத்துணர்ச்சி வேண்டும், நல்ல கூர்மையான நினைவாற்றல் வேண்டும், தோல்வியிலும் துவண்டு விடாத மன திடம் வேண்டும் இதைவிட முக்கியம் நல்ல டீம் ஒர்க் வேண்டும்... இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இந்தத் திறமைகள் அனைத்தும் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரிடம் இருந்தன. கலைஞரின் ஞாபக சக்திக்கு நினைவாற்றலுக்கு நிகரான எனர்ஜியை நாம் நினைத்துகூடப் பார்க்க முடியாது.

வசதிகள் எதுவும் இல்லாத அந்தக் காலத்திலேயே, தமிழ்நாடு முழுவதும் கிராமம் கிராமமாக சுற்றுப்பயணம் செய்து, கழகத்தை வளர்த்தவர்தான் டாக்டர் கலைஞர். ஒரே நேரத்தில் அரசியலிலும் சினிமாவிலும் இலக்கியத்திலும் கொடிகட்டி பறந்திருக்கிறார் என்றால், அவர் எவ்வளவு உழைத்திருக்க வேண்டும் என்று நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

கலைஞர் அவர்களுக்குள்ள அந்த எனர்ஜி, ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் இருக்க வேண்டும். ஓயாமல் பயிற்சி எடுக்க வேண்டும். சோர்வு என்பதே கூடாது. கடுமையான முறையான பயிற்சிதான் ஒரு விளையாட்டு வீரனை வெற்றி வீரன் ஆக்கும்.

அடுத்து கலைஞரின் கூர்மையான மனம். கலைஞர் அவர்களுக்கு இருக்கின்ற `சார்ப் மைண்ட்' மிக ஆச்சரியமான ஒரு விஷயம். என்ன செய்யப் போகிறோம், அதற்குப் பதிலாக எதிரில் இருப்பவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள். அதற்கு என்ன பதில் சொல்லலாம் என்று முன்கூட்டியே யோசித்துச் செயல்படக் கூடியவர்.

ஒரு விளையாட்டு வீரனுக்கும் அந்தத் திறமை தேவை. நாம் இப்படி விளையாடினால், நம் எதிர் அணி எப்படி விளையாடுவார்கள் என்று கணிக்க வேண்டும். அப்படி அந்த சார்ப் மைண்ட் இருந்தால்தான் விளையாடுகின்ற போட்டிகளில் வெற்றியைப் பெற முடியும்.

**வெற்றி நிச்சயமாக நம்மைத் தேடி வரும்**

அடுத்து கலைஞரின் மன திடம்... தோல்வியாக இருந்தாலும் சரி, வெற்றியாக இருந்தாலும் சரி, இரண்டையும் சரிசமமாகப் பார்க்கக் கூடியவர். கலைஞர் அவர்கள் தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருந்தால், வெற்றி நிச்சயமாக நம்மைத் தேடி வரும் என்ற மன உறுதியுடன் கடைசிவரை கலைஞர் அவர்கள் மக்களுக்காக உழைத்துக்கொண்டே இருந்தார்கள்.

மன உறுதி, ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் இருக்கவேண்டும். கடைசியாக, கலைஞரின் 'டீம் ஒர்க்', கூட்டணி முயற்சி கூட்டு முயற்சி. கலைஞர் அவர்களை மாதிரி ஒரு டீம் ஒர்க் செய்த இன்னொரு நபரை இந்த உலகத்திலேயே பார்க்க முடியாது. கலைஞர் அவர்களை மாதிரியே இப்போது நூற்றாண்டைக் கண்ட அவரின் நெருங்கிய நண்பர் இனமானப் பேராசிரியர் தாத்தா, அவரை மாதிரி எண்ணற்ற போராளிகள், எண்ணற்ற பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், களப்பணியாளர்கள், இளைஞர்கள், என கலைஞரிடம் ஒரு மிகப்பெரிய டீம், டஃபான டீம் இருந்தது.

அந்த டீமை கலைஞர் அவர்கள் நேர்த்தியாக வழிநடத்தினார். கலைஞர் அவர்களுக்குப் பின்னர் நம் முதலமைச்சர் அவர்கள் அந்த டீமை இப்பொழுது சிறப்பாக வழிநடத்தி கொண்டிருக்கின்றார். அதே மாதிரி உங்கள் விளையாட்டிலும் நல்ல டீமை நீங்கள் அமைத்துக் கொள்ளவேண்டும். நல்ல டீம் அமைந்து விட்டாலே, நாம் பாதி வெற்றி பெற்று விட்டோம் என்று அர்த்தம்.

கலைஞர் அவர்களின் பெயரால் வழங்கக்கூடிய விளையாட்டு உபகரணங்களைப் பெறக்கூடிய விளையாட்டு வீரர்களாகிய, உங்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம் கலைஞர் அவர்களுக்கு இருந்த இந்தத் திறமைகளை நீங்களும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது இங்கு வழங்கப்படுகின்ற இந்த விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி, நம் வீரர் வீராங்கனைகள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். சிறந்த திறமையாளர்களை மேலும் ஊக்குவித்து, உலகறிய வைக்க தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் வழிவகை செய்யப்படும் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

**விளையாட்டு அறிவியல் மையம்**

அது மட்டுமல்ல, மதுரை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுக்காக கழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக, சமீபத்தில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் மற்றும் ஜல்லிக்கட்டு அரங்கத்தை 44 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் திறந்து வைத்தார்கள். கேலோ இந்தியா போட்டிகளை மதுரையிலும் நடத்தினோம் மேலும் இன்றைக்கு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக, ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம் திறக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்ட விளையாட்டு அரங்கில் உள்ள விளையாட்டு வசதிகள் மேம்படுத்தப்பட்டு ரூபாய் ஆறு கோடி மதிப்பீட்டில் ஒலிம்பிக் அகாடமி அமைக்கப்பட அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றது.

ஒலிம்பிக் தடகள வீராங்கனை ரேவதி போன்ற விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளின் நீண்ட நாள் கோரிக்கையான செயற்கைத் தடகள ஓடுபாதை 8 கோடி 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மதுரை மாவட்ட விளையாட்டு அரங்கில் அமைக்கப்பட ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு மினி ஸ்டேடியம் அமைக்கப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவித்தார். அதன் அடிப்படையில், மதுரையில் இருக்கக்கூடிய சோழவந்தான் சட்டமன்றத் தொகுதியில் ரூபாய் மூன்று கோடி மதிப்பில் விளையாட்டு அரங்கம் அமைக்கின்ற பணி நடைபெற்று வருகின்றது.

விரைவில், அந்த விளையாட்டு அரங்கமும் பயன்பாட்டிற்கு வர உள்ளது என்பதை நான் இங்கே கூறுகின்றேன். வெற்றி என்பது சுலபமாகக் கிடைக்காது. நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும் என்று கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். எனவே விளையாட்டுத் துறை மட்டுமல்ல நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள அத்தனை துறைகளிலும் வெல்ல வேண்டும் என்றால், இன்றைய இளம் தலைமுறையினர் அதற்காக உழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

**விளையாட்டை ஊக்குவிக்கின்ற சிறந்த மாநிலம்**

உதாரணத்திற்கு எங்களுடைய துறை கடந்த இரண்டு ஆண்டுகளாக மேற்கொண்டுள்ள பல பணிகளுக்கு பரிசாக, சென்ற மாதம் சி.ஐ.ஏ கான்ஃபிடரேசன் ஆஃப் இந்தியன் இண்டஸ்ட்ரீஸ் என்ற ஓர் அமைப்பு `இந்தியாவிலேயே விளையாட்டை ஊக்குவிக்கின்ற சிறந்த மாநிலம்' என்ற விருதை நம் தமிழ்நாட்டிற்குக் கொடுத்தார்கள்.

ஒரு வாரத்திற்கு முன்பு `தி இந்து' பத்திரிகை குழுமத்திலிருந்து வெளிவரும் `ஸ்போர்ட்ஸ் ஸ்டார்; எங்களைப் பாராட்டி இந்தியாவிலேயே ஒரு மாநிலம் விளையாட்டிற்கு ஊக்கம் கொடுக்கிறது என்றால், அது தமிழ்நாடுதான் என்று `தி பெஸ்ட் ஸ்டேட் ப்ரொமோட்டிங் ஸ்போர்ட்ஸ் என்று நம் தமிழ்நாட்டிற்குக் கொடுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டில்தான் `தேசிய விளையாட்டுப் போட்டிகளை' (`கேலோ இந்தியா கேம்ஸ்') முதன்முதலில் நடத்தினோம். சென்னை மதுரை, கோவை, திருச்சி என பல மாவட்டங்களில் நடத்தினோம். இதில் பதக்க பட்டியலில் பார்த்தீர்களென்றால், வரலாற்றிலேயே முதன்முறையாக தமிழ்நாடு இரண்டாம் இடத்தைப் பிடித்தது, அந்த விளையாட்டு வீரர்கள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துகளை உங்கள் அனைவரின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கே உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் வெங்கடேசன் அவர்கள் மதுரையில் இந்த நிகழ்ச்சியை நடத்துவதற்காக, அவர்களுடைய பாராட்டைத் தெரிவித்திருந்தார். மதுரையில் நடத்துவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அது என்ன காரணம் என்றால், சென்ற வருடம் ஒரு ஐந்து ஆறு மாதங்களுக்கு முன்பு, உங்களின் அமைச்சர் மூர்த்தி அவர்கள் இதே மதுரைக்கு என்னை அழைத்துக் கொண்டு வந்து, கிட்டத்தட்ட 1,360 கிரிக்கெட் டீமை வரவைத்து, அவர்கள் அத்தனை பேருக்கும் கிரிக்கெட் கிட் பரிசாகக் கொடுத்தார். எனவேதான் அவர் கட்சி சார்பாக நிகழ்ச்சி நடத்தினார். நான் என் துறையின் சார்பாக, இதே மதுரையில் இப்படி ஒரு நிகழ்ச்சியை நடத்திக் காட்டுகிறேன் என்று மதுரையில் இதைத் துவங்கி இருக்கின்றோம்.

எனவே வந்திருக்கும் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இளைஞர்கள் உடல் ஆரோக்கியத்துடன் இருந்தால் தான் அந்த நாட்டின் மனிதவளம் சிறந்து விளங்கும். அதற்கு இந்த விளையாட்டு உபகரணங்கள் பெரும் துணையாக இருக்கும். `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் 'பெற்ற அத்தனை ஊராட்சிகளையும் அந்த ஊராட்சிகளின் முகங்களாக உள்ள மாணவர்கள், இளைஞர்கள், விளையாட்டுவீரர்கள், வீராங்கனைகள் உங்கள் அத்தனை பேரையும் வாழ்த்திப் பாராட்டி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

விழாவில் அமைச்சர்கள் பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, பூமிநாதன், வெங்கடேசன், மதுரை மாநகர மேயர் இந்திராணி பொன்வசந்த், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் கூடுதல் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மணிமாறன், இளைஞர் அணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மதுரை மாநகராட்சியின் ஆணையர் தினேஷ்குமார் ஐ.ஏ.எஸ்., கூடுதல் ஆட்சியர் மோனிகா ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் சூரியகலா கலாநிதி, மதுரை கிழக்கு மண்டலக் குழுத் தலைவர் வாசுகி கிருஷ்ண குமார், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், ஒலிம்பிக் போட்டி பங்குபெற்ற தடகள வீராங்கனை ரேவதி, யாதவா மகளிர் கல்லூரி தாளாளர் அருண் மூர்த்தி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

---

# திராவிட மாடல் என்றால் என்ன?

## அன்பில் மகேஸ் பொய்யாமொழி
### (பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்)

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நிதி மற்றும் மனிதவளம் மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் 2024-2025'ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை 19.02.2024 அன்று தாக்கல் செய்தார்.

இந்த நிதிநிலை அறிக்கையை உற்று நோக்கியிருப்பவர்கள் அனைவருக்கும் திராவிட மாடலின் நோக்கம் புரிந்திருக்கும்!

இருப்பினும் சிலர் கண்டும் காணாமல் இருப்பர்! சிலர் அவர்களின் முதலாளிகளுக்கு பயந்துகொண்டு திராவிட மாடல் பற்றி தெரியாது என முழிப்பர்!

ஆனால் இன்னும் சிலர் 'இது கானல் நீர் போல உள்ளது' என்பார்கள். உண்மைதான் அவர்களுக்கு திராவிடம் என்பதே கானல் நீர்தான்!

இவர்களைப் பற்றி தூற்றுவதை விடவும் திராவிட மாடல் என்றால் என்ன? என்பதை விளக்குவதுதான் சரியானதாக இருக்கும்!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு பள்ளிக் கல்வித்துறை வளர்ச்சிக்காக 2021 - 2022'ஆம் நிதியாண்டில் ரூ.32,599.54 கோடி, அதுவே 2022-2023'ஆம் நிதியாண்டில் ரூ.36,985.89 கோடி, 2023-2024'ஆம் நிதியாண்டில் ரூ.40,299 கோடி என உயர்ந்து தற்போதைய 2024-2025'ஆம் நிதியாண்டில் ரூ.44,042 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுதான் திராவிட மாடல்!

இந்திய ஒன்றியமே வியந்து பார்க்கும் 'புதுமைப் பெண்' திட்டத்தால் 2 இலட்சத்து



73 ஆயிரம் மாணவிகள் மாதந்தோறும் 1000 ரூபாயை கல்வி ஊக்கத்தொகையாக பெற்று பயனடைந்து வருகின்றார்கள். இத்திட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் தமிழ்நாட்டில் உயர் கல்வியில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது.

இத்தகைய சிறப்புகளைக் கொண்ட புதுமைப் பெண் திட்டத்தை அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் பயிலும் மாணவிகளும் பயன்பெறும் வகையில் விரிவுப்படுத்தியுள்ளார் முதலமைச்சர் அவர்கள். இதற்காக ரூ.370 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே போல அரசுப் பள்ளிகளில் பயிலும் 6 முதல் 12'ஆம் வகுப்பு மாணவர்கள் உயர் கல்வியில் சேரும் போது மாதம் ரூ.1000 ஊக்கத்தொகை வழங்கும் "தமிழ்ப் புதல்வன்" திட்டத்தையும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். இதுதான் திராவிட மாடல்!

இந்த மகிழ்ச்சியை மாணவர்களோடு கொண்டாட வேண்டும் எனும் விருப்பத்தின்படி சட்டமன்றம் முடிந்த உடனே தாம்பரம் விரைந்தோம். தாம்பரத்தில் உள்ள கிறிஸ்துராஜா அரசு உதவிபெறும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகளைச் சந்தித்து இனிமேல் நீங்களும் பயனாளிகள்தான் எனும் மகிழ்ச்சியான செய்தியை பகிர்ந்துகொண்டோம்.

அதே போல தாம்பரம் நகராட்சி மேல்நிலைப் பள்ளி மாணவச் செல்வங்களிடம் "தமிழ்ப் புதல்வன்" திட்டம் குறித்து எடுத்துரைத்து அவர்களுக்கு இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியை பகிர்ந்துகொண்டோம்.

முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் இயங்கிவரும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் விரிவுப்படுத்தியுள்ளார் முதலமைச்சர் அவர்கள். இப்பள்ளிகளில் பயிலும் 2 இலட்சத்து 50 ஆயிரம் மாணவச் செல்வங்களும், அவர்களின் பெற்றோர்களும் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படவுள்ளது. இதுதான் திராவிட மாடல்!

பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்திற்காக இந்தாண்டும் ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் 15,000 திறன்மிகு வகுப்பறைகள் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படவுள்ளது. இதுதான் திராவிட மாடல்!

இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் செயல்படுத்திட ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

மதுரையை போலவே கோவையிலும் கலைஞர் நூற்றாண்டு நூலகம் கட்டப்படும் என்ற மாபெரும் அறிவிப்பினையும் அறிவித்துள்ளார். இதுதான் திராவிட மாடல்!

அறிவுசார் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும், அறிவார்ந்த தமிழ் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் எனும் நோக்கில் இதுபோன்ற திட்டங்களை அறிவிப்பதோடு அதனை வெற்றிகரமாக செயல்படுத்துவதுதான் திராவிட மாடல் எனலாம்!

நமது தமிழ்நாட்டிற்கு கிடைக்கும் வருவாயில் ஒரு ரூபாய் எப்படி திரட்டப்படுகிறது? என வரவு செலவுத் திட்டம் குறித்த குடிமக்களுக்கான கையேட்டில் குறிப்பிட்டிருந்தார்கள்.

மாநிலத்திற்கு வருவாயாக கிடைக்கும் ஒவ்வொரு ரூபாயிலும் மாநிலத்தின் வரியாக 50.2 சதவிகிதம் மாநிலத்தின் பங்காக உள்ளது! ஒரு ரூபாய் வருவாயில் ஒன்றிய அரசின் பங்கு வெறும் 16.3 சதவிகிதம் மட்டுமே!

பெயரளவிற்கு மட்டுமே மாநிலத்தின் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்யும் இது போன்ற ஒன்றிய அரசை வைத்துக் கொண்டு கல்வி, வாசிப்பு, மாணவர்கள், நூலகங்கள், உயர்கல்வி எண்ணிக்கை என அறிவுத்தளத்தை மேம்படுத்துவதற்காக திட்டங்களை செயல்படுத்துவதுதான் திராவிட மாடல்!

திராவிட மாடல்தான் இந்திய ஒன்றியத்தின் வளர்ச்சிக்கான முன்னோடி மாடலாகவும் அமையும் காலம் வெகு தொலைவில் இல்லை!

# திராவிடப் போராளிகள்

**55** ■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

ஓவியம் : ரவி பேலட்



## சமரசமற்ற போராளி; அன்னை மணியம்மையார்

இகழ்ச்சியையும் அவமானத்தையும் தன் மௌனத்தால் எதிர்கொண்டவர் அன்னை மணியம்மையார். அவரது வாழ்வில் தனக்கென்று எந்த சேமிப்பும் வைத்துக்கொள்ளவில்லை. விலை உயர்ந்த ஆடைகள், ஆபரணங்கள், அணிமணிகள் எதையும் அவர் விரும்பியதில்லை. அவர் வைத்திருந்தது இரண்டே உடைகள்தான், அன்றாடம் குளித்துவிட்டு, தனது துணிகளைத் தானே துவைத்து, உலர வைத்து மடித்து வைத்துக்கொள்வார். அந்த ஒரு மாற்றுடையை வைப்பதற்குத் தேவையான ஒரு துணிப்பைதான் மணியம்மையாரின் பயணப்பையாக இருந்தது.

### அடுப்படியில் இருந்து விடுதலை!

அதைப்போலவே அவர் சுற்றுப்பயணம் செல்லும் இடங்களிலெல்லாம் கழகக் குடும்பத்தினருடைய பெண் பிள்ளைகள் கட்டாயம் படிக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். படித்த பெண்கள் சமையல் செய்வதைப் பெருமையாகப் பேசும் பெற்றோர்களை, அவர் கடுமையாகக் கண்டித்தார்.

ஒரு கழகத் தோழரின் வீட்டில் உணவு அருந்தும்போது, 'ரசம் நன்றாக இருக்கிறது' என்று அம்மையார் கூற, அக்குடும்பத்தினர் எங்கள் மகள் வைத்த தக்காளி ரசம் என்று பெருமையுடன் கூறி, அந்தப் பெண்ணை அறிமுகப்படுத்தினார்கள். "நீ என்ன படிக்கிறாய்?", என்று மணியம்மையார் கேட்க "நான் எம்.ஏ. படித்து இருக்கிறேன்", என்று அந்தப் பெண் சொன்னவுடன், "தக்காளி ரசம் வைப்பதற்கா நீ எம்.ஏ படித்தாய்?", என்று கோபமாகக் கேட்டுவிட்டார்.

இந்நிகழ்ச்சியை மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்கு அம்மையார் அப்பெண்ணைக் கொஞ்சமாவது பாராட்டி இருக்கலாமே என்று நினைக்கத் தோன்றும், ஆனால், ஆழ்ந்து சிந்தித்தால் பெண்களின் கல்வி, பட்டம், திறமை அனைத்தும் அவர்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படாமல், மீண்டும் சமையல்காரியாகவே வைத்திருப்பதால், எழுந்த கோபம் எனப் புரிந்து கொள்ளமுடியும். பெண்கள் அடுப்படியிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்கிற குரலை சமரசம் இல்லாமல் எழுப்பியவர் அன்னை மணியம்மையார்.

சமையல் செய்யத் தகுந்தபடியே தங்கள் பெண்களைத் தயார்படுத்தும் பெற்றோர்களை அவர் கண்டித்தார். "பெற்றோர்கள் தெரியாமல் கல்வி கொடுத்துவிட்டாலும், கல்வி கற்ற பெண்கள் கண்டிப்பாய் சமையல் வேலைக்குப் போகக் கூடாது. சமையல் வேலைக்கும் குடும்ப நிர்வாகத்திற்கும் என்று மாத்திரம், நன்றாய் படித்த பெண்களைப் பயன்படுத்த பெற்றோர்கள் கல்யாணம் செய்வார்களானால் கண்டிப்பாய் படித்த பெண்கள் கல்யாணத்தை மறுத்துவிட வேண்டும். பெற்றோர்கள் கட்டாயப்படுத்தினால் பெண்கள் வீட்டைவிட்டு வெளியேறி விட வேண்டும். நான் படிப்பது அடிமையாகவா அல்லது மென்மையும் விடுதலையும் பெறவா? யோசியுங்கள்! " என்று பெண்களுக்கு ஊக்கத்தைக் கொடுத்தார்.

பெண்களுக்குத் தேவை கல்வி, உழைப்பு, வருமானம் ஆகியவை தரும் தன்னம்பிக்கையும் சுயமரியாதையும்தான் என்று வலியுறுத்திய மணியம்மையார் அழகு, அலங்காரம், நகைப்பித்து இவற்றை ஒழிக்கவேண்டும் என்று முன்வைத்த கருத்துகள் பெண்ணிய வரலாற்றில் இடம்பெற வேண்டியவை.

### குழந்தைகளின் காவலர்

அன்னை மணியம்மையார் குழந்தைகள் மீது மிகுந்த அன்பு கொண்டவர். அதிலும் பெற்றோர் இல்லாத பெண் குழந்தைகளைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும் என்கிற அக்கறை கொண்டவர். தந்தை பெரியார் அவர்களின் துணையுடன் பெற்றோரில்லாத பெண் குழந்தைகளுக்காக திருச்சி பெரியார் மாளிகையில் ஒரு குழந்தைகள் பாதுகாப்பு இல்லத்தைத் தொடங்கினார்.

அதற்கு, 'நாகம் மையார் குழந்தைகள் இல்லம்' என்று பெயரிட்டார். அங்கு வளர்க்கப்பட்ட குழந்தைகளுக்கு பெரியாரும் அன்னை மணியம்மையாருமே பெற்றோராக இருந்தனர். அக்குழந்தைகளின் பெயர்கள் E.V.R.M.அழகுமணி, E.V.RM.அருமைக்கண்ணு, E.V.R.M.வைக்கம் என்று முதலெழுத்துக்களை இனிசியலாகப் (INITIALS) பெற்றன. 1959-ஆம் ஆண்டு 13 பெண் குழந்தைகளோடு தொடங்கப்பட்ட அந்த இல்லம் ஆயிரக்கணக்கான பெண் குழந்தைகளை வளர்த்து கல்வி கொடுத்து தன் சொந்தக் காலில் வாழ வழியும் அமைத்தது. அன்னை மணியம்மையார் அந்தக் குழந்தைகள் மீது பேரன்பு கொண்டிருந்தார். தொடக்க காலத்தில் அவரால் வளர்க்கப்பட்ட பெண்குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி அவர்களுக்காக ஒரு வங்கியில் கொஞ்சம் பணமும், காப்பறையில் (LOCKER) தனித்தனியே அக்குழந்தைகளின் பெயர்களை எழுதிய சிறு பெட்டிகளில் ஒரு தங்கச் சங்கிலி, இரண்டு வளையல்கள், தோடுகளும் என அவற்றைப் பாது காத்து வைத்திருந்தார் என்பது நினைக்கும் தோறும் மனம் நெகிழ செய்யும் நினைவாகும்.

**பெண்கள் நகை அணிவதை விரும்பாத அன்னை மணியம்மையார் பெற்றோர் இல்லாமல் தன்னுடைய பாதுகாப்பில் வளர்ந்த பெண் குழந்தைகளின் வாழ்க்கையில் எத்தகைய அக்கறை செலுத்தினார் என்பதற்கு இதுவே சான்று.**

பெண்கள் நகை அணிவதை விரும்பாத அன்னை மணியம்மையார் பெற்றோர் இல்லாமல் தன்னுடைய பாதுகாப்பில் வளர்ந்த பெண் குழந்தைகளின் வாழ்க்கையில் எத்தகைய அக்கறை செலுத்தினார் என்பதற்கு இதுவே சான்று.

### பதவிகளுக்குத் தூரம்

1950-ஆம் ஆண்டு திருச்சி, பொன்மலை திராவிட வாலிபர் கழகத்தின் ஆண்டுவிழா நிகழ்விற்குத் தலைமையேற்கும்படியாக மணியம்மையார் கேட்டுக்கொள்ளப்பட்டார். அந்த விழாவில் பேசிய மணியம்மையார் ,

"கடந்த 17, 18 ஆண்டுகளின் பொது வாழ்வில் எனக்கு எப்போதும் இம்மாதிரி தலைமையேற்க வேண்டும்; மக்களிடத்தில் விளம்பரம் பெற வேண்டும் என்ற ஆசை இருந்ததில்லை. ஏழெட்டு ஆண்டுகளாகப் பொதுமக்களுக்கு என்னை நன்றாகத் தெரிந்திருக்கும், இந்த மாதிரியான நிகழ்ச்சிகளில் இருந்து தப்பித்துக் கொண்டு வந்திருக்கிறேன். ஆனால், இன்றைய நிலையில் எனக்கு இந்த மாதிரியான பொறுப்பு கொடுக்கிறார்கள். எனக்கு அதில் விருப்பமில்லை. நம் இழிவைப் போக்க அல்லும்பகலும் அயராது, காடுமேடு சுற்றி, மக்களுக்குப் பகுத்தறிவு போதித்து வரும் பெரியாரின் பக்கம் இருந்து, அவருக்குத் தொண்டு செய்வதே எனது விருப்பம்.

இம்மாதிரியான பொறுப்புகளைப் பெற்றதால், மிக நல்லவர்களாய் இருந்தவர்கள்கூட இன்று கெட்டுள்ளார்கள். எனக்கு இம்மாதிரியான பதவிகள் கொடுக்கப்பட்டால், பின்னாளில் நானும் எங்கே கெட்டு விடுவேனோ என்று அஞ்சுகிறேன் (விடுதலை-31.03.1950)", என்று பேசியிருந்தார். பதவி, விளம்பரம், ஆகியவற்றை விரும்பாத அவரது பண்பு இவ்வாறு வெளிப்பட்டது.

(வருவார்கள்...)

---

### முட்டாள்தனத்தின் உச்சம்!

திரிபுரா மாநிலத்தில் உள்ள செபாஜிலா உயிரியல் பூங்காவிலிருந்து மேற்குவங்கத்தில் உள்ள சிலிகுரி உயிரியல் பூங்காவிற்கு பிப்ரவரி 12-ம் தேதி 2 சிங்கங்கள் கொண்டு வரப்பட்டன. ஆண் சிங்கத்தின் பெயர் அக்பர், பெண் சிங்கத்தின் பெயர் சீதா. ராமனின் மனைவி பெயரைக் கொண்டுள்ள சீதா சிங்கத்தை, முகலாய மன்னரின் பெயர்கொண்ட அக்பர் சிங்கத்துடன் சேர்த்து வைக்கக்கூடாது எனக் கிளம்பியிருக்கிறது ஓர் இந்துத்துவ அமைப்பு.

இந்த 2 சிங்கங்களையும் ஒரே இடத்தில் அடைப்பது இந்து மதத்தை அவமதிக்கும் செயல், எனவே, தனித்தனியே பிரிக்க வேண்டுமென்று நீதிமன்றத்தில் முறையிட்டிருக்கிறார்கள். ஆறறிவு மனிதர்களை மதத்தால் பிரித்தது போதாதென்று, இப்போது ஐந்தறிவு மிருகங்களையும் பிரிக்க முட்டாள்தனத்தின் உச்சத்திற்கே செல்கிறார்கள் மதவாதிகள் என சமூக வலைத்தளங்களில் விமர்சனங்களால் துளைக்கிறார்கள் மக்கள்.

"சங்கிகள் சிங்கங்களைக்கூட விட்டுவைக்க மாட்டார்கள் போல! அன்று சீதை கற்பை நிரூபிக்க தீயில் குதிக்கச் சொன்ன ராமரைப் போல, இவர்களும் சிங்க சீதையை, தீயில் குதித்து கற்பை நிரூபிக்கச் சொல்லிவிடுவார்களோ" என்று கிண்டலாகவும் பலர் பதிவிட்டிருக்கின்றனர். இத்தகைய அபத்தமான வழக்குகளைத் தொடுப்பவர்களை, பெரும் அபராதத்தோடு கண்டித்து வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற ஆதங்கப் பதிவுகளும் பலரால் கொட்டப்பட்டுள்ளன.

---

### :ப்ளாஷ்பேக்




### அன்பகம் கண்ணகி சிலை!

2001-ஆம் ஆண்டு முதல் 2006-ஆம் ஆண்டு காலகட்டத்தில் நாம் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது அன்றைய ஆட்சியாளர்களால் தமிழர்களின் பண்பாட்டுச் சின்னம், 'கண்ணகி சிலை' சென்னை காமராஜர் சாலையிலிருந்து இரவோடு இரவாக அகற்றப்பட்டது. அந்த செயலைக் கண்டித்து, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார். மேலும், அகற்றப்பட்ட கண்ணகி சிலை போலவே மற்றொரு சிலையை, கழக இளைஞர் அணி அலுவலகமான அன்பகத்தில் நிறுவி, 12-01-2003 அன்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில், இனமானப் பேராசிரியர் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சியில், இனமானப் பேராசிரியருக்கு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு இளைஞர் அணித் துணைச் செயலாளராக இருந்த நான் நினைவுப் பரிசு வழங்கியதை என்னுடைய பொது வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வு.



அசோகன்

**-நாகை அசோகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திருவாரூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


### கருவூலம்

## மேட் இன் தமிழ்நாடு!

**1965-ஆம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் நடந்த 'தமிழர் திருநாள் விழா'வில் கலைஞர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றினார். "வாழ்க்கையில் சலிப்பும் வெறுப்பும் ஏற்பட்டால் திருக்குறள் என்னும் அருமருந்தை உட்கொள்ளுங்கள். உடனடியாக அந்த நோய் நொடிகள் தீரும். அதிக விலையுள்ள மருந்தல்ல, 1330 மாத்திரைகள் கொண்டது. வெளிநாட்டுத் தயாரிப்பில்லை, மேட் இன் தமிழ்நாடுதான்" என்றார் கலைஞர்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 395




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.